# ஆண்டறிக்கை
# 2013

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

தயாரிப்பு:
திட்டமிடல் அலகு,சுகாதார தகவல் பிரிவு
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை
முழு பதிப்புரிமை பெற்றது © 2013

# பொருளடக்கம்

| | |
|---|---|
| **1. கூட்டிணைந்த தகவல்கள்** | |
| 1.1 வரலாற்று விடயங்கள் | 04 |
| 1.2 கூட்டிணைந்த நிர்வாகம் | 05 |
| 1.3 எமது திருப்புமுனை | 06 |
| 1.4 தொலைநோக்கு, செயற்பணி | 10 |
| 1.5 எமது பலம்கள் | 11 |
| 1.6 எமது எதிர்பார்ப்புக்கள் | 12 |
| 1.7 எமது வெற்றிகள் | 13 |
| 1.8 மருத்துவமனைப் பணிக்குழு | 17 |
| 1.9 நிபுணத்துவ மருத்துவர் பிரிவு | 18 |
| 1.10 எமது சேவைகள் | 19 |
| 1.11 எமது இணையத்தளம் | 20 |
| **2. முகாமைத்துவ குழு** | |
| 2.1 தலைவரின் செய்தி | 22 |
| 2.2 பணிப்பாளரின் செய்தி | 24 |
| 2.3 பணிப்பாளர் சபை | 25 |
| 2.4 முகாமைத்துவ குழு | 26 |
| 2.5 நிபுணத்துவ மருத்துவர்கள் | 27 |
| **3. தொழிற்பாட்டுத் தகவல்கள்** | |
| 3.1 செயற்றிறன் சாராம்சம் | 31 |
| 3.2 பகுதி மீளாய்வு | 36 |
| 3.3 துறைசார் மீள்நோக்கு | 37 |
| 3.4 பத்து வருட சாராம்சம | 69 |
| **4. நிதி அறிக்கைகள்** | |
| 4.1 நிதி நிலைமைக் கூற்று | 72 |
| 4.2 நிதி செயற்றிறன் கூற்று | 73 |
| 4.3 நிதி ஓட்டக் கூற்று | 74 |
| 4.4 கணக்குகளுக்கான குறிப்புக்கள் 2013 | 75 |
| 4.5 முக்கிய கணக்கிடல் கொள்கை 2013 | 83 |
| **5. கணக்காய்வு அறிக்கை** | |
| 5.1 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 86 |
| 5.2 கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிட்ட குறைகளை சரிசெய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் | 103 |
| **6. எதிர்கால தொலைநோக்கு** | |
| 6.1 நிறுவனத்தின் செயலாற்றுகையை உயத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய மத்திய கால செயற்பாடுகள். | 117 |

# 1. கூட்டிணைந்த தகவல்கள்



# 1.1 வரலாற்று விடயங்கள்



இலங்கையின் முதலாவது சனாதிபதியாகிய அதிமேதகைய ஜே.ஆர்,ஜயவர்தன அவர்களின் கோரிக்கையின் கொள்ளத்தக்க விலையில் மக்களுக்கு வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது

முன்னாள் மகளிர் விவகார, போதன வைத்தியசாலைகள் அமைச்சராகிய சுனேத்திரா ரணசிங்க அவர்களினால் 1985 பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி பேரில் ஜப்பான் குடியரசினால் இலங்கை பிரசைகளுக்காக வழங்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை, இலங்கை சனாதிபதியினாலும் ஜப்பான் குடியரசை பிரதிநிதித்துவப்படுத்தி மாண்புமிகு இஷிமக்சூ கித்தகாவா அவர்களினாலும் 1984 செப்ரெம்பர் 17 ஆம் திகதியன்று விழாக்கோலமாக திறந்து வைக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தாபிக்கப்பட்டது. ஏனைய அரசாங்க மருத்துவமனைகளுடன் ஒப்பிடும்போது, சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சை சேவைகளை ஏற்றுக் நியமிக்கப்பட்ட மருத்துவமனையின் முதலாவது பணிப்பாளர் சபை, மருத்துவர் ஆர்.பீ.ஜே.பீரிஸ் (தலைவர்), மருத்துவர் டீ.டீ.சமரசிங்க (அமைச்சின் பிரதிநிதி), திரு.எஸ்.பி.சந்திரதாச (நிதி அமைச்சின் பிரதிநிதி), திரு,கே.என்.சொக்சி (சனாதிபதி சட்டத்தரணி), திரு.எம்.ரீ.பெர்ணான்டோ (பட்டயம் பெற்ற கணக்காளர்), மருத்துவர் எஸ்.கே.கப்ரால் (பணிப்பாளர் - மருத்துவ பட்டபின் படிப்பு நிறுவனம்), திரு.கே.டீ.எல்.ரத்னசேன (செயலாளர்) ஆகியோர்களைக் கொண்டிருந்ததோடு, முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டமானது 1985 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

1984 திசெம்பர் 12 ஆம் திகதியன்று உடற்கூறு நிபுணத்துவ மருத்துவர் எச்.எச்.ஆர்.சமரசிங்கவின் பொறுப்பின்கீழ் மருத்துவமனைக்கு முதலாவது நோயாளி அனுமதிக்கப்பட்டதோடு, நிபுணத்துவ அறுவைச் சிகிச்சை மருத்துவர் திரு.கே.யோகேஷ்வரன் நிபுணத்துவ உணர்விழப்பு மருத்துவர் கே.பெரேராவின் ஒத்தாசையுடன் 1985 சனவரி மாதம் 12 ஆம் திகதியன்று முதலாவது அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. 1985 சனவரி 18 ஆம் திகதியன்று மருத்துவமனையில் முதலாவது மகப்பேறு நிபுணத்துவ பெண் நோயியல், மகப்பேறு மருத்துவர் கிங்ஸ்லி த சில்வாவின் மேற்பார்வையில் நிகழ்ந்தது.

இலங்கையில் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகளை விரிவுபடுத்துதல், மருத்துவ பட்டம், பட்டப்பின் படிப்பு உட்பட பிற சுகாதார சேவைகள் போன்றவற்றுக்கான பயிற்சி நிலையமொன்றாக செயற்படும் நோக்கத்தைக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தாபிக்கப்பட்டது. மருத்துவமனை செயற்பாடுகளின் கட்டுப்பாடு முகாமைத்துவ குழுவுக்கு கையளிக்கப் பட்டுள்ளதோடு, பணிப்பாளர் சபையினால் கொள்கை தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. மருத்துவமனையின் செயற்பாட்டுப் பணிகள், மூலதனச் செலவுகள் என்பவற்றுக்கு பொது திறைசேரியின் மானியம் மற்றும் மருத்துவமனையின் வருமானம் என்பன உபயோகப்படுத்தப் படுகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை, 28 வருடங்களுக்கு மேலாக சிகிச்சை சேவையையும் நவீன மருத்துவ வசதிகளையும் வழங்கி முன்னேற்றமடைந்துள்ளது.

# 1.2 கூட்டிணைந்த நிருவாகம்

பொது திறைசேரியின் பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட "பகிரங்க தொழில்முயற்சிகளுக்கான கூட்டிணைந்த நிருவாகத்தின் சிறந்த தொழில்முயற்சி சேவை" என்னும் கைநூல் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டுகின்றது. மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்த இதுவரை நியமிக்கப்பட்ட சபைகள் இந்த கோவையிலுள்ள கோட்பாடுகளை செயற்படுத்தியுள்ளன.

### மருத்துவமனையின் பணிப்பாளர் சபையும் உறுப்பினர்களும்.

அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு (08) உறுப்பினர்களையும் உத்தியோகபூர்வமாக நியமனம் பெறும் மூன்று (03) உறுப்பினர்களையும் இந்த மருத்துவமனை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இந்த சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களும் அத்துடன் நாளாந்த நிருவாக பணிகளுக்காக முகாமைத்துவ குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களும் நடைமுறைப்படுத்தப்படுவது மருத்துவமனை பணிப்பாளரினாலாகும். மருத்துவமனை பணிப்பாளர் சபைக்கு காலத்துக்குக் காலம் தேவையான கட்டளைகளை விடுப்பதற்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை சட்டத்தின் ஒன்பதாம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மருத்துவமனையின் நாளாந்த நிருவாக பணிகளில் ஈடுபடாதுவிட்டாலும், மருத்துவமனையின் தொழிற்பாடு தொடர்பில் கிட்டிய மேற்பார்வை மற்றும் மீள்நோக்கு பணிகளில் ஈடுபடுவர். பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் இருவர் பொருள் மற்றும் சேவை கொள்வனவு சபை உறுப்பினர்களாகவும் ஒருவர் வரவுசெலவுத் திட்ட மற்றும் நடைமுறைப்படுத்தல் குழுவின் உறுப்பினர் ஒருவராகவும் செயலாற்றுகின்றனர். கணக்காய்வு குழுவின் தலைவராக தலைமைவகிப்பது திறைசேரியின் பிரதிநிதியாவார்.

### சபை உறுப்பினர்களின் ஊதியம்

2003-01-01 ஆம் திகதியிடப்பட்டதும் PED 04 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தலைவரினதும் சபை உறுப்பினர்களினதும் ஊதியங்கள் வழங்கப்படுகின்றன.

### முகாமைத்துவ குழு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை சட்டத்துக்கு அமைவாக மருத்துவமனை பணிப்பாளரின் தலைமைத்துவத்தின் கீழ் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதோடு, இதன் ஊடாக மருத்துவமனையின் நாளாந்த பணிகளின் நிருவாகமும் அதேபோன்று பணிப்பாளர் சபைக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கும் பணிகளும் நிறைவேற்றப்படுகின்றது.

### கணக்காய்வுக் குழு

பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள திறைசேரியின் பிரதிநிதியின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த சபையின் நிறைவேற்றுதரமல்லாத வேறு உறுப்பினர்கள் இருவரைக் கொண்டு கணக்காய்வு குழு செயற்படுகின்றது. குழு செயலாளராக மருத்துவமனையின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் செயலாற்றுவார். கணக்காய்வு குழு கூட்டங்களில் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் அழைப்பின் பேரில் அவதானிப்பாளராக கலந்து கொள்வார்.

மருத்துவமனையின் நிதிப் பணிகளின் தொழிற்பாடு மற்றும் செயலாற்றுகை போன்ற விடயங்கள் சம்பந்தமாக மேற்பார்வை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உரிய ஊக்குவிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த கணக்காள்வு குழுவுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

### ஒழுக்கவியல் கோட்பாடும் சிறந்த செயல் வழக்கும்

பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் வழிகாட்டல்களாக பயன்படுத்தப்படுகின்றது.

# 1.3 எமது திருப்புமுனை



மாண்புமிகு ஜனாதிபதி ஜெ.ஆர்.ஜயவர்தன அவர்களால் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது

## 1984

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை இலங்கை சனாதிபதியும் ஜப்பான் குடியரசின் பிரதிநிதி மாண்புமிகு இஷிமக்சூ கித்தகாவா அவர்களும் 1984 செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று விழாக்கோலமாக திறந்து வைத்தனர்.

1984 திசெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையில் முதலாவது நோயாளி அனுமதிக்கப்பட்டார்.

## 1986

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையின் இணை தாதி கல்லூரி 1986 யூலை மாதம் 01 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது.



தேசிய தாதியர் பாடசாலை ஸ்ரீ ஜெயவர்தனபுர

## 1987

மருத்துவர் எச்.எச்.ஆர்.சமரசிங்கவினால் இலங்கையில் முதலாவது எயிட்ஸ் நோயாளி இனங்காணப்பட்டார்.

முதலாவது தொற்று கட்டுப்பாட்டு குழுவு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையில் தாபிக்கப்பட்டது.

## 1990

கண் மருத்துவ பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

லேசர் சிகிச்சை பிரிவும் Visual field analyzer இயந்திரமும் தாபிக்கப்பட்டது.

கண், உளநோய், புற்றுநோய் சிகிச்சையளிப்பு ஆரம்பிக்கப்பட்டது.



அடைபட்ட பகுதியை விட்டு வேறொரு வழியில் குருதி செல்வதற்கான இருதய அறுவை சிகிச்சை

## 1991

மருத்துவர் என்.யூ.குணசிங்கவினால் 1991 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதியன்று முதலாவது அடைபட்ட பகுதியை விட்டு வேறொரு வழியில் குருதி செல்வதற்கான இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

பேராசிரியர் ஜே.ஆர்.குரேயினால் முதலாவது முதுகெலும்பு பக்கவாட்டு வளைவு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

## 1993

குருதி சுத்திகரிப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1993 ஆகஸ்ட் மாதம் உடலினுள் உட்செலுத்தப்பட்ட கெமரா உதவியுடன் பித்தப்பை அகற்றும் அறுவை சிகிச்சை (Laparoscopic Cholecystectomy) முதற்தடவையாகச் செய்யப்பட்டது.



குருதி சுத்திகரிப்புப் பிரிவு

## 1994

எலும்புமுறிவுப் பிரிவும் இருதய நோய் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது

யோனிக்குழாய் மூலம் பரிசோதனை செய்யக்கூடிய Ultrasound Scanner இயந்திரம் இலங்கையில் முதன்முதலாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் தாபிக்கப்பட்டது.



யோனிக்குழாய் மூலம் பரிசோதனை செய்யக்கூடிய இயந்திரம்

## 1995

மருத்துவர் பி.ஏ.குணரத்ன, மருத்துவர் ஏ.டீ.கப்புருகே ஆகியோர் இலங்கையில் முறையாக Arterial Switch சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

.

## 1998

Fiber Optic Bronchoscope இயந்திரமொன்று தாபிக்கப்பட்டது.



மெமோகிரேபி இயந்திரம

## 2000

2000 நவெம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று மருத்துவர் டீ.எல்.பியறிசியினால் முதல் சீறநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

## 2003

Mammography பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.



விசேட நிபுணத்துவ கவனிப்புச் சேவை

## 2006

2006 மார்ச் மாதம் நிபுணத்துவ மருத்துவ கவனிப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவமனையின் மனையிடத்தில் "அரசாங்க மருந்தக" கிளையொன்றும் தாபிக்கப்பட்டது.

## 2007

நரம்பு பிரிவு, நரம்பு அறுவை சிகிச்சை பிரிவு, மூட்டுவாதம் சம்பந்தமான பிரிவும் ஆரம்பிக்கப்பட்டன



அரச ஒசுசல

## 2009

சரும நோய் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

## 2010

நரம்பு அறுவை சிகிச்சைக்கான தீவிர கண்காணிப்பு பிரிவும் உளநோய் ஆலோசனைச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டன




தேசிய விளைவுப் பெருக்க விருது

## 2011

தேசிய விளைவுப்பெருக்க பிரிவின் ஒத்துழைப்புடன் மருத்துவமனையில் S5 கருதுகோள் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது

## 2012

சுகாதார கல்வி பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

மருத்துவமனை 2010/11 தேசிய உற்பத்தித்திறன் விருதினை (சீ பிரிவு) பெற்றுக் கொண்டது)

.


இதயத்துடிப்பின் போது இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாயில் பொருத்தும் சத்திரசிகிச்சை


சுகாதாரக் கல்விப் பல்கலைக்கழக கல்வியியல் நிறுவனம் திறந்து வைத்தல


Opening ceremony of the University College of Health Studies

## 2013

2013 ஆகஸ்ட மாதம் முதலாம் தடமைவயாக திறப்புத் துவார சத்திர சிகிச்சை மூலம் சிறுநீரகம் பொருத்துவதற்கான சிறுநீரகத்தினை பெறுதல்

2013 ஆகஸ்ட மாதம் இலங்கையில் முதலாவது தடவையாக இதயத்துடிப்பின் போதே இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாயில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளல்.

2013 ம் வருடத்தில் ஒக்டோபர் மாதம் வைத்தியக் கல்விப் பல்கலைக்கழக கல்விக் கல்லூரி நிர்மாணிக்கப்பட்டது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ மாணவர்களுக்கு கிளினிக் பயிற்சிகாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவனை பேராசிரியர் பிரிவு ஸ்தாபித்தலும் மற்றும்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இறுதி வருட மருத்துவ மாணவர்களுக்காகக் கிளினிக் பயிற்சி ஆரம்பித்தல

# 1.4 தொலைநோக்கு, செயற்பணி

## தொலைநோக்கு

அரச பொறுப்புடனான முழுமையான
உயர் மருத்துவ சேவை

.

## செயற்பணி

அர்ப்பணிப்புடனும் ஊக்கத்துடனுமான பதவியணியின் ஒத்தாசையுடன் தேசிய மற்றும் சர்வதேச சமூகத்துக்கு சேவைகளை வழங்கும், பட்டம், பட்டப்பின்படிப்பு மற்றும் ஆராய்ச்சிக் கல்வி வசதிகளைக் கொண்டதும், உயர் ஒழுக்கநெறி சார்ந்த தரம் வாய்ந்த நோயாளிகளுக்கான சிறந்த கவனிப்புச் சேவை வழங்கும், கட்டணம் அறவிடும் போதனா மருத்துவமனையாகவும் மூன்றாம்நிலை ஆற்றுப்படுத்தல் நிலையமொன்றாகவும் மாறுதல்

# 1.5 எமது பலங்கள்

- சிறந்த தகைமைகளைக் கொண்ட அனுபவம் மிக்க, செயலாற்றல் கொண்ட அர்ப்பணிப்புடனான மருத்துவ, தாதி மற்றும் தொழினுட்ப பதவியினர்களைக் கொண்ட எமக்கு சுகாதார துறையில் நீண்டகால நற்பெயர் உள்ளது.

- விசேட சுகாதார பணியை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற சட்டமொன்றினால் எமக்கு அதிகாரமும் பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளது. (1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க)

- சகல வசதிகளுடனும் சிறந்த வடிவமைப்புடனும் கூடிய மருத்துவமனைக் கட்டடத்தொகுதி.

- நவீன மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள், உயர் இரசாயனகூட வசதிகளினால் நோயாளிகளுக்கான சிகிச்சை, பதவியினர் பயிற்சி, மருத்துவ கல்வி, ஆராய்ச்சி போன்றவற்றுக்கு கிடைக்கும் அளப்பரிய வசதி.

- பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கும் நிதிப்பலமும் சுயாதீனமாக நிதிசார் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமும்.

- விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ மாற்று அறுவைச் சிகிச்சை கவனிப்பு சேவை, தனியார் மருத்துவசாலைகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கும் ஆற்றல்.



# 1.6 எமது எதிர்பார்ப்புக்கள்



- கூட்டிணைந்த திட்டத்துக்கு அமைவாக உலகளாவிய தரங்ககளை நோக்கி விருத்தியாதல்.
- நவீன மருத்துவ விஞ்ஞான உபகரணங்களை கொண்டிருத்தல்.
- மருத்துவமனை கட்டணங்கள் மக்களுக்கு ஏற்ககூடிய விதத்தில் இருத்தல்.
- சர்வதேச தரம் வாய்ந்த நோயாளர் கவனிப்பு சேவைகளை வழங்குதல்.
- மருத்துவதுவப் பட்டம் மற்றும் மருத்துவ பட்டப்பின்படிப்பு, பயிற்சி நிலையமொன்றாக செயலாற்றுதல்.
- சகல தரங்களுக்கும் போதுமான வினைத்திறனுடைய பதவியணியை கொண்டிருத்தல்.
- மக்களுக்கு ஏற்கக்கூடிய தொகையை அறவிட்டு வருமானம் ஈட்டுதல்.
- சுகாதார அமைச்சின் கீழ் சேவையாற்றிய பதவியினர்களின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு மதிப்பளித்தல்.

# 1.7 எமது வெற்றிகள்

## 1. கணினிப் பட்டியல்கள் தயாரித்தல் தொகுதிகள் நிர்மாணித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை வெளியக மற்றும் உள்ளக நோயாளர்களுக்காக மிகவும் குறைந்த அறவீட்டின் கீழ் வைத்திய சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனமாகும். இது வரை காலமும் மருத்துவமனைப் பட்டியல்கள் தயாரித்தலும், வழங்குதலும் கையினால் எழுதப்பட்டதோடு இது வினைத்திறமை மற்றும் மிகச் சிறந்த தரம் குறைந்ததாகையால் இது மருத்துவமனைக்கு நிதி நிலைமையில் நட்டத்தை ஏற்பத்தியதோடு நோயாளர்களுக்குப் பல இடைஞ்சல்களையும் ஏற்படுத்தின.

இந்நிலைமையினை சீர் செய்வதற்காக மருத்துவமனை கணினி நிர்வாகம் மற்றும் பட்டியல் தயாரிக்கும் செயற்பாடுகள் திட்டமிட்டு நிர்மணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கணினி பட்டியல் தயாரித்தல் செயற்பாடுகள் நடைமுறையில் மேம்படுத்துவதோடு பட்டியல் தயாரித்தல் செயற்பாடுகள் நடைமுறையில் மேம்படுத்துவதோடு பட்டியல் தயாரித்ததில் ஏற்பட்ட தவறுகளும் அதனால் மருத்துவமனைக்கு ஏற்பட்ட நட்டங்கள் குறைந்ததுடன் மருத்துவமனைக்கும் மிகச் சிறந்த வினைத்திறமையுடன் கூடிய சேவைகளைப் பெறமுடியும்.

கணினி பட்டியல் தயாரிக்கும் செயற்பாட்டு கட்டங்களாக நிர்மாணிக்கப்படும்.

## 2. மருத்துவமனை கணினித் தளம் ஸ்தாபித்தல்

கணினி மயப்படுத்தப்பட்ட பட்டியல் தயாரிப்புக்கள் நடைமுறைப்படுத்துவதைப் போல பிற விபரங்கள் செயற்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக பொருத்தமான தேவையான அடிப்படை வசதிகள் ஸ்தாபித்தல் கட்டாயமானதாகும்.

முழு மருத்துவமனையும் உட்படுத்தப்படக்கூடிய இணையத்தளம் மாதிரியாகத் தயாரிக்கப்பட்ட கணினி வலையமைப்பு இதற்காக ஸ்தாபிக்கப்பட்டது.

சகல தரவுகளும் மத்திய server களஞ்சியப்படுத்தி வைப்பதன் மூலம் இந்த கணினி வலையமைப்பு தரவுகளின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்த பிரதான server மருத்துவமனையில் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு அது 24 மணி நேரமும் செயற்பட்டுக் கொண்டிருக்கும். அதனுடன் சம்பந்தப்பட்ட switch மற்றும் தரவுகள் மூலம் வைத்தியசாலையில் வாட்டு கிளினிக் தீவிர சிகிச்சைப்பிரிவு, வெளிநோயாளர் பிரிவு உட்பட சகல இடங்களுக்கும் இணைப்பை ஏற்படுத்தப்படும்.

## 3.மருத்துவ பரிசோதனைப் பிரிவு புதிய இடத்தில் ஸ்தாபித்தல

ஏதாவது நோய் நிலைமை உருவானதன் பின்னர் அதற்கான சிகிச்சையினைப் பெறுவதைவிட அந்த நோய் நிலைமைக்கு ஆளாகும் முன்னர் குறித்த நோய் வரக்கூடிய நிலைமை வருமென தெரிந்து அதற்குரிய அவசிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஏதாவது நோயினால் நோயாளியின் நாளாந்த வாழ்க்கைக்கு ஏற்படும் அழுத்தம், அதனால் ஏற்பக் கூடிய தேக்கத்தினைக் குறைக்க முடியும். அதே போன்று ஏதாவது நோய்க்கு நோயின் அறிகுறி தென்படும் முன்னர் அதன் மூலம் உடம்பில் எற்படும் ஜீவரசாயன மாற்றங்களை அவதானிப்பதன் மூலம் நோயினை முன்கூட்டியே அறிவதற்கும் அதன் தேக்கத்தினை குறைத்துக் கொள்ளவும் வழி பிறக்கும். இதற்காக நோயற்ற சில நபர்களின் சில நோய் நிர்ணய பரிசோதனைகளும் மற்றும் வைத்திய பரிசோதனைகளும் செய்வது முக்கியமாகும்.

இந்தச் சேவையினை செய்வதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை மூலம் வைத்திய பரிசோதனைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் மூலம் மக்களுக்கு மிகவும் சாதாரண அறவீடுகளின் கீழ் வைத்திய பரிசோதனைகளுக்கு முகம் கொடுக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் அது அமைந்துள்ள இடத்தின்படி பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. மிகவும் இடவசதியான மற்றும் வசதிகள் கொண்ட மக்களுக்கு இலகுவாக அடையக்கூடிய இடத்தில் மருத்துவ பரிசோதனை பிரிவினை புனர்நிர்மாணம் செய்வதன் மூலம் மருத்துவ பரிசோதனைக்காக வருகை தருவோரைப் போன்றே மருத்துவமனைப் பணிப்பாளர்களுக்கும் சிறந்த வசதி ஏற்படுத்தப்பட்டது.

## 4. வாட்டுக்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை ஜப்பான் அரசினூடாக இற்றைக்கு 29 வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்டதோடு அந்தக் கட்டிடங்களின் திருத்தங்களும் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்வது அவசியமாகியது. இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக 2012ல் ஆரம்பிக்கப்பட்ட வாட்டுக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டம் தொடர்ந்து வியாபித்து நடைமுறைப்படுத்தப்பட்டது. வாட்டுகளில் மலசலகூடம் மற்றும் குளியலறைகளின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 5.வெற்றிடமான பதவிக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பதும் புதிய பதவிகளை உருவாக்குவதும

மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் பதவிக்காக நிரந்தர பிரதி பணிப்பாளர் ஒருவர் நீண்டகாலமாக இன்மையால் அப்பதவியில் கடமைபுரிய பதில் பிரதி பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

வெற்றிடம் நிலவிய இருதய அறுவைச் சிகிச்சை மருத்துவ நிபுணத்துவப் பதவிக்காக நிபுணத்துவ மருத்துவர் ஒருவர் சோர்க்கப்பட்டார்.

வைத்தியசாலையில் பாலியல் நோய் சம்பந்தமான நிபுணத்துவ மருத்துவர் இன்மையால் அதற்காகவும் புதிய நிபுணத்துவ அறுவைச் சிகிச்சை மருத்துவர் சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனையில் சுகாதார தகவல் தொழில்நுட்ப விடயங்களுக்காக பட்டப்பின் மருத்துவ நிறுவனத்தில் சுகாதாரத் தகவல் வெளியிடுதல் சம்பந்தமாக பட்டப்பின் பட்டம் பெற்ற வைத்தியர் ஒருவர் மருத்துவமனைக்கு உள்ளீர்க்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டது.

## 6. பாலியல் நோய்களுக்காக அறுவைச் சிகிச்சைகள் வழங்குதல்.

இதுவரை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் பாலியல் நோய்கள் சம்பந்தமான அறுவைச் சிகிச்சை மருத்துவர் சேவையில் இல்லாததோடு அவ்வாறான சிகிச்சைகள் தேவைப்படும் நோயாளிகள் வசதிகள் நிறைந்த மருத்துவமனைகளுக்கு அனுப்பபட்டனர். 2013ம் வருடத்தில் பாலியல் நோய்கள் மற்றும் சிறுநீரகம் இணைப்பது சம்பந்தமான நிபுணத்துவ அறுவைச் சிகிச்சை மருத்துவர் ஒருவர் மருத்துவமனைகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் சகல பாலியல் நோய்களுக்குமான சிகிச்சையளிக்கும் சந்தர்ப்பம் நோயாளர்களுக்கு ஏற்பட்டது. அறுவைச் சிகிச்சையினால் ஏற்படும் இரத்த தேக்கத்தினைக் குறைக்கவும், அறுவைச் சிகிச்சையினால் ஏற்படும் வேதனைகள் மற்றும் வெட்டிய காயங்களைக் குறைப்பதற்கும், காரணமான முக்கிய துவாரத்தில் மார்பகத்தில் மேற்கொள்ளும் “லெபரொஸ் கொபிக்” அறுவை சிகிச்சை மூலம் சிறுநீரகம் மாற்றுவதற்காகப் பெறுதல் Proctate சுரப்பியில் மற்றும் சிறுநீரகத்தில் புற்று நோய்க்கான நிலைமைக்காக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளுதல், மற்றும் சிறுநீரகங்களிலும் மற்றும் சிறுநீர்கழியும் பாதைகளை அண்மித்து அதிகமான கற்களை அகற்றுவதும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் நடைபெறுகின்றது.

பாலியல் நோய்களுக்காக நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் செயல்முறைகளைப் பயன்படுத்தி உயர்தரத்தினைக் கொண்டதும் அதிக விரிவான அளவில் சேவைகளை வழங்கி பாலியல் நோய்கள் பிரிவு வரைக்கும் இந்தச் சேவைகளை விரிவாக்க எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 7.எதிர்கால 5 வருடங்களுக்காக மருத்துவமனையில் இணைப்புத் திட்டம் தயாரித்தல்

ஸ்ரீ ஜயவாதனபுர பொது மருத்துவமனையில் செயற்பாடு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது நிச்சயமான தொலை நோக்கின்படி தயாரிக்கப்பட்ட பூரண நீண்ட காலத்திட்டம் அவசியமாகும். 2014 – 2018 வருடங்களுக்காக இணைந்த திட்டத்தினை தயாரித்து மருத்தவமனையில் சகல தரப்பினரும் பிரதி நிதித்துவப்படுத்தும் குழுவின் பங்குபற்றுதலோடு இலங்கை மன்றக் கல்லூாயில் நிபுணர்களின் வழிகாட்டலின் பேரில் நடைபெற்றன.

இவ்வாறான பிரவேசித்தல் வைத்தியசாலைச் சரித்திரத்தில் தயாரிக்கப்பட்ட முதலாவது பூரண இணைந்த திட்டம் இதுவாவதோடு, இதனூடாக எதிர்கால 5 வருட காலத்தில் தெளிவான தொலை நோக்குடன் பாரிய அபிவிருத்தியினை நோக்கி மருத்துவமனையினை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது

## 8.இருதய அறுவை சிகிச்சைக்காக நவீன தொழில்நுட்ப உபாய முறைகள பாவனை

இலங்கையின் அரச துறையில் இருதய அறுவைச் சிகிச்சை நடாத்தப்படும் மருத்துவமனைகள் பலவற்றினுள் பிரதான மருத்துவமனையான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனை கடந்த காலத்திலிருந்து இருதய அறுவைச் சிகிச்சை நடத்துவதற்கு மிகவும் தேர்ச்சி பெற்ற நிறுவனமாகப் பிரபல்யமானது.

1995ம் வருடத்தில் இலங்கையில் முதலாவது தடவையாக இருதய குழாய் அறுவை சிகிச்சை செய்து இலங்கையில் இருதய அறுவைச் சிகிச்சை மருத்துவத் துறையிலே புதிய திருப்பு முனையினை ஏற்படுத்திய ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை இருதய அறுவைச் சிகிச்சை நவீன அறுவைச் சிகிச்சை யுக்திகளின் மூலம் பாரிய முன்னேற்றமும் கிடைத்துள்ளது.

இருதயம் செயற்படும் வேளையிலேயே நடத்தப்படும் இருதய குழாய் மற்றும் அறுவைச் சிகிச்சை மற்றும் மார்பு துவாரம் விசாலமாக விரியாமல் மிகக் குறைந்த அறுவைச் சிகிச்சை வெட்டுதலின் பேரில் ஏற்படும் இருதய குழாய் இணைக்கும் அறுவைச் சிகிச்சை 2013 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு, அதன் மூலம் நோயாளர்களுக்கு குறைந்த தேக்கத்துடனான விரைவான சுகத்தினைப் பெற்றுக் கொடுப்பதோடு மருத்துவமனையில் இருக்க வேண்டிய காலத்தினைக் குறைத்தலும் அறுவைச் சிகிச்சைக்கான செலவுப்பணம் குறைத்தலும் நிகழ்கிறது.

## 9. சுகாதார தகவல் பிரிவு ஸ்தாபித்தல்

மருத்துவ மற்றும் தகவல் தொழில் நுட்ப துறையின் நவீன முன்னேற்றத்தின் பாவனையில் சுகாதார சேவை வழங்கும் நிறுவனங்களை விட திறமையாகவும், தரமானதுமான சேவைகளை வழங்க சந்தர்ப்பம் வழங்கப்ப்டுள்ளன. கணினி கட்டுப்பாடும் பட்டியல் தயாரித்தலினைத் தாபித்ததன் மூலம் தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றம் மருத்துவமனையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பங்களிப்புச் செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சரியானதும் இரகசியமான மற்றும் தகவல்களில் உணர்வு பூர்வமான விடயங்களை கவனிக்கும் போது சுகாதார தகவல்கள் வேறு தகவல் தொகுதிகளுடன் வேறுபடுகிறது. ஆதலால் சுகாதார தகவல்கள் தொகுதிகள் திட்டமிடல், நிர்மாணித்தல் மற்றும் நடாத்துதல், வைத்தியத்துறை சம்பந்தமாக சரிசமமான அறிவுடன் கூடியதாக இருக்கவேண்டுமென நவீன யுகம் ஏற்றுக் கொள்கிறது.

வைத்தியசாலையில் சுகாதாரத் தகவல்கள் சம்பந்தமாக மேற்பார்வை மற்றும் நிர்வாகத்திற்காக பட்டப்பின்படிப்பு மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் சுகாதார தகவல் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு பட்டத்துடனான மருத்துவமனை சேர்த்துக் கொள்ளவும் சுகாதார தகவல் பிரிவு அமைக்கவும் 2013 ம் வருடத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 10. மருத்துவமனைச் சூழலில் சுகாதாரக் கல்விப் பல்கலைக்கழக விஞ்ஞான நிறுவனத்தினை நிறுவுதல்.

இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சினால் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் இணைந்த 2013 ஒக்டோபர் மாத சுகாதாரக்கல்வி பல்கலைக்கழக விஞ்ஞான நிறுவனம் திறக்கப்பட்டது. தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) வழங்கி இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்திறன் துறையில் முக்கிய மைல் கல்லான இந்த விஞ்ஞான நிறுவனத்தின் மூலம் உயிரியல் வைத்திய உபகரணங்கள் சம்பந்தமான உயர் தொழில்நுட்ப டிப்ளோமா, உணவு மற்றும் போசணை சம்பந்தமான அத்தாட்சிப்பத்திர பாடத்திட்டம் மற்றும் சுகாதார மேம்பாடு சம்பந்தமாகச் சான்றிதழ் பாடத்திட்டம் போன்ற பாடத்திட்டங்கள் பல நடாத்தப்படுகின்றன.

## 11. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் வைத்திய பீடத்துக்கு இணைந்த பேராசிரியர் பிரிவினை அமைத்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ மாணவர்களுக்கு கிளினிக் பயிற்சிக்காக வசதிகளை வழங்கி போதனா வைத்தியசாலையாகத் தற்போது சேவை வழங்குகின்றது. அதற்கு மேலதிகமாக கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழத்தினுடன் இணைந்த உடற்கூறு மருத்துவ அறுவைச் சிகிச்சை பிரசவ நரம்பியல், சிறுவர் நோய்கள் பேராசிரியர் பிரிவு அமைப்பதன் மூலம் அதன் இறுதி வருட மருத்துவ மாணவர்களுக்கு பேராசிரியர் பிரிவுகளுக்கு கிளினிக் பயிற்சி கிடைக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. 2013ம் வருடத்தில் நவம்பர் மாதம் முதலாவது மருத்துவ மாணவர் குழுவுக்காகக் கிளினிக் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

## 12. தீயணைப்புத் தொகுதி நிர்மாணித்தல்

அவசர சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு நவீன தீயணைப்புத் தொகுதி மருத்துவமனையில் நிறுவப்பட்டதோடு, அதன் மூலம் நோயாளர்களுக்கும் பணிக்குழுவுக்கும் மருத்துவமனையில் மிகப்பாதுகாப்பான இடமாக மாற்றம் பெற்றது.

# 1.8 மருத்துவமனைப் பணிக்குழு

ஸ்ரீ ஜயவாத்தனபுர பொது மருத்துவமனையில் அனைத்து பணிக்குழு உறுப்பினர்களும் 1706 ஆகும். அதிக எண்ணிக்கையான தரங்களைச் சேர்ந்த மருத்துவமனை பற்றிய சாராம்சம் கீழே காட்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| பதவி நிலைப் பணிக்குழு | | 17 |
| மருத்துவ பணிக்குழு | | 293 |
| நிபுணத்துவ வைத்திய உத்தியோகத்தர் | 38 | |
| மருத்துவ உத்தியோகத்தர்கள் | 139 | |
| எல்லைக்குட்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் | 40 | |
| பட்டப்பின் எல்லைக்குட்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் | 24 | |
| பட்டப்பின் படிப்புப் பயிற்சிமருத்துவ உத்தியோகத்தர்கள் | 52 | |
| தாதி பணிக்குழு | | 647 |
| தாதி சகோதரிகள் | 26 | |
| தாதி உத்தியோகத்தர்கள் | 522 | |
| மாணவத் தாதிகள் | 99 | |
| இடைநில வைத்தியப் பணிக்குழு | | 97 |
| இடைநில மருத்துவர்கள் | 97 | |
| பிற பணிக்குழுவினர் | | 221 |
| முகாமைத்துவ உதவியாளா | 114 | |
| பிற | 107 | |
| கனிஷ்ட பணிக்குழு | | 431 |
| சிற்றூழியர்கள் | 431 | |

# 1.9 நிபுணத்துவ மருத்துவர் பிரிவு

ஸ்ரீ ஜயவாதனபுர பொது மருத்துவமனையினூடாக பரந்தளவில் நிபுணத்துவ வைத்திய சேவைகளை வழங்குவர். சகல நிபுணத்துவ பிரிவுக்கும் இலங்கையின் கீர்த்திமிகு மிகத் திறமைமிக்க நிபுணத்துவ மருத்துவர்களின் சேவை இங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையினால் சேவைகள் வழங்குகின்ற விசேஷ மருத்துவப் பிரிவுகள் கீழே காட்டப்படுகின்றன.

- கண் நோய் விஷேட மருத்துவப் பிரிவு
- தொண்டை, காது மற்றும் மூக்கு சம்பந்தமான நிபுணத்துவ மருத்துவப் பிரிவு
- உடற் கூறு நோய் நிபுணத்துவ வைத்தியப் பிரிவு
- நுண் உயிரின நிபுணத்துவ வைத்தியப் பிரிவு
- தோல் நோய்ப் பிரிவு
- மரபாய்வு நிபுணத்துவ மருத்துவப் பிரிவு
- உணர்விழப்பு நிபுணத்துவ மருத்துவப் பிரிவு
- நோயியல் நிபுணத்துவ மருத்துவப் பிரிவு
- பிரசவ மற்றும் நரம்பியல் நிபுணத்துவ மருத்துவப் பிரிவு
- குருதியியல் நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- இரத்தோட்ட நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- சிறுநீரக நோய் நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- மூட்டுவாத நோய் நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- எலும்பு முறிவு நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- கதிர் இயக்க நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- சத்திரசிகிச்சை நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- நரம்பியல் நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- நரம்பு சத்திரசிகிச்சை நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- இருதய சத்திரசிகிச்சை நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- இருதய நோய் நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு
- சிறுவர் நோய் நிபுணத்துவ மருத்துவ சேவைப் பிரிவு

# 1.10 எமது சேவைகள்

பரந்தளவிலான சேவைகள் ஒரே கூரையின்கீழ் சிறந்த தரத்தில் மிகவும் சகாய விலையில் தேசிய மற்றும் சர்வதேச மக்களுக்கு வழங்குவதே ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் முக்கிய குறிக்கோளாகும். இதில் வழங்கப்படும் பிரதான சேவைகள் கீழே காட்டப்படுகின்றன.

## மருத்துவ சேவைகள்.

- கண் பரிசோதனைச் சேவை
- அல்ட்ராசவுண்ட சேவை
- தொற்று நோய் கட்டுப்பாட்டுச் சேவை
- ஈ சி ஜி பரிசோதனை
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சேவை
- எக்ஸ்றே சேவை
- என்டோஸ் கொப்பிச் சேவை
- பேச்சுப் பயிற்சிச் சேவை
- கோலொனொஸ் கொபி சேவை
- அதி தீவிர சிகிச்சைப் பிரிவு
- மகப்பேற்று தீவிர சிகிச்சைப் பிரிவு
- போசனை ஆலோசனைப் பிரிவு
- வெளியார் மருந்தக சேவை
- வெளியார் நோயாளர் சிகிச்சைப் பிரிவு
- வெளி நோயாளர் கிளினிக் சேவை
- புரொன்கொஸ்கொபி சேவை
- பௌதிக சிகிச்சைப் பிரிவு
- உளவியல் ஆலோசனைப்பிரிவு
- எம்மோக்ரபி சேவை
- பாலியல் நோய் சிகிச்சைப் பிரிவு
- இரசாயன சேவை
- இரத்த மாற்றுதல் சேவை
- நிபுணத்துவ மருத்துவ சேவை (செனல் சேவை)
- மருத்துவ பரிசோதனைச் சேவை
- உடற் பயிற்சி ECG சேவை
- கேட்டல் பரிசோதனைச் சேவை
- CT சேவை
- சுகாதாரக் கல்விச் சேவை
- நரம்பு சத்திரசிகிச்சை தீவிர சிகிச்சைப் பிரிவு
- என்ஜியோ கிராம் சேவை
- ECG சேவை
- இதய தீவிர சிகிச்சைப் பிரிவு
- இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவு
- ஹோல்டர் பரிசோதனைப் பிரிவு
- மிள்சக்தி சேவை
- திடீர் அம்பியுலன்ஸ் சேவை

## வேறு சேவைகள

- வங்கிச் சேவைகள்
- தன்னியக்க ரெலர் இயந்திர சேவை
- சிற்றுண்டிச்சாலை வசதிகள்
- தபாலக சேவைகள்
- வாகன தரிப்பிட வசதிகள்

# 1.11 எமது இணையத்தளம்

www.sjghsrilanka.org




"ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் உத்தியோகபூர்வ இணையத் தளம்."

# 2. முகாமைத்துவ குழு



# 2.1 தலைவரின் செய்தி



சிறந்த பெறுபேற்றினை அடைந்து கொண்டு 2013 முடிவடைவது சம்பந்தமாக பின்னூட்டல் செய்ய உசிதமான சந்தர்ப்பத்தில் வழங்கும் வருடாந்த அறிக்கை இதுவென நம்புகின்றேன்.

2011ம் வருடத்தில் புதிதாக கட்டுப்பாட்டுச் சபை நிர்வாகத்தினை பாரம் ஏற்கும் போது இருந்த பிரதான பிரச்சினைகளைத் தீர்த்து கோப் குழுவின் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்கான வினாக்களுக்கு சிறந்த முறையில் பதில் அளித்து குறைகளை நிவர்த்தி செய்து. ஊழியர் பிரச்சினைகளுக்கு தற்போதைய வட்டத்தினுள் வழங்கக் கூடிய சிறந்த தீர்வுகளை வழங்கி ஊழியர் சேவை கொள்வோரிடையே பரஸ்பர சுமுக உறவினைக் கட்டியெழுப்ப முடிந்தது நாம் பெற்ற மேலும் ஒரு வெற்றியாகும்.

வைத்தியசாலை செலவு திறைசேரி அன்பளிப்புகள் மற்றும் வைத்தியசாலை வருமானத்துடன் சமப்படுத்தும் நோக்கம் மருத்துவமனை ஆரம்பித்தது முதல் வெற்றிகரமானதாக இருந்தது சில வருங்களில் மாத்திரமே. 2013 வருடத்திலும் எமது வரவும் செலவுக்குமிடையே ரூபா. பத்து இலட்சத்து 108 மேலதிகமென அறிக்கையிட முடிந்தது. இது சிறந்த நிதி நிர்வாகமும் வினைத்திறமையினை மேம்படுத்தியதன் விளைவாகப் பெற்ற வெற்றியாகும்

மூலதனத் தேவைகளுக்குரிய முக்கியத்துவத்தின் அடிப்படையில் நிதி வழங்க அன்றாடச் செயற்பாடுகளில் குறைந்த பிரச்சினைகளுடன் நடத்திச் செல்ல முடிந்ததயும் குறிப்பிடல் வேண்டும். பணிக்குழுவில் குறைபாடுகள் தேவைகளுடன் ஒப்புநோக்கி அதிகபட்சமாக நிறைவு செய்ய முடிந்ததும் பயிற்சி பெற்ற ஊழியர் பற்றாக்குறை (விசேடமாக தாதி மற்றும் தொழில் நுட்ப பிரிவு) நிரப்புவதற்கு முடியாமைக்குக் காரணம் நாட்டில் நிலவிய பயிற்சி பெற்ற ஊழியர் பற்றார்குறையேயன்றி எமது குறைபாட்டினால் அல்ல. இந்த விடயங்களுக்கிடையே மத்திய தரத்தினை ஏற்படுத்தி தீர்வுக்கான செய்த முயற்சிகள் குறித்த ஊழியர்களின் எதிர்ப்பினால் நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை நிபுணத்துவ மருத்துவர்கள் 35 பேர்கொண்ட பயிற்சித் தாதிமார்கள் 520 ம் மற்றும் பயிற்சி தொழில் நுட்பப் பணிக்குழு 108 பேரடங்கிய
கட்டணம் அறவிடும் மருத்துவமனை ஆகும். அரச மருத்துவமனைக்கான சகல தரமும் எம்மால் பின்பற்றப்படுகின்றன. சகல சம்பளங்களும் அரச ஊழியர்களின் சம்பளங்களுக்கு ஏற்ப கொடுப்பனவு செய்யப்படுகின்றது. இந்தத் தரத்தினைத்தக்க வைக்க எமது ஊழியர்களின் சம்பளங்களையும் மற்றும் அன்றாட செலவுகளையும் ஒப்பிடும் போது பிற தனியார் மருத்துவமனைகளைவிட இது இருமடங்கு அதிகமாகும்.

அதே போன்று 1078 கட்டிடங்கள் உள்ள இந்த மருத்துவமனை கட்டணம் அறவிடுவதும் மிகவும் சாதாரண மட்டத்திலேயேயாகும். சுமார் 977 கட்டிடங்களுக்கு அறவிடுவது சகல உணவு குடிபானம் வழங்க தினம் ரூபா.650.00 மாத்திரமே. 2012ம் வருடத்துடன் ஒப்பிடும் போது கொடுப்பனவு வாட்டு அறைகளின் எண்ணிக்கை 07 ஆல் கூடியுள்ளதுடன் 2013ல் முழு அறைகளினதும் எண்ணிக்கை 33 வரை அதிகரித்துள்ளது. அதன்படி ரூபா.650.00 அறவிடும் கட்டிலுக்கு எமது மருத்துவமனை நாளாந்தம் ரூபா.350.00 நட்டத்துடனேயே சேவை வழங்குகிறது.

எமது நிபுணத்துவ மருத்துவர்களுக்கு தனிப்பட்ட சேவைகளில் ஈடுபட அனுமதி இருந்தும் அவர்களில் சிலர் முழு நேரமும் இந்த மருத்துவமனையில் மாத்திரமே தனியார் சேவையில் ஈடுபடுவதில்லை. இப்படியான மருத்துவர்கள் மருத்துவமனையினுள்ளேயே தனியார் மருத்தவ சேவையில் ஈடுபடுத்துவதற்காக கவர்ச்சிகரமான திட்டம் தீட்டுவது அவசியமாகும். இரசாயன கூடம் கதிரியல் பிரிவு போன்ற இலாபகரமான பிரிவுகள் இதனை விட வினைத்திறனுடன் மருத்துவமனைக்கு அதிகபட்ச நன்மைகள் கிடைக்கத்தக்க வகையில் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளது. பணிக்குழு மற்றும் உபகரணம் வழங்குதல் உச்சப் பயனை மேலேங்கச் செய்வதும் இதற்கு அவசியமாகும். கட்டணம் செலுத்தும் தனி அறைகளுக்கு கூடிய கேள்விகள் இருந்தும் மருத்துவமனைக்கு நேரடி வருமானம் கிடைக்கும் பிரபல ஊடகமாக நோக்கினாலும் மூலதனப் பற்றாக்குறை அப்பிரிவின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைகிறது. இதற்காக அதிகபட்ச முக்கியத்துவம் வழங்க வேண்டியுள்ளது.

அதிகபட்ச சேவையினைத் திட்டமிடலில் எமது நோக்கம் 99% நிறைவேற்றியுள்ளது. ஆனால் அரசோடு இணைந்த நிறுவனமாக அச்சேவைக்காக சந்தைக் கட்டணம் அறவிட எமக்கு உரிய உரிமையில்லை அவ்வாறு செய்வதாயின் அரச கட்டணம் அறவிடும் மருத்துவமயையாக அரசு எதிர்பார்க்கும் நோக்கம் நிறைவேறாது. அதனால் சந்தைக் குறைந்த கட்டணம் அறவிடப்பட்டு திறமையான பணிக்குழுவினால் உயரிய சேவையினை வழங்கி வினைத்திறனையும் மற்றும் உச்சப் பயனையும் அதிகமாக வழங்கி நிறுவனத்தினை சிறப்பாக நடாத்திச் செல்ல கடந்த வருடம் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அதன் பிரதிபலன் கிடைத்துள்ளது.

எமக்கு சரியான சுதந்திரம் மற்றும் ஆலோசனைகள் வழங்கிய கௌரவ சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும், பிரதி சுகதாதார அமைச்சருக்கும் சுகாதார செயலாளர் அவர்கள் உட்பட சுகாதார அமைச்சின் மருத்துவமனையின் பணிப்பாளர் சபை பணிப்பாளர் உள்ளடங்கலாக மருத்துவமனையின் சகல உத்தியோகத்தர்கள் மற்றும் சகல மருத்துவமனை பணிக்குழு மற்றும் எம்மில் நம்பிக்கை வைத்து நோய்களுக்கான சிகிச்சைக்காக எம்மிடம் வருகைதரும் நோயாளர்

பெருமக்களுக்கும் எமது குறைகளைச் சுட்டிக்காட்டிய எல்லோருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றேன்.

பிறக்கும் 2014ம் வருடம் சம்பந்தமாக இதைவிடமிக பெருமையுடன் பேசுவதற்கு இன்றிலிருந்தே அர்ப்பணிப்போம்.

## எம்.எம்.என்.டீ.பண்டார

**BA MSSC Dip.in Public Administration**

**ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை**

# 2.2 பணிப்பாளரின் செய்தி



ஸ்ரீ ஜயவத்தனபுர பொது மருத்துவமனையின் 2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு செய்தியை வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டணம் அறவிடப்படும் மருத்துவமனையொன்றாக நடாத்திச் செல்லப்படும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனைக்கு சில சவால்கள் உள்ளன. ஆயினும், பதவியினர்கள் அனைவரும் ஒரு குழு என்ற உணர்வுடன் செயலாற்றுவதன் மூலம் இந்த சவால்களை வெற்றி கொண்டு சுகாதராத்துறையில் நற்பெயரை தக்கவைத்துக் கொள்வதற்கு இயலுமாய் உள்ளது. இந்த மருத்துவமனையின் ஆண்டறிக்கையிலுள்ள தரவுகள் 2013 ஆம் ஆண்டில் எமது குறியிலக்குகளுக்கு அண்மிப்பதற்கான அத்தாட்சியாக உள்ளது. இந்த அதிகரிப்பின் மூலம் காட்டப்படுவது போட்டிமிக்க தனியார் சுகாதார துறையுடன் சமமாக போட்டியிட்டமையாகும். எம்மால் திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் மூலம் மிக அண்மைக்காலத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை இலங்கையில் சுகாதார துறையின் முதலாமிடத்துக்கு வருமென்பது எமது நம்பிக்கையாகும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை நிலையான பயணத்தில் ஈடுபட்டிருப்பது உள்நாட்டு, வெளிநாட்டு மக்களுக்கு உயர் மட்டத்திலான சுகாதார சேவையை வழங்கும் நீண்ட கால தொலைநோக்கினை கொண்டாகும். பரந்துபட்ட தனியார் மருத்தவமனை வலையமைப்பொன்று இருந்தபோதிலும் நோயாளிகளும் அவர்களுடைய உறவினர்களும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின்பால் நம்பிக்கை வைத்து வருவது மிக கூடிய தொழில் தேர்ச்சி மற்றும் கடும் அர்ப்பணிப்புடனான மருத்துவர்கள், தாதிமார்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பிற உத்தியோகத்தர்கள் என நாம் பலம் கொண்டு இருப்பதனாலாகும்.

எமது வெற்றிக்கு எச்சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பு நல்கும். சுகாதார அமைச்சர் மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும், பிரதி சுகாதார அமைச்சர் மாண்புமிகு லலித் திசாநாயக்க அவர்களுக்கும், சுகாதார அமைச்சின் செயலாளார் மருத்துவர் நிஹால் ஜயதிலக்க அவர்களுக்கும், சுகாதாரப் பணிப்பாளர் அதிபதி மருத்துவர் பாலித்த மஹிபால அவர்களுக்கும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் தலைவர் திரு.நிமல் பண்டார அவர்களுக்கும், மருத்துவமனை பணிப்பாளர் சபைக்கும் முகாமைத்துவ சபைக்கும் பதில் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் பீ.ஜே ஜ.அம்பவத்த அவர்களுக்கும், மருத்துவர் ஷியாமா சுபசிங்க அவர்களுக்கும், மருத்துவர் சந்துஷய பேர்ணாந்து அவர்களுக்கும் பெரும் அர்பணிப்புடன் சேவையாற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பதவியினர்கள் அனைவருக்கும். எம் மீது நம்பிக்கை வைத்து மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்தவமனையில் ஏற்பட்டுள்ள மெச்சத்தகு மாற்றத்தை எடுத்துக்காட்டி இந்த ஆண்டறிக்கையை மிக சிறப்பாக தயாரித்த மருத்துவர் பிரியங்க சேனாநாயக்க அவர்களுக்கும் மற்றும் மருத்துவமனைத் திட்டமிடல் பிரிவின் திட்டமிடல் உதவி உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருத்துவர் எஸ்.ஏ.கே.கமகே
MBBS (Sri Lanka) MSc (Med. Admin)
பணிப்பாளர். ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

# 2.3 பணிப்பாளர் சபை



**இடமிருந்து வலமாக:**

| | |
|---|---|
| மருத்துவர். (திருமதி) மேதா வீரசேக்கர | - நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி |
| மருத்துவர். (திரு) டீ.ஜே.விக்ரமரத்ன | - நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி |
| திருமதி. ஹிரன்ஷா களுதந்திரி | - திருமதி. ஹிரன்ஷா களுதன்திரி |
| மருத்துவர். (திரு) ஹர்ஷ சமரவீர | - அமைச்சின் பிரதிநிதி |
| மருத்துவர். (திரு) எஸ்.ஏ.கே.கமகே | - பணிப்பாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை |
| திரு.எம்.எம்.என்.டீ.பண்டார | - தலைவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை |
| பேராசிரியர் (திரு) ஜயன்த ஜயவர்தன | - பணிப்பாளர், மருத்துவபட்ட பின்படிப்பு நிறுவனம் |
| மருத்தவர் (திரு) மஹிபால | - மருத்துவர் (திரு) மஹீபால |
| பேராசிரியர் (திரு) ஜனக்க த சில்வா | - அமைச்சின் பிரதிநிதி |
| மருத்துவர் (திரு) டீ.எல்.பியறிசி | - நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி |
| சட்டத்தரணி. திருமதி திலானி ராஜபக்ஷ | - பணிப்பாளர் சபைச் செயலாளர் |

**படத்தில் இல்லாதவர்-**

| | |
|---|---|
| பேராசிரியர். ரஞ்சித் பண்டார | - அமைச்சின் பிரதிநிதி |

# 2.4 முகாமைத்துவ குழ

**மருத்துவர் (திரு) எஸ்.ஏ.கே.கமகே**
பணிப்பாளர் - ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுமருத்துவமனை
குழுத் தலைவர்

**மருத்துவர் (திருமதி) எஸ்.சுபசிங்க** - 2013 மே வரை

**மருத்துவர் (திரு) பி.ஜே.அம்பவத்த** - 2013 செப்ரெம்பர் வரை

**மருத்துவர் (திருமதி) எஸ். பெர்ணாந்து**

ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுமருத்துவமனை
உறுப்பினர்

**நிபுணத்துவ மருத்துவர் (திரு) ரொஹான் அலோசியஷ்**
சிறுவர் நோய் பற்றிய நிபுணத்துவ மருத்துவர்
உறுப்பினர்

**நிபுணத்துவ மருத்துவர் (திரு) பி.ஜே.அம்பவத்த**
நோயியல் நிபுணத்துவ மருத்துவர்
உறுப்பினர்

**நிபுணத்துவ மருத்துவர் (திரு) ஹர்ஷ குணசேக்கர**
நரம்பியல் நோய் நிபுணத்துவ மருத்துவர்
உறுப்பினர்

**திரு ஈ.ஏ. பியதாச** 2013 மே மாதம் வரை

பிரதான கணக்காளர்

உறுப்பினர்.

**திரு.டீ.ஏ.பெரேரா**
உதவி கணக்காளர்
உறுப்பினர்

**திருமதி திலானி ராஜபக்ஷ**
மருத்துவமனை செயலாளர்
உறுப்பினர்

**திருமதி ஏ.என்.சப்புதன்திரி**
தலைமை தாதி உத்தியோகத்தர்
உறுப்பினர்

# 2.5 நிபுணத்துவ மருத்துவர்கள்

## உடற்கூறு நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) அநுலா விஜேசுந்தர
*MBBS, MD (Cey), FRCP (Eng)*

மருத்துவர் (திருமதி) சம்பா ஜயசுந்தர
*MBBS, MD*

பேராசிரியர் (திரு) ஆர்.எல்.சத்தரசிங்க
*MBBS, MD. MRCP (London), FRCP (Ed.), MRCP, FRCP (USA), FRCP (Cey), CCST (UK), MACG (UK)*

மருத்துவர் (திரு) சின்தக்க த சில்வா
*MBBS, MD, MRCP (UK)*

## நிபுணத்துவ அறுவை சிகிச்சை மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) காமினி குணதிலக்க
*MBBS (Cey), FRCS*

மருத்துவர் (திரு) டீ.எல்.பியசிறி
*MBBS, MS, FRCS (Ed.)*

மருத்துவர் (திருமதி) டீ.எச்.சமரகோன்
*MBBS, MS (Colombo), MRCP (UK)*

## சிறுவர் நோய் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு)ஆர்.ஏ.ஆர்.டீ.அலோசியஸ்
*MBBS, DCH, MD, MRCP*

## பெண் நோய் மற்றும் மகப்பேறு நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) ஹேமந்த பெரேரா
*MBBS, MS (Sri Lanka), FRCOG (UK)*

மருத்துவர் (திரு) மாதவ கருணாரத்ன
*MBBS, MS, FRCOG, FSLCOG*

## இருதய நோய் நிபுணத்துவ மருத்துவர்கள

மருத்துவர் (திருமதி) என்.எல்.அமரசேன
*MBBS, MD (Colombo), FRCA (London)*

மருத்துவர் (திரு) ஜே.பி.ஹேரத்
*MBBS, MD*

## மரபாய்வு நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) மேதா வீரசேக்கர
*MBBS, DCH, MD (Pead.), MRCP (UK)*

## சிறுநீரக நோய் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) சீ.ஏ.ஹேரத்
*MBBS, MD*

## நரம்பியல் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) எச்.எச்.குணசேக்கர
*MBBS, MD, MRCP*

## மூட்டுவாதநோய் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) கலீல் காசிம்
*MBBS, MD*

## தோல் நோய் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) டீ ஆரியவங்ச
*MBBS, MD (Dermatology)*

## இருதய அறுவை சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) கப்புருகே
*MBBS, MS, FRCS*

## எலும்புமுறிவு நிபுணத்துவ அறுவை சிகிச்சை மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) ஏ.பீ.எஸ்.ஆனந்த பெரேரா
*MBBS, MS, FRCS*

## கண் அறுவை சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) டீ.எச்.வாரியபொல
*MBBS, DO, FRCS (Ed), MS*

## நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) எம்.விஜேரத்ன
*MBBS (Hons, Melb.), MS (SL), FRCS (Ed.)*

## தொண்டை,காது,மூக்கு பற்றிய நிபுணத்துவ அறுவை சிகிச்சை மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) அசோக்க ஜயசேன
*MBBS, MS, FRCS*

## உணர்விழப்பு நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) சீ.என்.கருணாரத்ன
*MBBS, MD (Cey), FRCA (London)*

மருத்துவர் (திரு) வீ.கே.பி.இந்திரரத்ன
*MBBS, MD, FFARCSI, FRCA*

மருத்துவர் (திருமதி) ஜே.எச்.கே.ராஜசிங்க
*MBBS, MD (Anaesthesia), FRCA (UK)*

மருத்துவர் (திருமதி) ஆர்.பி.எஸ்.பலிஹவடன
*MBBS, MD (Anaesthesia), FRCA (UK)*

## கதிரியக்க நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) டீ.ஜே.விக்ரமரத்ன
*MBBS (Cey), MD (Radiology)*

மருத்துவர் (திருமதி) என்.எம்.பி.கே.அரம்பேபொல
*MBBS, MD (Radiology)*

மருத்துவர் (திருமதி) ஆர்.எம்.எஸ்.ரீ.சமரவீர
*MBBS, MD (Radiology)*

## நோயியல் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) எம்.ஜோசப்
*MBBS, Dip. Path., MD (Pathology)*

மருத்துவர் (திரு) பி.ஜே.அம்பவத்த
*MBBS, Dip. Path., MD (Pathology)*

மருத்துவர் (திருமதி) சொனாலி றொட்றிகோ
*MBBS, Dip. Path., MD (Pathology)*

## குருதியியல் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (செல்வி) சீ.காரியவசம்
*MBBS, Dip. Path., MD (Haematology)*

## நுண்ணுயிர் நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) எஸ்.கே.ஜயதிலக்க
*MBBS, Dip. Medical Micro., MD (Microbiology)*

## வதிவிட உடல் நோய நிபுணத்துவ மருத்துவர்கள்

மருத்துவர் (திருமதி) சியாமா சுபசிங்க
*MBBS, MD*

## வதிவிட சிறுநீரக நோய் நிபுணத்துவ மருத்துவர்கள

மருத்துவர்(திரு) எம்.சீ.பீ.கலஹிட்டியாவ
*MBBS, MD (Col), MRCP (UK)*

## வதிவிட பாலியல் மற்றும் சிறுநீரக நிபுணத்துவ சத்திரசிகிச்சை மருத்துவர்கள்

மருத்துவர் (திரு) எல்.நிரோஷன் செனவிரத்ன
*MBBS (Col), MS (SL), MRCS (UK)*

# 3. தொழிற்பாட்டுத் தகவல்கள்



# 3.1 செயற்றிறன் சாராம்சம்



1983ம் இலக்க 54ம் பாராளுமன்றச் சட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை 1984 செப்ரம்பர் மாதம் 17ம் திகதி திறக்கப்பட்டது. கௌரவ சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிர்வாகம் செய்த பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவனை மருத்துவ நோயாளர் சிகிச்சைச் சேவைகள் வழங்குவதைவிட மேலதிகமாக பட்டதாரி எதிர்பார்ப்பாளர்களுக்கும் பட்டப்பின் படிப்பு பட்டதாரி எதிர்பார்ப்பாளர்களுக்கும் பயிற்சி வழங்கும் நிலையமுமாக விளங்குகிறது.

2013 ம் வருடத்தில் வைத்தியசாலையில் பணிக்குழு உறுப்பினர் எண்ணக்கை 1706 ஆகும்.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி |
|---|---|---|
| நிறைவேற்று பதவியினர்கள் | 17 | 17 |
| நிபுணத்துவ மருத்துவர்கள் | 41 | 38 |
| மருத்துவர்கள் | 140 | 255 |
| தாதி பணிக்குழு | 580 | 548 |
| இடைப்பட்ட மருத்துவர் பணிக்குழு | 110 | 97 |
| ஓடலி பணிக்குழு | 437 | 361 |
| தொழிலாளர்கள் | 26 | 16 |
| மாணவத் தாதிகள | 300 | 99 |
| அமய தொழிலாளர்கள் | - | 54 |
| ஏனைய பணிக்குழுவினா | 153 | 107 |
| முகாமைத்துவ உதவியாளா | 122 | 114 |

வைத்தியசாலை மூலம் வழங்கப்படும் உள்ளக மற்றும் வெளியக நோயாளர் சிகிச்சைச் சேவை சம்பந்தமாக சுடடிகளின் ஒப்பு நோக்கும் சாராம்சம் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| சுட்டிகள் | 2012 | 2013 | அதிகரிப்பு இறக்கம் % |
|---|---|---|---|
| 1.நோயாளர் கட்டில்களின் எண்ணிக்கை | 1088 | 1078 | -0.92 |
| 2.சேர்க்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை | 57119 | 54283 | -4.96 |
| 3.நோயாளர் தங்கும் சாதாரண (நாட்கள்) | 4.8 | 4.6 | -4.17 |
| 4.தீவிர சிகிச்சைப் பிரிவிற்குச் சேர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1305 | 1085 | -20.27 |
| 5.மருத்துவமனைக் கட்டில்கள் பாவிக்கும் விகிதம் % | 70.5 | 64.1 | -9.08 |
| அ. சாதாரண வாட்டுக்களில் கட்டில்கள் பாவிக்கும் விகிதம் % | 71.6 | 65.1 | -9.08 |
| ஆ. கொடுப்பனவு வாட்டுக்களில் கட்டில் பாவிக்கும் விகிதம் % | 55.6 | 58.1 | 4.50 |
| 6.வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர் எண்ணிக்கை | 16532 | 18843 | 13.98 |
| 7.கிளினிக்குக்களில் கலந்து கொண்ட நோயாளர்களின் எண்ணிக்கை | 147757 | 151156 | 2.30 |
| 8.செய்யப்பட்ட முழு அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 13613 | 13630 | 0.12 |
| 9.செய்யப்பட்ட இருதய அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 216 | 199 | -7.87 |
| 10.செய்யப்பட்ட சிறுநீரக இணைப்பு எண்ணிக்கை | 21 | 16 | -23.81 |
| 11.செய்யப்பட்ட இரத்தக் கசிவு எண்ணிக்கை | 4297 | 5228 | 21.67 |
| 12.செய்யப்பட்ட எக்கோ பரிசோதனைகளின் எண்ணிக்கை | 12385 | 12760 | 3.03 |
| 13.செய்யப்பட்ட ECG எண்ணிக்கை | 38431 | 35300 | -8.15 |
| 14.செய்யப்பட்ட X கதிர் எண்ணிக்கை | 41895 | 43284 | 3.32 |
| 15.செய்யப்பட்ட கண் பரிசோதனை எண்ணிக்கை | 4347 | 4265 | -1.89 |
| 16.செய்யப்பட்ட போசணை ஆலோசனை எண்ணிக்கை | 1904 | 2129 | 11.82 |
| 17.செய்யப்பட்ட பேச்சு பயிற்சி எண்ணிக்கை | - | 710 | - |
| 18.செய்யப்பட்ட வைத்திய பரிசோதனை எண்ணிக்கை (medical Check-ups) எண்ணிக்கை | 3439 | 4370 | 27.07 |

இதன்படி ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் 2012ம் வருடத்தில் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை 16532 ஆவதோடு 2013ம் வருடத்தில் 18843 ஆனது அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 13.98% வளர்ச்சியைக் காட்டுகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை மூலம் 2013ம் வருடத்தில் வழங்கிய வதிவிட நோய் சிகிச்சை சேவைகளின் ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய சாராம்சம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| பிரிவு | அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் | | அதிகரிப்பு / குறைவு (%) | படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | | அதிகரிப்பு / குறைவு (%) |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | | 2012 | 2013 | |
| உடற்கூறு மருத்துவ பிரிவு | 19,714 | 16,496 | -19.53 | 126.13 | 105.87 | -19.14 |
| அறுவை சிகிச்சைப் பிரிவு | 7,115 | 6,927 | -2.71 | 54.83 | 47.88 | -14.52 |
| பிரசவ நரம்பியல் பிரிவு | 8,706 | 8,659 | -0.54 | 93.42 | 88.48 | -5.58 |
| குழந்தைகள் நோய் பிரிவு | 3,796 | 3,091 | -22.81 | 81.28 | 63.52 | -27.96 |
| தொண்டை, காது, மூக்கு பிரிவு | 1,378 | 1,331 | -3.53 | 32.57 | 31.91 | -2.07 |
| எலும்பு முறிவு பிரிவு | 2,107 | 2,174 | 3.08 | 59.31 | 59.7 | 0.65 |
| கண் நோய் பிரிவு | 1,690 | 1,726 | 2.09 | 56.43 | 58 | 2.71 |
| இருதய நோய் பிரிவு | 2,089 | 2,042 | -2.06 | 62.40 | 58.23 | 52.05-67.05/ |
| இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு | 610 | 540 | -11.48 | 47.90 | 45.89 | -22.90 |
| தோல் நோய்ப் பிரிவு | 101 | 82 | -23.17 | 16.47 | 22.53 | 26.90 |
| குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு | 952 | 901 | -5.66 | 71.67 | 73.51 | 2.50 |
| மூட்டுவாதம் மற்றும் புனர்வாழ்வளிப்புப் பிரிவு | 115 | 46 | -150.00 | 11.37 | 6.52 | -74.39 |
| நரம்பியல் பிரிவு | 340 | 429 | 20.75 | 52.05 | 67.05 | 28.82 |
| நரம்பு அறுவைச் சிகிச்சை பிரிவு | 1,052 | 958 | -9.81 | 35.58 | 49.25 | 27.76 |
| சிறுநீரகம் மற்றும் இரத்தக் கசிவு பிரிவு | 4,855 | 5,737 | 15.37 | 72 | 66.98 | -7.49 |
| பொது தீவிர சிகிச்சைப் பிரிவு | 992 | 794 | -24.94 | 110.5 | 93.99 | -17.57 |
| இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவு | 313 | 291 | -7.56 | 64.87 | 48.92 | -32.60 |
| கொடுப்பனவு வாட்டு தரம் I | 1,737 | 1,950 | 10.92 | 105.29 | 107.99 | 2.70 |
| கொடுப்பனவு வாட்டு தரம் II | 4,806 | 5,072 | 5.24 | 44.31 | 47.33 | 6.38 |

2013ம் வருடத்திற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையில் சுருக்கமான செயற்திறன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | பணம் ரூபா.000 | | அதிகரிப்பு / குறைப்பு | |
|---|---|---|---|---|
| | 2012 | 2013 | பெறுமதி ரூபா.000 | விகிதம் (%) |
| நடவடிக்கைகளுக்காக கிடைத்த வருமானம் | 993,119 | 1,120,511 | 127,392 | 12.83 |
| அரச ஒதுக்கீடு மீண்டுவரும் செலவு | 827,234 | 999,600 | 172,366 | 20.84 |
| வேறு வருமானம் | 32,251 | 31,788 | (463) | (1.43) |
| வேறு நடவடிக்கை வருமானம் வட்டி | 5,376 | 5,514 | 138 | 2.57 |
| முழு வருமானம் | 1,857,980 | 2,157,414 | 299,434 | 16.12 |
| | | | | |
| வழங்கல் பொருட்களுக்கான செலவு | 600,359 | 599,144 | (1,215) | (0.20) |
| சம்பளம் மற்றும் வேதனச் செலவு | 1,065,492 | 1,151,106 | 85614 | 8.04 |
| பெறுமானத் தேய்வுகளும் பதிலீடுகளும் | 110,397 | 146,724 | 36,327 | 32.91 |
| வேறு நடைமுறைச் செலவு | 304,216 | 308,147 | 3931 | 1.29 |
| முழுச் செலவு | 1,970,067 | 1,958,397 | 11,670 | 0.59 |
| | | | | |
| நடவடிக்கைகளால் கிடைத்த இலாபம் / நட்டம் | -112,097 | 99,017 | 211,114 | 188 |
| நிதிச் செலவு | 2,756 | 3,827 | 1071 | 38086 |
| வேறு செலவு | - | - | - | - |
| வரி செலுத்த முன் இலாபம் / நட்டம | -114,844 | 95,190 | 210,034 | 182.89 |
| வரிமானவரி | 4,330 | 2,903 | (1.472) | (32.96) |
| **வரிசெலுத்தியதன் பின்னரான இலாபம் / நட்டம்** | -119,174 | 92,286 | 211,460 | 177.44 |

2013ம் வருடத்தில் கடந்த வருடத்திற்கேற்ப மருத்துவமனை வருமானம் ரூபா 211 மில்லியன் அதிகரித்துள்ளதோடு அதன் அதிகரிப்பு 177.44% ஆகும்.

2013 ஆம் ஆண்டு மருத்துவமனையில் நடாத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் கீழ்க்காணும் செயற்றிட்டங்களை பிரதானமாகக் குறிப்பிடலாம்.

1. கணினி பட்டியலில் தயாரித்தல் தொகுதி நிர்மாணித்தல்.
2. மருத்துவமனை கணினி வலையமைப்பு நிர்மாணித்தல்.
3. மருத்துவப் பரிசோதனை பிரிவினை புதிய இடத்தில் நிர்மாணித்தல்
4. 4வாட்டுகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்
5. வெற்றிடமான பதவிகளுக்கான ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் புதிய பதிவிகளை உருவாக்குதல்
6. பாலியல் நோய்களுக்காக அறுவைச் சிகிச்சைச் சேவையினை வழங்குதல்.
7. எதிர்கால 5 வருடங்களுக்காக மருத்துவமனை இணைந்த திட்டத்தினைத் தயாரித்தல்.
8. இருதய அறுவைச் சிகிச்சைக்காக நவீன தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல
9. சுகாதார தகவல் பிரிவினை நிர்மாணித்தல்.
10. மருத்துவமனைச் சூழலில் சுகாதாரக் கல்வி பல்கலைக்கழக விஞ்ஞான நிறுவனத்தினை நிர்மாணித்தல்.
11. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் வைத்திய பீடத்தோடு இணைந்த பேராசியர் பிரிவினை அமைத்தல்.
12. தீயணைப்புத் தொகுதியினை நிர்மாணித்தல்

(மேற்படி செயற்றிட்டங்களின் மேலதிக விபங்களுக்காக தயவு செய்து 13ம் பக்கத்தினைப் பார்க்கவும்.)

# 3.2 முழுச் செயற்றிறன்

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பு நோக்கும் போது 2013 வருடத்தில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றோரின் எண்ணிக்கை கிளினிக்கிற்காக பங்குபற்றிய நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் நடாத்தப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை யாவும் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.



கடந்த 5 வருடங்களோடு ஒப்பிடும் போது 2013ம் வருடத்தில் அதிகமாக வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் மருத்துவமனையின் வருமானம் குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு மேலதிகமாக கடந்த வருடத்தைப் போல கிளினிக்குகளிற்காக கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் நடத்தப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 55142 | 53962 | 52554 | 57119 | 54283 |
| வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை | 16222 | 15536 | 16434 | 16533 | 18843 |
| கிளினிக்குகளில் கலந்துகொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 153591 | 149923 | 147289 | 147757 | 151156 |
| நடாத்தப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 17249 | 14152 | 13173 | 13613 | 13630 |
| படுக்கைகள் உபயோகப்படுத்தும் விகிதாசாரம் (%) | 74.70 | 66.10 | 66.80 | 70.47 | 64.07 |
| மருத்துவமனை வருமானம் (ரூபா மில்லியன்) | 1529 | 1623 | 1693 | 1857 | 2157 |






# 3.3 பகுதி மீளாய்வு

## I. பொது மருத்துவப் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பொது மருத்துவ பிரிவு சகல நவீன நோயாளிகளுக்கான கவனிப்பு வசதிகளுடன் கூடிய 3 காவறைகளைக் (காவறை இலக்கம் 6, 12. 17) கொண்டுள்ளது. பொது மருத்துவ பிரிவின் மூலம் வெளிநோயாளர் சிகிச்சை மேற்கொள்ளப்படுவதோடு, நீரிழிவு உட்பட ஏனைய சுரப்பி வகையில் உள்ளாரசுரக்கும் நோய் சார்ந்த நிலைமைகளுக்கு விசேட கிளினிக்குகளும் நடாத்தப்படுகின்றன. இலங்கையில் உயர் அத்துடன் அதிகரித்து வரும் காசநோய் சம்பந்தமான விசேட கிளினிக்கு மூலம் காசநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது. பல மருத்துவ குழுக்கள் பல்வேறுபட்ட அவசர மற்றும் நாளாந்த மருத்துவ சிகிச்சை சேவைகளில் ஈடுபடுவதோடு, மிகச்சிறந்த சேவையொன்று வழங்குவதற்கு ஏனைய விசேட பிரிவுடன் நெருங்கிய உறவை பேணி பணியாற்றுகின்றன.



மார்புச்சளி சாந்த பல்வேறு நோய்களை நிர்ணயிப்பதற்கும் அதற்கு சிகிச்சை அளிப்பதற்கும் நவீன Fiber–Optic bronchoscopy வசதிகள் பொது மருத்தவ பிரிவினால் வழங்கப்படுகின்றது. இரப்பை நோய் சம்பந்தமான சிகிச்சையளிப்புக்காக endoscopic வசதிகளையும் பொது மருத்தவப் பிரிவு கொண்டுள்ளது.

பொது மருத்துவப் பிரிவு காவறைகளுக்காக 2013 ஆம் வருடத்தில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை கிளினிக்குகளிற்கு கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் படுக்கைகள் பாவனை விகிதம் கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது குறைவாக உள்ளது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகள் | 338 | 395 | 344 | 395 | 391 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 39301 | 39421 | 36863 | 39638 | 38508 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 17291 | 17009 | 16986 | 19714 | 16493 |
| படுக்கைகள் உபயோகப்படுத்தும் விகிதாசாரம் (%) | 111.28 | 109.53 | 115.87 | 126.13 | 105.81 |






# II.சத்திரசிகிச்சை மருத்துவப் அலகு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் அறுவைச் சிகிச்சை பிரிவு சாதாரண 3 காவறைகள் (காவறை இலக்கம் 8, 14, 15) உட்பட கட்டணம் செலுத்தும் காவறைகள் ஆகியவற்றைக் கொண்டு நோயாளிகளுக்கான கவனிப்புச் சேவையை வழங்குகின்றது. அறுவைச் சிகிச்சைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சைச் கிளினிக்குகள் மூலம் அறுவைச் சிகிச்சைக்கு முன்னரான அத்துடன் பின்னரான சேவைகள் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை நவீன வசதிகளுடன் கூடிய சத்திரசிகிச்சைக்கூட வசதிகளுடன் சிக்கலான அறுவைச் சிகிச்சை நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட நவீன அறுவைச் சிகிச்சை தீவிர கண்காணிப்புப் பிரிவையும் கொண்டுள்ளது. உடலுக்குள் சிறிய கமெராவை செலுத்தி மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட குணமடையாத நோய்களுக்கான பரிசோதனை. நோயாளிகளுக்கான கவனிப்புச் சேவை போட்டிகரமான விலைகளின் கீழ் அறுவைச் சிகிச்சை பிரிவினால் வழங்கப்படுகின்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மூலம் மேற்கொள்ளப்படும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் மிக குறுகிய காலப்பகுதிக்குள் வெற்றிகண்டுள்ளன.



இலங்கையில் தற்போதைய நோய் நிலை தொடர்பிலான போக்கை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் ஊடாக மார்பகம் சார்ந்த நோய் நிலைமைகளுக்காகவும் பல்வேறு சிகிச்சை சேவைகள் வழங்கப்படுகின்றன. மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் மார்பக மீள் சீராக்கல் அறுவை சிகிச்சையும் கூட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுகின்றது. நோயாளிகளின் வசதி கருதி அறுவைச் சிசிச்சை பிரிவின் மூலம் ஒருநாள் அறுவை சிகிச்சைச் சேவையும் வழங்கப்படுகின்றது.

உள்ளீர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பு நோக்கும் போது 2013ல் உள்ளீர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை, படுக்கை பயன்படுத்திய நோயாளிகளின் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்ட அறுவைசிகிச்சைகளின் எண்ணிக்கை மற்றும் படுக்கைகளின் பாவனை விகிதம் குறைவாக உள்ளது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 422 | 431 | 444 | 450 | 381 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 12895 | 12633 | 13001 | 13164 | 11716 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 6284 | 6358 | 6763 | 7115 | 6927 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சை | 4706 | 3751 | 3713 | 3923 | 3495 |
| படுக்கைகளின் பயன்படுத்துகை விகிதாசாரம் (%) | 58.36 | 45.36 | 47.93 | 54.84 | 47.88 |






# III. பெண் நோய், மகப்பேறு பிரிவு

சாதாரண கர்ப்பிணி தாய்மார்களிலிருந்து உட்சிக்கல் வாய்ந்த அத்துடன் அவதானம் மிக்க கர்ப்ப நிலைமைகள் வரை கவனிப்பு சேவைகள் பெண்நோய், மகப்பேறு பிரிவினால் வழங்கப்படுகின்றது. வலி தடுப்பு ஊசி, வலி தடுப்பு காஸ் (Entonox gas) மற்றும் இடுப்புப் பகுதிக்கு வழங்கு வலி தடுப்பு ஊசி பயன்படுத்தி மிக சௌகரியமான மகப்பேறு உறுதிப்படுத்தப்படுகின்றது. கரு வளர்ச்சி மற்றும் மாற்றங்களை கண்டறிதல் என்பனவற்றிற்காக செய்யப்படும் ஸ்கான் பரிசோதனைக்கு அதிநவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.புற்றுநோய் மற்றும் புற்றுநோயல்லாத நிலைமைகள் அத்துடன் Urogynecological அறுவை சிகிச்சை, பல்வேறுபட்ட நோய் நிர்ணயம், Therapeutic அறுவைச் சிகிச்சை நடவடிக்கைமுறை மற்றும் பெண்நோய் அலட்றாசவுட் ஸ்கான் பரிசோதனை உட்பட பல அவசர மற்றும் அவசரமில்லாத நரம்பு நோய் கவனிப்பு சேவைகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.



ஆரம்ப பரிசோதனையிலிருந்து தேவையான சிகிச்சை வரையிலான உயர் தரத்திலான கருவளத்துக்கான சிகிச்சையும் குடும்பக் கட்டுப்பாட்டு சேவையும் இந்த பெண்நோய், மகப்பேறு பிரிவினால் வழங்கப்படுகின்றது.

கிளினிக்குகளுக்குப் பங்கு கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது அதிகமாக இருப்பதோடு உள்வாங்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை பிறப்பு எண்ணிக்கை மற்றும் படுக்கைகள் பாவனை விகிதம் கடந்த வருடத்தினைவிட குறைவைக் காட்டுகின்றது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 288 | 291 | 294 | 335 | 327 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 28920 | 27277 | 25421 | 23901 | 26464 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 7777 | 7810 | 7871 | 8706 | 8659 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 78.81 | 82.99 | 83.25 | 93.42 | 88.48 |
| மகப்பேறுகளின் எண்ணிக்கை | 4091 | 3476 | 3877 | 4156 | 4016 |






# IV. சிறுவர் நோய் சிகிச்சை பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் சிறுவர் நோய் சிகிச்சைப் பிரிவு நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தைகளுக்கு உள்ளக மற்றும் வெளிநோயாளர் பிரிவு மூலம் சேவையை வழங்குகின்றது. சகல விதத்திலுமான அவசர மருத்துவ சிகிச்சை வழங்கும் வசதிகளுடனும் 43 படுக்கைகளையும் கொண்ட சிறுவர் காவறையின் மூலம் நோய்வாய்பட்டுள்ள குழந்தைகளுக்கு தங்கி சிகிச்சை பெறுவதற்கான சேவையை வழங்குகின்றது.சிறுவர் கிளினிக், ஆரோக்கியமான குழந்தைகளுக்கான கிளினிக், தடுப்பூசி வழங்கும் கிளினிக், சிறுவர் காசநோய் கிளினிக் போன்றவை இந்த பிரிவினால் வாராந்தம் நடாத்தப்படுவதோடு இதில் அர்ப்பணிப்புமிக்க அனுபவம் வாய்ந்த மருத்துவ பதவியணி மூலம் ஆகக்கூடுதலான கவனிப்பு சேவை வழங்கப்படுகின்றது.

கிளினிக்குகளுக்கு கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது கூடுதலாக இருப்பதோடு அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை, மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை மற்றும் படுக்கைகள் பயன்படுத்திய விகிதம் கடந்த வருடத்தை விட குறைவாகக் காட்டுகின்றது.



| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 333 | 331 | 337 | 346 | 332 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 9389 | 7836 | 7300 | 6249 | 6594 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3885 | 3564 | 3284 | 3796 | 3091 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 71.45 | 67.76 | 70.20 | 81.28 | 63.52 |






# V. தொண்டை, காது, மூக்கு சிகிச்சை (ENT) பிரிவு

மிக அனுபவம் வாய்ந்த, வினைத்திறன்மிக்க பதவியணி மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தொண்டை, காது, மூக்கு பிரிவு உள்ளக மற்று வெளிநோயாளர் சேவைகளை வழங்குகின்றது. 60 படுக்கைகளைக் கொண்ட காவறை மூலம் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கான சேவை வழங்கப்படுவதோடு, நவீன தொழில்நுட்ப கருவிகளைக் கொண்ட கிளினிக் மூலம் வெளிநோயாளர் கவனிப்புச் சேவையும் வழங்கப்படுகின்றது.

தொண்டை, காது, மூக்கு பிரிவின் கீழ் பேச்சு மற்றும் செவிப்புல பிரிவு வேறாக தாபிக்கப்பட்டள்ளது. இந்த பிரிவின் மூலம் செவிப்புல பரிசோதனையும் பேச்சு சிகிச்சை கிளினிக்கும் நடாத்தப்பட்டு வருகின்றது. தலை மற்றும் கழுத்து சார்ந்த பிரதான அறுவைச் சிகிச்சையும் சிறு கமெரா உதவியுடன் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சை அடங்கலாக பாரிய அளவிலான அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.



செவிப்புலம் சார்ந்த பல்வேறுபட்ட பரிசோதனைகளை (Pure tone audiometry, tympanometry, brainstem evoke response assessments) மேற்கொள்வதற்கு தேவையான சகல வசதிகளும் செவிப்புல பரிசோதனை கூடத்தில் உள்ளதோடு, Fiber-optic laryngoscopy மற்றும் naso-endoscopic பரிசோதனை செய்யக்கூடிய வசதிகளையும் இந்த பிரிவு கொண்டுள்ளது.

கிளினிக்குகளுக்கு கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது அதிகரிப்பைக் காட்டுவதோடு அனுமதிக்கப்பட்நோயாளிகளின் எண்ணிக்கை, மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை மற்றும் படுக்கைகள் பாவனை கடந்த வருடத்தினை விட குறைவாகக் காட்டுகிறது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 99 | 99 | 98 | 98 | 101 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 7554 | 7064 | 6382 | 6077 | 6504 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1558 | 1477 | 1314 | 1378 | 1331 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 37.58 | 34.30 | 29.70 | 32.57 | 31.91 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 690 | 687 | 543 | 539 | 493 |






# VI. எலும்பு முறிவு சிகிச்சை பிரிவு

சிறந்த முறையில் தாபிக்கப்பட்டதும் அங்கீகாரம் பெற்றதுமான எலும்புமுறிவு சிகிச்சை பிரிவொன்று ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை கொண்டுள்ளது. சுகல விதத்திலுமான எலும்புமுறிவு அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் நவீன கருவிகள் இந்த பிரிவிடம் உள்ளது. மருத்துவ பட்டப்பின் படிப்பு அபேட்சகர்களுக்கிடையில் இந்த பிரிவு மிகப் பிரபல்யமானது. முள்ளந்தண்டு சார்ந்த அறுவை சிகிச்சை (Scoliosis Cirrection Surgeries and other Specialized Surgeries) மேற்கொள்ளும் போது இந்தப் பிரிவு மிக உயர்வான வெற்றியை கண்டுள்ளது. இது இலங்கையில் சிறுவர் எலும்புமுறிவு சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் முன்னுரிமை பெற்ற மத்திய நிலையமொன்றாகும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் எலும்புமுறிவு சிகிச்சைப் பிரிவு இடுப்பு, முழங்கால், தோள், முழங்கை போன்ற மூட்டு இணைப்பு அறுவைச் சிகிச்சைகளை செய்யும் முன்னோடியான விசேட பிரிவென்றாகும். நீண்டகாலமாக வழங்கும் இந்த சேவைகள் மிகுந்த உயர் வெற்றியை கொண்டுள்ளது. நோய் நிர்ணய மற்றும் athroscopy பரிசோனையும் எலும்புமுறிவு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஸ்ரீ ஜயவா்தனபுர பொது மருத்துவமனையின் எலும்புமுறிவு சிகிச்சை பிரிவு தொழில்சாா் விளையாட்டு வீரர்களின் காயங்களுக்கு சிகிச்சை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு மருத்துவ நிலையமொன்றுமாகும்.



எலும்புமுறிவு பிரிவினூடாக நடைபெற்ற கிளினிக்குகளுக்கு பங்குபற்றிய நோயாளிகளின் எண்ணிக்கை, அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை படுக்கைகள் உபயோகப்படுத்தப்பட்ட விகிதம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது அதிகரிப்பினை காட்டுகிறது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 98 | 98 | 99 | 102 | 96 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 8761 | 8395 | 8721 | 7639 | 7964 |
| சேர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 2159 | 2240 | 1984 | 2107 | 2174 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 111.70 | 65.34 | 66.60 | 59.31 | 59.70 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 3928 | 2202 | 1966 | 1624 | 1798 |






# VII. கண் நோய் பிரிவு

பெரும்பாலான கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு முழுமையான கவனிப்புச் சேவைகளை வழங்கும் நல் அங்கீகாரம் பெற்ற கண்நோய் பிரிவொன்றை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை கொண்டுள்ளது. அதிநவீன நோய் நிர்ணய மற்றும் சிகிச்சை வசதிகளைக் கொண்ட கண் கிளினிக் வாரத்துக்கு ஐந்து நாட்கள் நடாத்தப்படுகின்றது. பொது கண் பரிசோதனை, கண்பார்வை குறைபாட்டுக்கான சிகிச்சையளித்தல், நீரிழிவு நோயினால் உருவான கண் குறைபாடுகளுக்கு சிகிச்சையளித்தல் என்பன கண்நோய் கிளினிக்கில் மேற்கொள்ளப்படுகின்றன. கண் சத்திரசிகிச்சை கூடம் நவீன நோய் நிர்ணய மற்றும் சிகிச்சை வசதிகளுடன் அரசாங்கத்துக்குச் சொந்தமான தரம் வாய்ந்த சத்திர சிகிச்சை கூடமாகும்.

பரந்துபட்ட நவீன கண் பரிசோதனை (Fundus fluorescein angiography and indocyanine green angiography facilities) நீரிழிவு மற்றும் வேறு பல காரணங்களினால் உருவாகும் கண் குறைபாடுகளுக்கான லேசர் சிகிச்சை (focal laser treatment and pan retinal photocoagulation for diabetic retinopathy and other vascular disorders of the eye), முதுமை காரணமாக ஏற்படும் கண்பார்வைக் குறைபாடு (age related macular degeneration with photodynamic therapy) சார்ந்த சிகிச்சை, அதி நவீன கண்பரிசோதனை கருவிகள் (anterior segment OCT, biometry facilities with IOL master corneal topographic facilities and ultrasound A & B scan facilities) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் கண்நோய் பிரிவிலுள்ள சில வசதிகளாகும்.



கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் கண் கிளினிக் சார்பில் வந்த நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரிப்பு காணப்பட்டதோடு, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013ம் வருடத்தில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் மற்றும் படுக்கைகளின் பாவனையின் விகிதம் அதிகரித்துள்ளன.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 140 | 140 | 144 | 148 | 262 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 14837 | 14651 | 14538 | 15356 | 15649 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1931 | 1742 | 1766 | 1690 | 1719 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 68.14 | 57.51 | 61.30 | 56.40 | 58.51 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 3814 | 3782 | 3506 | 3572 | 3560 |






# VIII. இருதய நோய் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் இருதய நோய் பிரிவானது, இருதய நோய் காவறை, இருதய சிகிச்சைப் பிரிவு (Coronary Care Unit) High Dependency Unit (HDU), Cardiac Catheterization ஆய்வுகூடம், இருதய பரிசோதனைப் பிரிவு ஆகிய விசேட இருதயநோய் கவனிப்பு சேவைகளை வழங்கும் பிரிவுகளைக் கொண்டதாகும். பல்வேறுபட்ட கடுமையான மற்றும் நாட்சென்ற இருதயநோய் சார்பில் இருதயநோய் காவறைகள், இருதய நோய் கவனிப்பு பிரிவு, HDU ஆகியவற்றின் மூலம் கவனிப்புச் சேவை வழங்கப்படுகின்றது. மிகக் கடுமையான அத்துடன் அவசர இருதயநோய் நிலைமை சார்பில் அனுபவம் மிக்க அர்ப்பணிப்புடனான பதவியணியொன்றின் மூலம் வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்படுகின்றது.



Cardiac Catheterization சேவை மூலம் முன்னர் திட்டமிடப்பட்ட அதேபோன்று அவரச நிலைமைகளிலும் குருதி நாள பரிசோதனை (Coronary angiography) தோல்களூடாக செய்யப்படும் இருதய நோய் சிகிச்சை (Percutaneous Coronary interventions) வலது இருதய Catheterization தற்காலிக மற்றும் நிலையான Pacemaker பொருத்துதல், ASD Closure போன்ற பரிசோதனைகளும் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. echo பரிசோதனை உடலில் பொருத்தும் சிறிய கருவியின் மூலம் குருதி அழுத்தம் மற்றும் ECG உட்பட பரந்துபட்ட பரிசோதனைகளும் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது இருதய நோய் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை. கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை, என்ஜியோகிராம் பரிசோதனைகளின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகள் முழுவதும் தொடர்ச்சியாக அதிகரிப்பினை காட்டுவதோடு, படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரமானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது கணிசமான குறைவினைக் காட்டுகின்றது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 97 | 99 | 99 | 100 | 95 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 5027 | 5234 | 5582 | 6123 | 5929 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1813 | 1829 | 1944 | 2089 | 2042 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 68.30 | 52.10 | 55.50 | 62.40 | 58.23 |
| என்ஜியோ கிராம் பரிசோதனையில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 445 | 483 | 542 | 579 | 560 |






# IX. இருதய அறுவைச் சிகிச்சை பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையிலுள்ள இருதய அறுவைச் சிகிச்சை பிரிவானது அரசாங்கத்திற்கு சொந்தமான சிறப்பான பிரிவொன்றாகும். நீண்டகாலம் எடுக்காது சகல விதத்திலுமான இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் மூன்றாம் நிலை சேவைகள் நிலையமொன்றாக இது பிரபல்யமானதாகும். இருதய அறுவைச் சிகிச்சை பிரிவு வயதான நோயாளிகளுக்கு மாத்திரமன்றி சிறு பிள்ளைகளுக்கும் இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கு அனுபவம் மிக்க விசேட பிரிவொன்றாகும்.



இலங்கையில் முதற்தடவையாக இருதய அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையொன்றின் இருதயத்தில் உரியமுறையில் அமைந்திருக்காத நாளங்கள் உரியவாறு ஒழுங்கு படுத்தப்பட்டது. (transposition of great vessels) இந்த பிரிவிலாகும். இதனைவிட பல இருதய அறுவை சிகிச்சைகளை இலங்கையில் முதற்தடவையாக மேற்கொண்ட பிரிவாக இது தடம் பதித்துள்ளது.
இருதய அறுவைச சிகிச்சைக்காகவே ஒதுக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய சிறந்த சத்திர சிகிச்சைக் கூடங்கள் இரண்டினைக் கொண்டுள்ளது. அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட 10 படுக்கைகளைக் கொண்ட தீவிர கவனிப்பு கூறொன்றும் இந்த பிரிவில் உள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுமருத்துவமனையில் இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கு உட்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை, கிளினிக்குகளுக்கு சமூகமளித்த நோயாளிகளின் எண்ணிக்கை, படுக்கைகளின் பாவனை விகிதம் மற்றும் நடைபெற்ற அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது குறைவாகவே காணப்படுகின்றது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 96 | 100 | 94 | 99 | 101 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 4069 | 4015 | 3663 | 3940 | 3536 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 1030 | 964 | 776 | 923 | 831 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 66.24 | 57.08 | 72.50 | 56.40 | 47.40 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 239 | 224 | 205 | 216 | 199 |






# X. தோல் நோய் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் தோல் நோய் பிரிவு வெளிநோயாளர் சிகிச்சை, தங்கி சிகிச்சை பெறும் வழிகளில் சேவையை வழங்குகின்றது. தோல் சம்பந்தப்பட்ட சிறு அறுவைச் சிகிச்சைகள் Cauterization Electro and Cryotherapy சிகிச்சை வழங்கும் ஆற்றலும் அழகு தொடர்பு பட்ட மருத்துவ விஞ்ஞான சிகிச்சையும் பெறுமதி சேர்க்கின்றது.

தோல் சார்ந்த தொற்று, அலர்ஜிக், புற்றுநோய் சார்பு அத்துடன் புற்றுநோய் சாராத கட்டிகள் மற்றும் அழகுக்கு முக்கியமான தோல் சார்ந்த நிலைமைகள் அடங்கலாக பரந்துபட்ட தோல் நோய் நிலைமைகளுக்கு இந்தப் பிரிவின் ஊடாக சிகிச்சையளிக்கப்படுகின்றது. பருக்களுக்கான சிகிச்சை, சிறு திசுக்களை அகற்றுதல், வெண் குஷ்டம் போன்றவற்றுக்கான தோல் இடல் சிகிச்சை, பருக்களினால் தோலில் ஏற்படும் கரும்புள்ளிகளுக்கான இரசாயன சிகிச்சை, தோல் சுருங்குதல் நிறமாற்றத்துக்கான சிகிச்சை தோல் சார்ந்த திசுப் பரிசோதனை, கடுமையான தோல் நோய்களுக்கு தங்க வைத்து மருத்துவ சிகிச்சை, சிரங்கு, குஷடம், தொழுநோய் போன்ற நோய்களுக்கு சிகிச்சை, சிறு தோல் அறுவை சிகிச்சை முடி உதிர்தல் சார்பில் மருத்துவ சிகிச்சை நகம் சார்ந்த நோய்களுக்கான சிகிச்சை இந்த பிரிவின் மூலம் வழங்கப்படும் சில சேவைகளாகும்.



கடந்த 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளமையை காட்டுவதோடு, கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்கு களின் எண்ணிக்கை | 171 | 188 | 193 | 207 | 217 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3659 | 4321 | 4972 | 4956 | 5518 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 35 | 57 | 52 | 101 | 82 |






# XI. பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்புப் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்புப் பிரிவு III ஆம் மட்டத்துக்குரிய இலங்கையில் தரம் வாய்ந்த பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்பு பிரிவாகுமென்பதோடு முதன்மையான கலந்தாய்வு மற்றும் பயிற்சியளிக்கும் நிலையமொன்றுமாகும்.

மருத்துவமனையில் பிறக்கும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் அதேபோன்று பிற அரசாங்க மற்றும் தனியார் மருத்துவசாலைகளில் இருந்து அனுப்பப்படும் குழந்தைகளுக்கான சிகிச்சையளிப்பது இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.



நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு கவனிப்பு சேவைகளை வழங்குவதற்கு மேலதிகமாக நிபுணத்தவ மருத்துவ மற்றும் தாதி சேவைகளை வழங்கி 27 வாரங்கள் கொண்ட வளர்ச்சியடையாத அத்துடன் 500 கிராமுக்குக் குறைந்த எடையுடைய குழந்தைகளில் பலரை வாழவைக்கும் ஆற்றல் இந்த பிரிவுக்கு உள்ளது.

நுரையீரல் குறைபாடுகளுக்கு சுவாசிப்பதற்கு இலகுபடுத்தல், தொற்றுக்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சையளித்தல் சிகிசசை போன்ற கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தை நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல், சிகிச்சை போன்ற கடுமையான நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்கும் போது மிக முக்கியமான நடவடிக்கை முறைகள் சம்பந்தமாக பல வருடங்களாக பெற்ற அனுபவம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்தவமனையின் பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்புப் பிரிவு கொண்டுள்ளது.

கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது 2013 ஆம் வருடத்தில் இந்தப் பிரிவின் படுக்கைப்பாவனை விகிதம் அதிகரித்துக் காட்டப்படுகின்றது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்கு களின் எண்ணிக்கை | 46 | 46 | 44 | 48 | 49 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 982 | 1054 | 1101 | 1327 | 1281 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 892 | 916 | 824 | 952 | 901 |
| படுக்கைகளின் பயன்படுத் துகை விகிதாசாரம் (%) | 46.08 | 83.80 | 71.10 | 71.67 | 73.51 |






# XII. மூட்டுவாதம் மற்றும் புனர்வாழவுப் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்தவமனையின் மூட்டுவாதம் மற்றும் புனர்வாழ்வளிப்பு பிரிவின் மூலம் தங்கி சிகிச்சை பெறும் சேவையும் அதேபோன்று வாரத்தில் மூன்று நாட்கள் நடாத்தப்படும் கிளினிக் ஊடாக வெளிநோயாளர் சிகிச்சை கவனிப்பு சேவையும் வழங்கப்படுகின்றது.



பரந்துபட்ட மூட்டுகள் சார்ந்த நோய் (Osteoarthritis, Rheumatoid arthritis and Psoriatic arthritis) உட்பட திசுகள் சம்பந்தப்பட்ட நோய் (SLE, Mixed Connective tissue disorders) சார்பில் அனுபவம் மிக்க சிறந்த பயிற்சியுடனான மருத்தவ பதவியணியொன்றின் மூலம் நோயாளிகள் கவனிப்பு சேவையை வழங்குகின்றது. Osteoporosis மற்றும் நீண்டகால வலி அறிகுறிகளை (Chronic Pain Syndromes) சார்பிலும் இந்தப் பிரிவு விசேட கவனம் செலுத்துகின்றது. நோயாளிகளின் வாழ்கை நிலையை கட்டியெழுப்புவதற்கு மூட்டுவாதம் மற்றும் புனர்வாழ்வளிப்பு பிரிவு ஏனைய பிரிவுகளுடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும், கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளமையை காட்டுகின்றது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 143 | 144 | 142 | 141 | 155 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3581 | 4287 | 3727 | 3806 | 3372 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 115 | 118 | 65 | 115 | 46 |






# XIII. நரம்பு சார்ந்த நோய் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்தவமனையின் நரம்பியல் சார்ந்த நோய் பிரிவு மூலம் ஆபத்தான அத்துடன் ஏனைய நரம்பு சார்ந்த நோய்களுக்கான சிகிச்சை தங்கி அத்துடன் வெளிநோயாளர் பிரிவு மூலம் வழங்கப்படுவதோடு, நரம்பு சார்ந்த நோய் பரிசோதனைகளைச் செய்வதற்கு தேவையான சகல கருவிகளையும் வசதிகளையும் கொண்டுள்ளது. நோயாளிகளுக்கான சிகிச்சை, பரிசோதனை மற்றும் புனர்வாழ்வளிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு புறம்பான பிரிவொன்று (Stroke Unit) இந்த பிரிவினால் நடாத்திச் செல்லப்படுகின்றது. நரம்பு முறைமை சார்ந்த நவீன பரிசோதனைகளுக்கான வசதிகள் electroencephalography (EEG), nerve conduction studies (NCS) electromyography (EMG) and evoked potential studies (VEP, ABR, SEP) இந்த பிரிவு கொண்டுள்ளது. நரம்பு நோய் கவனிப்பு சேவைகளை வழங்குவதற்கு நரம்பு அறுவைச் சிகிச்சை மருத்துவ பிரிவு, மூட்டு வாதம் மற்றும் புனர்வாழ்வளிப்பு பிரிவு, ஊடுகதிர்பிடிப்பு, பௌதீக சிகிச்சை, பேச்சு சிகிச்சை போன்ற பிரிவுகளுடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது.



கடந்த 5 வருடங்களில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 2013ம் வருடத்தில் கணிசமான அளவில் இருந்ததுடன் படுக்கைகளின் விகிதமும் 2012ம் வருடத்துடன் ஒப்பிடும் போது அதிகரித்துக் காட்டுகின்றது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 96 | 96 | 102 | 93 | 96 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 2394 | 2063 | 2615 | 3245 | 2480 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 140 | 81 | 128 | 340 | 429 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 116.86 | 14.51 | 26.90 | 52.05 | 67.05 |






# XIV. நரம்பியல் நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு



ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நரம்பியல் நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு சகலவிதமான அவசரமானதும், அவசரமற்றதுமான மூளை மற்றும் முள்ளந்தண்டு அறுவை சிகிச்சையைச் செய்வதற்கு அங்கீகாரம் பெற்ற பிரிவொன்றாகும். அறுவை சிகிச்சைக்குப் பின்னரான நோயாளிகளின் கவனிப்பு சேவைகளுக்கு மண்டையோடு அழுத்தம் அளவீடு Intra cranial pressure அளவிடுகை உட்பட அதிநவீன வசதிகளைக் கொண்ட ஆறு படுக்கைகளுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவும் ஆறு படுக்கைகளைக் கொண்ட HDU பிரிவும் நரம்பியல் நோய் அறுவை சிகிச்சைப் பிரிவில் உள்ளது.

மண்டையோடு மற்றும் முள்ளந்தண்டு சார்ந்த அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சகல வசதிகளையும் கொண்ட நரம்பு சத்திர சிகிச்சைக்கூடம் aneurysm Surgeries, நரம்போடு சார்ந்த புற்று நிலைமை neuro-oncological Surgeries, skull base Surgeries, endoscopic pituitary Surgeries, micro vascular decompression Surgeries, reconstructive Surgeries விபத்துக் காரணமாக ஏற்படும் சேதங்களுக்கான அறுவைச் சிகிச்சை (trauma Surgeries) முள்ளந்தண்டு சார்ந்த பல்வேறுபட்ட அறுவைச் சிகிச்சைகள் (neuro-spinl Surgeries including occipitocervical fixation, trans-oral odontoidectomy and fixation, anterior cervical discectomy and replacement, posterior lateral mass screw fixation, cervico-thoracic fixation, and posterior and transverse lumbar inter-body fusions) போன்றவற்றை மேற்கொள்வதற்கு வசதிகள் வழங்குகின்றது.

கடந்த 5 வருடங்களுக்குள் கிளினிக்குக்கு அதிகமாகக் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை 2013 ஆம் வருடத்தில் உள்ள படுக்கைகளின் விகிதாசாரமும், செய்யப்பட்ட அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 2012ஆமவருடத்தோடு ஒப்பிடும் போது அதிகமாகும்.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 95 | 93 | 92 | 106 | 101 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1132 | 850 | 650 | 851 | 1465 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 1015 | 963 | 763 | 1052 | 958 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 400.59 | 82.56 | 34.00 | 35.58 | 49.25 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை | 340 | 194 | 67 | 156 | 176 |






# XV. சிறுநீரக மற்றும் குருதி சுத்திகரித்தல் பிரிவு

சிறுநீரக மற்றும் குருதி சுத்திகரித்தல் பிரிவு சிறந்த சிறுநீரக நோய் மருத்துவ பதவியணியினரையும் உயர் தொழில்நுட்ப வசதிகளையும் கொண்டு உயர் தரம் வாய்ந்த நோயாளிகள் கவனிப்புச் சேவையை வழங்குகின்றது. இந்த சிறுநீரகம் சார்ந்த பல்வேறு பரிசோதனைகளை (Ultrasonic renal imaging, renal Doppler studies and ultrasound guidance invasive procedures) இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.



14 படுக்கைகளைக் கொண்ட குருதி மாற்றல் பிரிவு சிறந்த பயிற்சியுடனான மருத்துவ மற்றும் தாதி பதவியணியினர்களின் மூலம் செய்யப்படுவதோடு, தடுப்பூசி, குருதிச் சோகை, எலும்புக் கட்டுப்பாடு மற்றும் போசாக்கு ஆலோசனைச் சேவைகளின் மூலம் நோயாளிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துகின்றது. இதுவரை வெற்றிகரமான 150 சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகளை செய்துள்ள இந்த பிரிவின் வெற்றிக்கு பல்குழு மூலம் (Multidisciplinary Team) வழங்கும் அறுவை சிகிச்சைக்கு முன்னைய மற்றும் பின்னைய சேவை மிகமுக்கியமானதாகும்.

கடந்த 5 வருடங்களுடன் ஒப்பிடும்போது அதிகமாக அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் படுக்கைகளுக்கு பாவித்துக்கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டை விட அதிகமாகும்

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 144 | 142 | 142 | 144 | 147 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 9446 | 9876 | 9751 | 10351 | 11027 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளி களின் எண்ணிக்கை | 5464 | 5653 | 5462 | 4855 | 5737 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 87.2 | 85.85 | 72.10 | 72.00 | 66.98 |
| மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை | 16 | 11 | 12 | 21 | 16 |






# XVI. உணர்விழப்புப் பிரிவு

சகல வகையான அறுவைச் சிகிச்சைக்களுக்குமான உணர்விழப்புச் செய்யப்பட்ட நோயாளர்கள் மிகவும் உயர் மட்டத்தில் அவதானிக்கக் கூடிய வகையில் மிக நவீன கண்காணிப்பு வசதிகளைக் கொண்டதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை அறுவை சிகிச்சைகளில் சிறந்து விளங்குகின்றது. இருதய சத்திர சிகிச்சை உட்பட சகல சிகிச்சைகளுக்காகவும் உணர்விழப்பு வழங்குதல், சிறந்த சத்திர சிகிச்சைச் சேவைகள் வழங்குதல் சத்திர சிகிச்சையின் பின்னர் வேதனை நீக்கும் சேவை வழங்குதல், குழந்தைப் பிரசவத்தின் போது தாய்மார்களுக்காக வேதனை ஒழிப்பு மருந்து (epidural) வழங்குதல், மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகளில் நோயாளிகளுக்காக சிகிச்சை சேவை வழங்குதல் உணர்விழப்பு பிரிவுகளில் வழங்குகின்ற சில சேவைகள் ஆகும். தீவிர சிகிச்சை சேவை வழங்குவதற்காக இந்தப் பிரிவு மிகவும் விசேட பிரிவாக விளங்குகின்றது. விசேட சேவையினை வழங்குவதற்காக உணர்விழப்பு மருத்துவக் குழுவிற்கு வசதியாக நவீன வைத்திய வசதிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையில் சகல தீவிர சிகிச்சைப் பிரிவுகளிலும் வழங்கப்பட்டுள்ளன. “இருதய அழைப்பு” (Cardiac call) தொகுதி மூலம் மருத்துவமனையில் வேண்டிய இடத்திற்கு நோயாளிகளுக்கு ஏற்படுகின்ற இருதய செயற்பாடிண்மை (Cardiac arrest) நிலைமைக்காக உடனே சிகிச்சை வழங்க உணர்விழப்பு வைத்திய குழு மூலம் நடைபெறும்.



வளர்ந்தோர் மற்றும் சிறுவர்கள் உணர்விழப்பு கவனமான நிலையில் செய்யவேண்டியுள்ளதோடு அப்படியான நோயாளிகளுக்காக சிகிச்சை செய்வது சம்பந்தமாக நிபுணத்துவ மருத்துவர்கள் நான்கு பேரின் கீழ் இந்தப் பிரிவு நிர்வகிக்கப்படுகின்றது. இந்த குழு ஒன்றுபட்ட, செயற்திறன் மிக்கு மற்றும் ஊக்கமான குழு பட்டப்பின் வைத்திய பட்டப்பயிற்சி பெறம் மருத்துவர்களினதும், சிரேஸ்ட மருத்துவ உத்தியோகத்தர்களையும் கொண்டதாகும். உணர்விழப்பு வேதனைக்குறைப்பு மற்றும் தீவிர சிகிச்சை அவசியமாகின்ற முதியோர் மற்றும் சிறுவர் நோயாளிகளுக்கு சிறந்த மற்றும் பாதுகாப்பான சிகிச்சை சேவைகளை வழங்குவதற்கு அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள். ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் சகல HDU (Hight Dipendency Units) உணர்விழப்பு வைத்தியக் குழுவின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

கடந்த வருடத்தைப் போல 2012 வருடத்திலும் சிகிச்சை வழங்கப்பட்ட தீவிர சிகிச்சை நோயாளர்களின் எண்ணிக்கை கூடியுள்ளதாக தெளிவாகத் தெரிகின்றது.

14 படுக்கைகளைக் கொண்ட குருதி மாற்றல் பிரிவு சிறந்த பயிற்சியுடனான மருத்துவ மற்றும் தாதி பதவியணியினர்களின் மூலம் செய்யப்படுவதோடு, தடுப்பூசி, குருதிச் சோகை, எலும்புக் கட்டுப்பாடு மற்றும் போசாக்கு ஆலோசனைச் சேவைகளின் மூலம் நோயாளிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துகின்றது. இதுவரை வெற்றிகரமான 150 சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகளை செய்துள்ள இந்த பிரிவின் வெற்றிக்கு பல்குழு மூலம் (Multidisciplinary Team) வழங்கும் அறுவை சிகிச்சைக்கு முன்னைய மற்றும் பின்னைய சேவை மிகமுக்கியமானதாகும்.கடந்த 5 வருடங்களுடன் ஒப்பிடும்போது அதிகமாக அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் படுக்கைகளுக்கு பாவித்துக்கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டை விட அதிகமாகும்.






# XV. தீவிர சிகிச்சை பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவு கடுமையான நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவதற்காக நாட்டில் உயர்வாக அங்கீகரிக்கப்பட்ட பிரிவொன்றாகும். நோயாளிகளுக்கு வினைத்திறன்மிக்கதும் தரம் வாய்நததுமான சேவையொன்றை வழங்கும் முகமாக இந்தப் பிரிவு நவீன உயர்பாதுகாப்பு (Life Support Systems) மற்றும் Vital Sign monitoring Systems ஆகியவற்றை கொண்டுள்ளது.

தீவிர சிகிச்சை பிரிவு அனுபவம்மிக்க வதிவிட மருத்துவர்களின் மூலம் நாளொன்றின் 24 மணித்தியாலங்களும் இயங்குவதோடு கடுமையான நோய் நிலையிலுள்ள நோயாளிகளை கவனிக்கும் அத்துடன் உட்சிக்கல் வாய்ந்த தீவிர சிகிச்சைக் கருவிகளை இயக்குவதில் சிறந்த பயிற்சியையும் பெற்றுள்ள அனுபவம் மிக்க சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர்களின் மூலம் நோயாளிகள் ஒவ்வொருவரும் நெருக்கமாகக் கண்காணிக்கப்படுவர்.



சர்வதேச தரங்களுக்கு அமைவாக விசேடமாக தயாரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் மீளமைக்கப்பட்டதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான நடவடிக்கை (Protocol) முறைகளுக்கமைவாக தீவிர சிகிச்சைப் பிரிவின் சகல பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

2012 ஆம் வருடத்தோடு ஒப்பிடும் போது 2013 ஆம் வருடத்தில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளி எண்ணிக்கையும் மற்றும் படுக்கைப் பாவனை விகிதம் குறைவாகக் காட்டுகின்றது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| **அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை** | 943 | 923 | 907 | 992 | 794 |
| **படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%)** | 101.34 | 107.20 | 78.30 | 110.50 | 93.99 |






# XVI. குருதி நோயியல் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் குருதி நோயியல் பிரிவின் மூலம் பரந்த அளவிலான நோய் நிர்ணய பரிசோதனைகள் போட்டி விலைகளின் கீழ் வழங்கப்படுகின்றது. ஒருநாளில் 24 மணித்தியாலமும் இயங்கும் குருதி நோயியல் இரசாயன கூடத்தின் ஊடாக தங்கி சிகிச்சை பெறும் அதே போன்று வெளிநோயாளிகளுக்கும் நோய் நிர்ணய சேவை வழங்கப்படுகின்றது. இந்த பிரிவின் மூலம் நடாத்தப்படும் வெளிநோயாளர் கிளினிக் மூலம் குருதி சார்ந்த நோய்களுக்கான கவனிப்பு சேவைகள் வழங்கும் மிக செம்மையானதும் வினைத்திறன் மிக்கதுமான சேவைகளை வழங்குவதற்கு அதிநவீன கருவிகளைக் கொண்ட இந்த பிரிவு மருத்துவப் பட்டம் உட்பட்ட பட்டப்பின் படிப்பு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் இயங்குகின்றது.



FBC, ESR, Blood Picture போன்ற சாதாரண குருதி பரிசோதனை நிலைக்கு மேலதிகமாக குருதி சோகை, தலைசிமியா, இரத்தப்போக்கு குருதிப் புற்று நோய் போன்ற குருதி சார்ந்த புற்று நோய், குருதி கட்டியாதல் சம்பந்தமான நோய்கள் உட்பட குருதி சார்ந்த நோய்கள் சம்பந்தமான விசேட பரிசோதனையும் இந்த பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த வருடங்களோடு ஒப்பிடும் போது 2013 ஆம் வருடத்தில் கிளினிக்குக்காக கலந்துகொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை கவனிக்கத்தக்களவு அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | - | 27 | 43 | 48 | 49 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | - | 429 | 698 | 879 | 1271 |
| மேற்கொள்ளப்பட்ட பரிசோத னைகளின் எண்ணிக்கை | 250537 | 245175 | 250878 | 304421 | 272752 |
| மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 31079 | 41862 | 54930 | 57771 | 37210 |






# XVII. நோயியல் வரலாற்று பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நோயியல் வரலாற்று பிரிவின் மூலம் மிகச் செம்மையான நோய் நிர்ணயிப்பிற்காக வரலாற்று மற்றும் உயிரணு மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன. அனுவம் மிக்க மருத்துவ இரசாயனகூட பதவியணி இயைபுள்ள கிளினிக் பிரிவுகளுடன் நெருக்கமாகச் செயலாற்றி நம்பகரமான சேவையை வழங்குகின்றது.நோயில் பிரிவின் மூலம் Surgical Specimens, (அறுவைச் சிகிச்சை மாதிரி) endoscopic Specimens, (என்டஸ் கொபிமாதிரி) bronchosecopic specimens, (புறங்கொஸ்கொபி மாதிரி) Specimens, fine needls aspirations, skin biopsies, renal biopsies, frozen sections போன்ற பல்வேறுபட்ட மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன. அறுவைச் சிகிச்சைகளின் போது வழங்கப்படும் மாதிரிகள் அதிகுளிரூட்டப்பட்டு பரிசோதனைகள் செய்வதன் மூலம் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களுக்கு அறுவைச் சிகிச்சையின் போது சரியான தீர்வினை எடுப்பதற்கு இந்தப் பிரிவு உதவுகின்றது. சகல விதமான ஒழுங்கு செய்யப்பட்ட மாதிரிகள் எதிர்காலப் பரிசோதனைகளுக்காக பயன்படுத்தும் பொருட்டு 8 வருடகாலம் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைக்கப்படுகின்றது.கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் கிடைத்த மாதிரிகளின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது.



| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| கிடைத்த மாதிரிகளின் எண்ணிக்கை | 5563 | 5653 | 5386 | 5345 | 5259 |
| மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 24301 | 23484 | 22405 | 23441 | 20118 |






# XVIII. நுண் உயிரினப் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நுண் உயிரினப் பிரிவின் மூலம் பக்றீரியா, பங்கஸ், வைரஸ், குருதி சார்ந்த பரந்துபட்ட நோய் நிர்ணயிப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பக்றீரியா மற்றும் பங்கஸ் வளர்ச்சி, நுண்மை பாசோதனை, தொழுநோய், சயரோகம், இரப்பை பக்றீரியா ஆகியவற்றுக்கான பரிசோதனை இந்த நுண் உயிரினப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான அனுக்க கண்காணிப்பு surveillance cultures பரிசோதனையின் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. நுண் உயிரினப் பிரிவின் துணைப் பிரிவொன்றான Serology பிரிவினூடாக பரந்தளவில் நோய் நிர்ணயப் பரிசோதனைகள் (screening and diagnostic tests) மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் பல இரசாயன கூடங்களில் இல்லாத குருதியிலுள்ள எதிர்ப்புச் சக்தியின் மட்டத்தை நிர்ணயிப்பதற்காகப் பரிசோதனை செய்யும் வசதிகளையும் இந்தப் பிரிவு கொண்டுள்ளது. நுண் உயிரினப் பிரிவு மிக சலுகை விலைகளின் கீழ் தங்கி சிகிச்சை பெறும் மற்றும் வெளிநோயாளர்களுக்கு இந்த சேவைகளை வழங்குகின்றது.




உள்ளக தரக் கட்டுப்பாடு இரசாயனகூட ஆய்வு நிகழ்ச்சிப் பதிவு incident reporting வெளிவாரி தர மதிப்பீட்டு வேலைத் திட்டம் (EQA programme) ஆகியவற்றின் மூலம் இந்த பிரிவினால் செய்யப்படும் பரிசோதனைகளின் தரத்தை உறுதிப்படுத்தவதற்கும், மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்தப் பிரிவினூடாக பாரிய எண்ணிக்கையில் ஆராய்ச்சிகள மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அங்கீகரிக்கப்பட்ட மருத்தவ சிகிச்சைகளின் விஞ்ஞான ஆவணங்கள் பிரசுரிக்கப்பட்டள்ளன.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 2013 ஆம் வருடத்தில் நுண்மத் தொகுதிப் பரிசோதனைகளின் எண்ணிக்கை கவனிக்கத் தக்களவு அதிகரித்துள்ளது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட நுண்மத் தொகுதி பரிசோதனைகளின் எண்ணிக்கை | 22342 | 22121 | 23265 | 27341 | 30507 |
| மேற்கொள்ளப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி பரிசோ தனைகளின் எண்ணிக்கை | 4857 | 3392 | 3396 | 4512 | 4016 |
| மேற்கொள்ளப்பட்ட Serological பரிசோதனைகளின் எண்ணிக்கை | 39654 | 49321 | 33935 | 37054 | 27841 |
| மேற்கொள்ளப்பட்ட சயரோக பரிசோதனைகளின் எண்ணிக்கை | 2,079 | 1,749 | 1,999 | 2,358 | 1537 |






# XIX. உயிரின இரசாயனவியல் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்தவமனையின் உயிரின இரசாயனவியல் பிரிவின் மூலம் பல்வேறுபட்ட சுமார் 114 உயிரின இரசாயனவியல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாதாரண பரிசோதனை, விசேட பரிசோதனை, அதிவிசேட பரிசோதனை ஆகியவற்றைக் கொண்ட இந்த பரிசோதனைகள் காவறையில் தங்கி சிகிச்சை பெறும் அத்துடன் வெளிநோயாளர்களுக்காக 24 மணித்தியாலமும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சகல விதமான உயிரின இரசாயனவியல் பரிசோதனைகள் சுய பகுப்பாய்வு இயந்திரங்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, உள்ளக வெளிவாரி தரக்கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் அவற்றின் செம்மையான தன்மையும், நம்பகத் தன்மையும் உறுதிப்படுத்தப்படுகின்றது. இரசாயனகூட பரிசோதனைகள் யாவும் சிறந்த பயிற்சியையும், தகைமையையும் கொண்ட இரசாயனகூட பதவியணியொன்றின் மூலம் செய்யப்படுகின்றது.



உயிரின இரசாயனவியல் பிரிவின் மூலம் குருதி குளுக்கோஸ் பரிசோதனை, குருதியிலுள்ள கொழுப்பு பரிசோதனை, சிறுநீரக இரைப்பை சாந்த பரிசோதனை போன்ற சாதாரண உயிரின இரசாயனவியல் பரிசோதனைகளும் தைரோயிட ஹொர்மோன் பரிசோதனையும், குருதியிலுள்ள இரும்புச்சத்து பரிசோதனை புற்றுநோய் நிலைமை போன்றவற்றிற்கான குருதி பரிசோதனை, இனப்பெருக் ஹோர்மோன் பரிசோதனை Troponin T மற்றும் I பரிசோதனை hCG பரிசோதனை போன்ற விசேட உயிரின இரசாயனவியல் பரிசோதனைகளும், Serum Protein electrophoresis, urine Protein electrophoresis, Immuno - typing போன்ற அதிவிசேட உயிரின இரசாயனவியல் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சாதாரண மற்றும் விசேட பரிசோதனைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 396226 | 379259 | 401098 | 463134 | 411595 |
| மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 13111 | 14920 | 18520 | 24015 | 25430 |






# XX. கதிரியல் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் கதிரியல் பிரிவின் மூலம் பாதுகாப்பானதும் செம்மையானதுமான நோய் நிர்ணயிப்பு மற்றும் சிகிச்சை கதிரியல் சேவைகள் மிகப் போட்டிகரமான கட்டணங்களின் கீழ் தங்கி சிகிச்சை பெறும் மற்றும் வெளி நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. நன்றாகப் பயிற்சி பெற்ற வினைத்திறன் மிக்க பதவியணியொன்றின் மூலம் நாளொன்றின் 24 மணித்தியாலமும் கதிரியல் பிரிவு சேவையை வழங்குகின்றது. மிக சிறந்த சேவையை வழங்குவதற்காக நவீன அதிதொழில்நுட்ப கருவிகளை இந்தப் பிரிவு கொண்டுள்ளது.




| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 13 |
| மருத்துவ உபகரங்கள் | 20 |
| பிற சொத்துக்கள் | |
| ஏனைய கட்டடங்கள் | 05 |
| தளபாடங்கள், பொருத்துகைகள், காஸ் அடுப்பு, பிற உபகரங்கள் | 20 |

| | |
|---|---|
| மின் உபகரங்களும் கருவிகளும் | 25 |
| குளிர்சாதனப்பெட்டி, பிரதி எடுத்தல் இயந்திரம் | 15 |
| மோட்டார் வாகனங்கள் | 20 |
| மென்பொருட்கள் (உள்ளூரில் தயாரிக்கப்பட்டவை) | 100 |

3. கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் குறித்தொதுக்கப்பட்டதோடு, நீக்கப்படுமம் ஆண்டில் முழுமையான பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

4. நிதியோட்டக் கூற்று சமர்ப்பிக்கப்படுதவற்கும் பணம் மற்றும் பணம் சார்ந்தவை என்பதன் கீழ் கையிலுள்ள தொகையும் வங்கி மேலதிகப் பற்று நிலுவையும் சேர்க்கப்பட்டுள்ளது. நிதி ஓட்டக்கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மறைமுகமான முறையொன்றை அடிப்படையாகக் கொண்டாகும்.

## 3.பொறுப்புக்களும் ஒதுக்கீடுகளும்

3.1 **மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத நிகழ்வுகளும்**
ஐந்தொகை திகதியன்றுக்கான சகல பௌதிக மூலதனச் செலவுகள் சார்பில் வெளிப்படுத்தப்பட்ட பொறுப்புக் கணக்குகளுக்குரிய குறிப்புக்கள் காட்டப்பட்டுள்ளன.

3.2 **ஓய்வூதிய நலன்களுக்கான செலவு**
ஓய்வு பெறும் திகதியன்றிலிருந்து 5 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியுள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் பணிக்கொடை ஒதுக்கப்பட்டுள்ளது.2013 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று பணிக்கொடைப் பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டு ரூபா.31737572.00ஒதுக்கப்பட்டள்ளது.

3.3 **காலாவதியான மருந்துகள், அறுவை சிகிச்சை உபகரங்கள், அறவிடப்படமுடியாக் கடன் ஆகியவற்றுக்கான நிதி ஏற்பாடுகள்.**

**அ)** ஆண்டினுள் காலாவதியான மருந்துகளின் உண்மையான பெறுமதி காலாவதிகாகும் பொருட்களுக்கான ஒதக்குகையாகக் கணக்கிடப்பட்டு அதன் வித்தியாசம் வருமான மற்றும் செலவுக்கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது.

3.4 **இருப்புப் பதிவு மதிப்பீடு**

இருப்பு பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் தேறிய பெறுமதி சந்தை விலைக்கு சமமானதாகக் கருதி அந்த விலையினைவிட குறைந்த வியையான சாதாரண செலவில் இந்தப் பொருட்கள் மதிப்பிடப்பட்டுள்ளன.

3.5 **நீண்டகால பொறுப்புக்கள்**

2013.12.31ம் திகதிக்கு வைத்தியசாலை வழங்கல் பிரிவிற்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா.209,938,583.00 இதனை சுகாதார வழங்கல் பிரிவு உறுதிப்படுத்தி உள்ளது.

## 4.வருமான, செலவுக் கணக்கு

### 4.1 வருமானம்

1. சபையின் வருமானம் மருத்துவமனை கட்டணமாகக் கிடைக்கும் வருமானத்திலிருந்தும் அரசாங்கத்தின் மீண்டுவரும் கொடைகளிலிருந்தும், அழைப்பு வைப்புக்களிலிருந்தும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்களிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானங்களிலிருந்தும் ஏனைய நானாவித வருமானங்களிலிருந்தும் பெறப்படுகின்றது.

2. சகல வருமானங்களும் திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

### 4.2 செலவுகள்

1. நோயாளிகள் கவனிப்புச் சேவையை வழங்குவதற்காக ஏற்ற அத்துடன் மூலதன சொத்துக்களை வினைத்திறமையுடன் நடாத்திச் செல்வதற்கு ஏற்ற அத்தகைய எல்லா செலவுகள் ஆண்டின் மிகை வருமானம் அல்லது பற்றாக்குறை சேர்செலவுகளாக வருமானத்திற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

2. வருமான அறிக்கையை சமர்ப்பிக்கும் தேவைக்காக சபை செயலாற்றுகையை எடுத்துக்காட்டுவதற்கு செலவுகளின் தன்மையைக்காட்டும் முறைகள் போதுமானதென்பது சபையின் கருத்தாகையினால் இத்தகைய முன்வைப்பு முறையொன்று பின்பற்றப்பட்டுள்ளது.

3. தொழில்சார் கட்டணமாக ஆண்டில் சேர்ந்த 160 மில்லியன் ரூபா சபையினால் ஈட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட தொகையொன்றாக இல்லாததனால் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. இந்த தொழில்சார் கட்டணம் சபையின் ஊழியர்களினால் அவர்களுடைய வழமையான கடமை நேரங்களுக்குப் பின்னரும் விடுமுறைநாட்களிலும் தனிப்பட்ட ரீதியில் வழங்கிய சேவைகளுக்காக ஈட்டப்பட்ட தொழில்சார் கட்டணமாக அமைந்தமை இதற்குக் காரணமாகும்.

# 5. கணக்காய்வு அறிக்கை



# 5.1 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. எச்எம்/பீ/எஸ்ஜேஜீஎச்/1/13/14 | මබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2015 சனவரி 21

தலைவர்,

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1983 இன் 54 ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2014 ஆகஸ்ட் 07 ஆம் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

AGDSL

2

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின், அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கை**

---

முன்னைய ஆண்டின் சராசரி விலையில் பெறப்பட்ட இருப்பு மதிப்பீடு மீளாய்வாண்டின் போது இறுதியாகப் பெற்ற விலையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிப்பீடு செய்தலிலுள்ள வழுக்களின் காரணமாக முன்னைய ஆண்டிற்குரிய பணிக்கொடைக் கொடுப்பனவுகள் ரூபா 1,638,062 தொகை கடந்த காலங்களுக்குரியதாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாது மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வைத்தியசாலையில் மருத்துவர்களின் தொழிற்தகைமைக் கட்டணம் மற்றும் நிபுணத்துவ வைத்திய சேவைக் கட்டணம் என்பவற்றை நோயாளிடமிருந்து அறவிட்டு வைத்தியர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் சமனாக இருந்தமையால் வருமானத்தையும் செலவினத்தையும் வெவ்வேறாகக் காட்டுவதற்குப் பதிலாக ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு "பொதுக் களஞ்சியத்தில்" எஞ்சியிருந்த பூர்த்திசெய்யப்பட்ட ஆடை இருப்புக்களின் பெறுமதி, இருப்பு மீள்கணிப்பீடு செய்யும் போது கவனத்திற்கொள்ளப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் இருப்பு ரூபா 787,666 இனால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நன்கொடையின் கீழ் வைத்தியசாலைக்குக் கிடைத்த நிலையான சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 3,257,000 தொகை நன்கொடையின் கீழ் பெறுமானத் தேய்விடுவதற்குப் பதிலாக திறைசேரி மானியங்களிலிருந்து பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது.

(உ) காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறுமானத்தேய்வைச் சீராக்கும் போது ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 146,724,170 ஆக இருந்த போதிலும், முன்னைய ஆண்டின் சீராக்கமாக திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்ட பெறுமதியை உள்ளடக்கிய ரூபா 178,228,398 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 165,444,686 தொகையான வியாபாரக் கடன்கொடுத்தோர் பெறுமதியில் ரூபா 10,446,000 தொகையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கதிர்வீச்சுப் பிரிவு, ஈ.சீ.ஜீ.பிரிவு, எண்டொஸ்கோபி பிரிவு மற்றும் வாகனப் பிரிவில் மீளாய்வாண்டிற்குரிய வருமானம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 66,754,497 ஆக இருந்த போதிலும், அந்தப்பிரிவினால் பராமரிக்கப்படுகின்ற பதிவேடு மற்றும் மாதாந்த அறிக்கையின் பிரகாரம் ரூபா 78,948,570 ஆனமையால் வேறுபாடு ரூபா 12,194,073 ஆகும்.

(ஆ) பத்து வியாபாரக் கடன்கொடுத்தோர்களுக்கு உரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 33,026,482 ஆக இருந்த போதிலும் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதி ரூபா 44,071,629 ஆனமையால் வேறுபாடு ரூபா 11,045,147 ஆக இருந்ததுடன் மருத்துவ வழங்கல் பிரிவின் கடன்கொடுத்தோர் மீதிக்கிடையே ரூபா 24,980,524 தொகையான வேறுபாடும் அவதானிக்கப்பட்டது.

### 2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) கிடைக்க வேண்டிய கணக்குகள்

கடன்பட்டோரின் கீழுள்ள கிடைக்க வேண்டிய வருமானம் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டும் பதினொரு வருடங்கள் வரையுமான காலத்திற்குரிய ரூபா 274,531 இனையும், அறவிட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணத்தில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ஐந்து வருடங்களுக்குக் குறைவான காலத்திற்குரிய ரூபா 60,900,428 இனையும், ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 727,265 இனையும், கழிவகற்றல் கட்டணங்களாக நான்கு ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் ரூபா 5,907,011 இனையும் அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் முடியாது போயிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினங்களில் இரண்டு வருடங்களுக்கும் ஐந்து வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 79,815,258 தொகையும், ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரிய ரூபா 104,465,025

6

தொகையான மீதியும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன் இணங்காமை

மருந்து முகாமைத்துவ கைநூலின் 5 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் மருந்துக் களஞ்சியத்தில் ஆகக் கூடியது 2 மாதங்களுக்குப் போதுமான இருப்பு பேணப்பட வேண்டியிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 4 மாதத்திற்கும் 11 மாதத்திற்குமிடையிலான காலத்திற்குரிய 4 மருந்து வகைகளில் காணப்பட்ட மிகை இருப்பின் பெறுமதி ரூபா 8,340,262 ஆகும்.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பொது வைத்தியசாலைச் சபையின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 92,286,362 தொகையான வரிக்குப் பின் மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வரிக்குப் பின்னரான பற்றாக்குறை ரூபா 119,173,526 ஆனமையால் நிதி விளைவுகள் ரூபா 211,459,888 இனால் அதிகரித்திருந்தது. அந்த அதிகரிப்பிற்கு வைத்தியசாலையின் வருமானம் ரூபா 127,391,908 இனால் அதிகரித்தமையும், மீண்டெழும் அரசாங்க மானியம் ரூபா 172,366,000 இனால் அதிகரித்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

3.2 சபைக்கு எதிராக மற்றும் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் 13 உள்ளக மற்றும் வெளியக நபர்களினால் ஓய்வுபெறும் வயதுக்கு முன்னர் ஓய்வுபெறச் செய்தல், பதவியுயர்வு கிடைக்காமை, நியமனத்தில் உயர்தரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் நோய்களிற்கான சிகிச்சையளித்தல் சேவைகளில் காணப்பட்ட நலிவுகள் போன்றவை தொடர்பாக வைத்தியசாலைக்கு எதிராக நீதிமன்றங்களில் 13 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) ஒரு நபரிடமிருந்து வைத்தியசாலைக் கட்டணமான ரூபா 179,000 தொகையினை அறவிடுவதற்காக சபையினால் அந்த நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் ஓர் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

### 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

திரவ விகிதாசாரங்களில் குறைந்த பெறுமதி காணப்படுவதுடன் வைத்தியசாலையின் பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்கு போதியளவான தொழிற்படு மூலதனம் காணப்படாத நிலைமை தொடர்ச்சியாகக் காணப்பட்டது.

### 3.4 விடுவிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகளின் கிரயம்

பதவியணியினருக்கு வழங்கப்படுகின்ற வெளிநோயாளர் வைத்திய சேவைகளுக்காக செலவிடப்படுகின்ற செலவினங்களை இனங்காணக்கூடிய வகையில் கணக்கீட்டு முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டில் சபையின் செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது குறைவு அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | செயலாற்றல் அளவுகோல் | 2013 | 2012 | குறைவு | 2012 உடன் ஒப்பிடுகையில் 2013 இன் குறைவு சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | | | | சதவீதம் |
| (i) | அவசர சிகிச்சைப் பிரிவிற்கு சேர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 38,323 | 42,883 | 4,560 | 10.6 |
| (ii) | தங்கியிருந்த நோயாளிகளின் எண்ணிக்கை | 54,283 | 57,119 | 2,836 | 5 |
| (iii) | ECG பரிசோதனை | 35,300 | 38,431 | 3,131 | 8 |
| (iv) | கண்சிகிச்சைப் பிரிவு Topographe பரிசோதனை | 35 | 50 | 15 | 30 |

(ஆ) முன்னைய ஆண்டில் வைத்தியசாலையின் ஒட்டுமொத்த கட்டில்களின் பயன்பாடு 70.5 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது 64.07 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(இ) வைத்தியசாலையில் இருதய நோய் மற்றும் சத்திரசிகிச்சைப் பிரிவின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இருதய நோய் பரிசோதனைப் பிரிவில் பரிசோதனை மூலம் இருதய மாற்றுச் சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளர்கள் இனங்காணப்பட்டதன் பின்னர், அவர்களை இருதய நோய் சத்திரகிச்சைப் பிரிவிற்கு அனுப்பப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் உரிய கட்டில் குறியீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டமை தெரிவுப் பரிசோதனைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டின் பெப்ரவரி முதல் ஒக்தோபர் வரையான காலப்பகுதிக்குரிய இருதய நோயாளிகள் தீவிர சிகிச்சைப் பிரிவின் மூலம் இயன் மருத்துவப் பிரிவில் உடற்கூற்றுப் பயிற்சி சேவையொன்றைப் பெற்றிருந்த போதிலும் 2013 பெப்ரவரி 05 ஆந் திகதிய 02/2013 ஆம் இலக்க உள்ளக சுற்றுநிருபத்தின் பிரகாரம் அதற்கான கோரிக்கைகள் அப்பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

2009 மார்ச் 27 ஆந் திகதிய 02/19/2009 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் சுற்றுநிருபத்தின் 4(i) ஆம் பந்தியின் பிரகாரம் தாதி உத்தியோகத்தர் ஒரு வாரத்திற்கு 36 மணித்தியாலத்தை விஞ்சி சேவையாற்றுகின்ற மேலதிக சேவைக்காலத்திற்காக மேலதிக சேவைப்படி செலுத்தவேண்டும். 2013 மார்ச் மாதத்தில் தாதி உத்தியோகத்தர் மேலதிக நேரப்படி செலுத்திய தொகை ரூபா 3,410,750 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது 446 உத்தியோகத்தர்களுக்கு உரியதாகச் செலுத்த வேண்டிய மேலதிக நேர அளவினை விஞ்சி 10,409 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குரிய தொகை ரூபா 1,314,338 ஆகும். அந்தத் தொகை அம்மாதத்தில் செலுத்தப்பட்ட மொத்த மேலதிக நேர அளவில் 38 சதவீதமாகும்.

### 4.3 வெளிப்படையான மோசடிகள்

வைத்தியசாலை பாதுகாப்பு சேவையினை வழங்கும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ஊழியர் எண்ணிக்கை இருக்காமையின் அடிப்படையில் உரிய திகதிகளில் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய வீதத்திற்குரிய சம்பளம் கணிப்பிடப்பட்டு மாதாந்த பட்டியல்களிலிருந்து கழிக்கப்பட வேண்டும். எனினும் 2013 சனவரி முதல் மே வரையான காலத்தின் போது அவ்வாறு கழிக்கப்படாத சம்பளங்களின் கூட்டுத்தொகை ரூபா 562,900 ஆகும்.

### 4.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சத்திரசிகிச்சைப் பொருட்கள், ஆய்வுகூடம், கதிர்வீச்சுப் பொருட்கள் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு போன்ற 4 வைத்தியசாலைக் களஞ்சியங்களில் காணப்பட்ட ரூபா 7,166,407 தொகையான இருப்புக்கள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2004 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 7 வருடங்களுக்குரிய ரூபா 167,310 பெறுமதியான 2400 ஆண்டறிக்கைகளின் பிரதிகள் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டின் போது வைத்தியசாலைகளின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 1,000 சஞ்சிகைகள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அதில் 342 பிரதிகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததுடன் அந்த எஞ்சிய சஞ்சிகைகளின் கிரயம் ரூபா 256,676 ஆகக் காணப்பட்டது.

10

4.5 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரசவகூடத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் அப்டோமினல் பரிசோதனைக்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் ரூபா 600 ஆக இருந்த போதிலும், ரூபா 500 படி அறவிடப்பட்ட காரணத்தினால் 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நட்டம் ரூபா 106,700 ஆகும்.

(ஆ) வைத்தியசாலை வருமானப் பெறுவனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ஒரு கட்டில் குறியீட்டிற்குரிய இறுதிப்பட்டியல் கோவையில் காணப்படாத போது அத்திகதியில் வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட வேறொரு நோயாளியின் பட்டியல் இந்த கட்டில் குறியீட்டுடன் இணைத்து உரிய வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டு மோசடியாக நோயாளர் வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். அதன் படி நோயாளியின் இறுதிப்பட்டியல் செலுத்தாமையின் காரணமாக வைத்தியசாலைக்கு கிடைக்காது போன வருமானம் ரூபா 49,470 ஆகும். அவ்வாறே மேலதிக பரிசோதனையின் போது அந்த தயாரிக்கப்பட்ட பட்டியலிலும் கட்டணம் குறைவாக பட்டியல்படுத்தப்பட்டமையினால் வைத்தியசாலைக்கு ரூபா 23,402 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. அதன் படி இந்த கட்டில் குறியீட்டிற்குரித்தாக வைத்தியசாலைக்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த நட்டம் ரூபா 72,872 ஆகும்.

(இ) 2012 ஆம் ஆண்டில் செயற்பாடற்றுக் காணப்பட்ட ரூபா 424,558 பெறுமதியான சத்திரசிக்கிச்சைப் பொருள் இருப்புக்கள் 2013 ஆம் ஆண்டின் போது காலாவதியாகியிருந்தது. அதில் ரூபா 338,816 பெறுமதியான இருப்புக்கள், இருப்புக்களை அகற்றும் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மேற்கூறப்பட்ட இருப்புக்கு மேலதிகமாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சத்திர சிகிச்சைப் பொருள் களஞ்சியத்தில், காலாவதியான இருப்புக்களின் பெறுமதி ரூபா 256,395 ஆக இருந்தது.

(ஈ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சத்திரசிகிச்சைப் பொருட்கள் மற்றும் மருந்துகள் உப களஞ்சியங்களில் காலாவதியான இருப்புக்களின் பெறுமதி முறையே ரூபா 386,929 மற்றும் ரூபா 265,584 ஆகவும் இருந்தன.

(உ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சத்திரசிகிச்சைப் பொருள் களஞ்சியத்தில் செயற்பாடற்றிருந்த ரூபா 1,132,737 பெறுமதியான சத்திரசிகிச்சைப் பொருள் இருப்புக்கள் மீளாய்வாண்டின் போது காலாவதியாகியிருந்ததுடன் அந்த இருப்புக்கள் இலத்திரனியல் தொழில்நுட்ப பொறியியல் களஞ்சியத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

## 4.6 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

புதிய கட்டிடத்தின் இரண்டாவது மாடியின் உள்ளக நிர்மாணித்தல் ஒப்பந்தம் 84 நாட்களுக்குள் பூர்த்திசெய்து கையளிக்கும் நிபந்தனையின் அடிப்படையில் 2013 யூன் 10 ஆந் திகதி ரூபா 15,948,240 பெறுமதியில் கட்டிடத் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலாவதாக சமர்ப்பிக்கப்பட்ட பிரதேச விலைக்குழுவின் கூறுவிலைகளுக்கு (B.S.R) இணங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் இரண்டாவது சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டிற்குமிடையே ரூபா 5,683,832 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் சந்தை விலையை விஞ்சியிருந்தது.

(ஆ) உரிய ஒப்பந்தம் தொடர்பாக கட்டிடத் திணைக்களம் மற்றும் வைத்தியசாலைக்கிடையே முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 6 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அது மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 37.63 சதவீதமானமையால் ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீத உச்ச அளவையும் விஞ்சியிருந்தது.

(இ) உறுதிப்படுத்தப்பட்ட வேலைப்பத்திரம் மற்றும் அளவிடைப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படாது இடைக்காலக் கொடுப்பனவாக ரூபா 5 மில்லியன் தொகை 2013 நவம்பர் 19 ஆந் திகதி கட்டிடத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 15,948,420 பெறுமதியான வேலை மதிப்பீட்டில் ரூபா 2,300,000 பெறுமதியான 4 விடயங்கள் பூர்த்திசெய்யப்படாமல் 2014 பெப்ரவரி 05 ஆந் திகதியளவில் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததாக கட்டிடத் திணைக்கத்தின் பிரதான பொறியியலாளரினால் வைத்தியசாலைத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

12

மேலும் வேலை விடயம் 2.1 இன் கீழ் கம்பளம் இடப்பட்டு, நிலப்பகுதி பூர்த்திசெய்யப்படவேண்டியிருந்த போதிலும் தரைக்கு கம்பளம் இடப்படாதிருந்ததுடன் கட்டிடத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(உ) ஒப்பந்த வேலைகள் 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் வேலை 2014 பெப்ரவரி 05 ஆந் திகதியே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், ஒப்பந்தத்தின் தாமதக்காலம் 5 மாதங்களாக இருந்த போதிலும் இரு தரப்பினருக்குமிடையே உடன்படிக்கை காணப்படாமையினால் தாமதக் காலத்திற்காக தண்டப் பணத்தை அறவிட முடியாதிருந்தது.

**4.7 தாமதமான செயற்திட்டங்கள்**

வைத்தியசாலைக்காக மென்பொருள் முறைமையொன்றை ஸ்தாபிக்கும் ஒப்பந்தம் 2010 யூலை 19 ஆந் திகதி தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு 9 மென்பொருள் பகுதிகளைத் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. உரிய ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 24,953,859 ஆக இருந்ததுடன் ஒப்பந்தத்தின் வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் 26 வாரங்களில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்த வேலை 2010 நவம்பர் 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் ஒப்பந்தம் 2012 மே 08 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒப்பந்தத்தின் நிதி செயலாற்றல் 30 சதவீதமாகக் காணப்பட்டதுடன் அதன் பௌதீக செயலாற்றல் 60 சதவீதமாக இருந்தது.

**4.8 பதவியணியினர் நிருவாகம்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 14 பதவி வகைகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 1561 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 1,215 ஆனமையால் ஊழியர் எண்ணிக்கையில் 346 பற்றாக்குறை காணப்பட்டது. மேலும் அதற்கு மேலதிகமாக அமைய தொழிலாளர்களாக 54 பேரும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

Auditor General's Department



4.9 வாகனப் பயன்பாடு

வாகன விபத்து

வாகனவிபத்து தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) வைத்தியசாலையினால் வாகன விபத்துக்கள் தொடர்பான பதிவேடு பராமரிக்கப்பட்டிருந்த போதிலும் நி.பி 110 இல் குறிப்பிடப்பட்ட விபரங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் விபத்து ஏற்பட்ட 07 வாகனங்களின் சம்பவத்திரட்டுப் புத்தகங்களின் பேணுகையும் உரியவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நி.பி 104(1)(ஆ), (3) மற்றும் (4) இன் பிரகாரம் விபத்து ஏற்பட்டவுடன் உடனடியாக அதன் பெறுமதி மற்றும் காரணம் என்பவற்றை உரியவாறு அறிந்து கொள்வதற்கும், அதற்கு பொறுப்புவாய்ந்தவர்களை தீர்மானிப்பதற்காகவும் பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டல் கோவையின் 5:1:3 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதிகள் உரிய நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன் உரிய அமைச்சு, திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

(அ) 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஆண்டின் போது அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதித்திட்டத்தில் அதற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வாகனத் தளத்தை அபிவிருத்தி செய்தல், புதிய 2 மின் பிறப்பாக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல், ECG அறையினை நிர்மாணித்தல், மருத்துவ வாட்டுக்களுக்காக HDU பிரிவினை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் 2013 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு வருடத்திலும் முதல் ஆறு மாதங்களுக்குரிய அரையாண்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கை அவ்வாண்டின் யூலை 31 ஆந் திகதியளவிலும், இறுதி ஆறு மாதத்திற்குரிய அரையாண்டு அறிக்கை அடுத்த வருடத்தின் சனவரி 31 ஆந் திகதியளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டிற்குரிய அரையாண்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கணக்காய்வுக் குழு

வைத்தியசாலையின் ஒவ்வொரு பிரிவு மட்டத்திலும் ஏற்பட்ட கிரயம் மற்றும் இலாபத்தன்மையைக் கணிப்பிடுவதற்கான மாதிரிகளைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு நிதிக்கட்டுப்பாட்டாளருக்கு கணக்காய்வுக் குழு சிபார்சு செய்திருந்த போதிலும் அச்சிபார்சுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.5 கொள்வனவுத் திட்டம்

2003 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட Static X-Ray இயந்திரம் அடிக்கடி செயற்படாமையின் காரணமாக 2013 ஏப்ரல் மாதத்தின் போது Static X-Ray Floor Mounted இயந்திரம் ரூபா 5,975,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த

போதிலும், அது தொடர்பாக 2012 அல்லது 2013 ஆம் ஆண்டுகளின் கொள்வனவுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே வழங்குனரினால் பொருட் கட்டளை கிடைத்து 6 - 8 வார காலத்தில் இயந்திரத்தை வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும் அதற்காக 23 வார காலம் எடுத்திருந்ததுடன் காலதாமதம் 15 வாரங்களாக இருந்தன.

**5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், எச்டீ வீடியோ லெபரஸ்கொபி முறைமையைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், வைத்தியசாலையினால் இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 10,735,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திட்டமிடப்பட்ட கிரயத்தை விஞ்சி ரூபா 7,735,800 கிரயம் செலவிடப்பட்டிருந்ததுடன் அது மதிப்பீட்டுப் பெறுமதியில் 257 சதவீதத்தை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) (i) கட்டண விலக்கான வைத்திய சிகிச்சை சேவைக் கிரயமாக ரூபா 11,014,495 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்கான எரிபொருளுக்காக ரூபா 1,288,406 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காகவும் வருடாந்த பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பாதீடு மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினங்களுக்கிடையே 4 வருமான விடயங்களிலும் 9 செலவின விடயங்களுக்கிடையே 91 சதவீதம் முதல் 412 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

போதிலும், அது தொடர்பாக 2012 அல்லது 2013 ஆம் ஆண்டுகளின் கொள்வனவுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே வழங்குனரினால் பொருட் கட்டளை கிடைத்து 6 - 8 வார காலத்தில் இயந்திரத்தை வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும் அதற்காக 23 வார காலம் எடுத்திருந்ததுடன் காலதாமதம் 15 வாரங்களாக இருந்தன.

**5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், எச்டீ வீடியோ லெபரஸ்கொபி முறைமையைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், வைத்தியசாலையினால் இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 10,735,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திட்டமிடப்பட்ட கிரயத்தை விஞ்சி ரூபா 7,735,800 கிரயம் செலவிடப்பட்டிருந்ததுடன் அது மதிப்பீட்டுப் பெறுமதியில் 257 சதவீதத்தை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) (i) கட்டண விலக்கான வைத்திய சிகிச்சை சேவைக் கிரயமாக ரூபா 11,014,495 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்கான எரிபொருளுக்காக ரூபா 1,288,406 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காகவும் வருடாந்த பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பாதீடு மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினங்களுக்கிடையே 4 வருமான விடயங்களிலும் 9 செலவின விடயங்களுக்கிடையே 91 சதவீதம் முதல் 412 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

16

5.7 பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளை

2012 செப்தெம்பர் 21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் போது வைத்தியசாலைக்குரிய புதிய முயற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு அது பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) சொத்துக்கள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு

(ஆ) வைத்தியசாலை வருமானங்களைச் சேகரித்தல்

(இ) மருந்துக் கொள்வனவு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனைச் சபையில் 2013 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று சம்பந்தமாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) சீ உறுப்புரையின்படி கணக்காய்வாளரின் அறிக்கை சம்பந்தமாக பதிலும் மற்றும் விளக்கமும்.

| கணக்காய்வு அவதானிப்புகள் | சரி செய்வதற்கு எடுத்த நடவடிக்கைகள் |
|---|---|
| 2.2 நிதிக்கூற்று சம்பந்தமாக கருத்துக் கூறல் | |
| 2.2.1கணக்கியற் கொள்கைகள்<br>கடந்த வருடத்தில் சாதாரண விலை அடிப்படையில் மொத்த மதிப்பீடு மீளாய்வு வருடத்தின் இறுதியில் பெற்ற விலையினை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றது. ஆனால் அது பற்றி நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | 2014 வருடத்தின் கணக்கினைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 2.2.2 கணக்கியல் குறைபாடுகள்<br><br>கீழ்க்காணும் அவதானிப்புக்களைக் குறிப்பிடலாம் | |
| (அ) கணக்குப் பார்த்தலின் போது பிழையாக கடந்த வருடங்களுக்குரிய பணிக்கொடைக் கொடுப்பனவு ரூபா.1638,062.00 ஆக கடந்தகால கணக்குகளில் பொருந்தாமல் மீளாய்வு வருடத்தின் செலவாகக் கணக்கிடப்பட்டுள்ளது. | 2012 வருடத்தின் பணிக்கொடை கணக்கிடும் போது பதிவேட்டிற்கு உரிய உத்தியோகத்தர்களை உள்ளடக்காது இருப்பது ஏதாவது காரணமாக சம்பளத் தயாரிப்புகளுள் அவர்கள் செயல்படாமல் இருந்ததாலாகும். 2013 வருடத்தில் அந்த உத்தியோகத்தர் கடமையில் இருந்ததால் 2013.12.31 ஆம் திகதி பணிக்கொடை கணக்கிடும் பதிவேட்டிற்குள் உள்ளடக்கப்பட்டு 2012 ம் வருடத்தில் ஏற்பட்ட தவறுகள் சரி செய்யப்பட்டது. |
| (ஆ) மருத்துவமனை மருத்துவர்களின் தொழிற் கட்டணம் மற்றும் நிபுணத்துவ மருத்துவ சேவை கட்டணம் நோயா-ளிகளிடமிருந்து அறவிட்டு மருத்துவர்களுக்கு கொடுப்பனவு செய்வதோடு அந்த வரவும் கொடுப்பனவும் சமமாக இருப்பதால் வருமானம் மற்றும் செலவு வெவ்வேறாக காட்டுவதற்குப் பதிலாக set off பண்ணியிருந்தது. | பணிப்பாளர் குழுத் தீர்மானத்தின்படி தொழிற் கட்டணம் வரவு கொடுப்பனவு கணக்குகளுக்கு அல்லது நிதிக் கூற்றுக்களுக்கு காட்டப்படாததோடு வருடத்தில் காட்டப்பட்ட தொழிற் கட்டணத்தின் பெறுமதி ஐந்தொகை இறுதியில் வெளிப்படுத்தப்பட்டது. |
| (இ) 2013 டிசம்பர் 31ம் திகதிக்கு “பொது களஞ்சியத்தின்” எஞ்சியிருந்த தைத்த ஆடைகளின் மொத்தப் பெறுமதி மொத்த தேய்மான வரி கவனிக்காத காரணத்தினால் மீளாய்வு வருடத்தின் கடைசித் தொகை ரூபா.787,666.00 க்கு குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | சாதாரண பொருட் களஞ்சியத்தில் மொத்தக் கணகீடு செய்யும் போது தைத்த ஆடைகள் கணக்கீடு செய்யப்படவில்லை. மருத்துவமனையினால் விலைக்கு வாங்கப்பட்ட சீலைகளில் மருத்துவமனையில் இந்த தைத்த உடுப்புகள் தைத்து முடிப்பதால் மீண்டும் கணக்கீடு செய்வதன் மூலம் பெறுமதி சரியாகத் தெரியாது. |
| (ஈ) அன்பளிப்பின் கீழ் மருத்துவமனைக்கு கிடைத்த நிலையான சொத்துக்களுக்கு உரிய கழிவு ரூபா.3,257,000.00 க்காகவும் அன்பளிப்புகளின் கீழ் தேய்மான வரி செய்வதற்காக திறைசேரி அன்பளிப்புகளில் தேய்மானம் செய்யப்பட்டது. | 2014 வருடத்தின் கணக்குத் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |

(உ) நிதியோட்டக் கூற்றின் குறைவினை ஒப்பிடும் போது வருடத்திற்குரிய குறைவு பெறுமதி ரூபா.146,724,170.00 ஆக இருந்தும் கடந்த வருட சரிப்படுத்துகை ஆக மொத்த நிதியத்துக்கு சரிப்படுத்துகை செய்த பெறுமதியினை உள்ளடக்கி ரூபா. 178,228,398.00 ஆக நிதியோட்ட கூற்றில் சரியாகக் காட்டப்பட்டு இருந்தது.

நிதியோட்டக் கூற்றில் குறைவினைச் சீர்செய்யும் போது பின்வருமாறு சீர்செய்யப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| 2013 வருடத்திற்கு குறித்த குறைவு பெறுமதி | 146,724,170 |
| 2010 வருடத்தில் அன்பளிப்பாகக் கிடைத்த ரூபா.2,800,000.00 பெறுமதிக்குக் குறித்த குறைவு விகிதம் (2011/2012 வருடத்திற்காக) | 1,400,000 |
| Advance Cardiac Centre ஒன்றிற்குரிய குறைக்கு பொருத்தமான விகிதம் 2% - 5% வரை அதிகரித்த பெறுமதி (2008 – 2012 வரை) | 30,104,228 |
| மொத்தம் | 178,228,398 |

### 2.2.3 கணக்காய்வுக்காக சாட்சி இன்மை

நிதிக்கூற்றில் காட்டப்படும் ரூபா.165,444,686.00 வாகிய வியாபார கடன் உரிமைப் பெறுமதி ரூபா.10,446,000.00 பெறுமதி கணக்காய்வின் போது உறுதி செய்ய முடியாது விட்டது.

10,446,000.00 பணம் 2001 மற்றும் 2002 வருடங்களில் மருத்தவ வழங்கல் நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்களுக்காக எழுதி வழங்கப்படாத காசோலையாகும். இப்பணத்தினை கணக்குகளிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2.3 ஒப்பிடப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு கீழ்காணும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்

(அ) கதிரியக்கப்பிரிவு ECG பிரிவ என்டஸ் கொபி பிரிவு மேலும் வாகனப் பிரிவில் மீளாய்வு வருடத்திற்குரிய வருமானம் நிதிக் கூற்றின் படி ரூபா 66,754,497.00 எனினும் அப்பிரிவில் பராமரிக்கப்படும் பதிவுகள் மற்றும் மாதாந்த அறிக்கையின்படி ரூபா.78,948,570.00 வாக இருப்பினும் மாற்றம் ரூபா.12,194,073.00 வாகும்

கதிர்வீச்சு மற்றும் ECG பிரிவினால் குறித்த பதிவேடுகளைப் பராமரிப்பது தமது பிரிவில் செய்கின்ற விசாரணைகளில் தகவல்கள் சம்பந்தமான நிர்வாக உபாய வழியாகும் கணக்கியல் நடவடிக்கைக்காக பாவிக்கப்படுவது கணினி மூலம் வழங்கப்படும் தகவலின் அடிப்படை யிலாகும். எவ்வாறாயினும் அந்த மாற்றம் ஏற்படுவதற்குரிய காரணத்தை அறிய முயற்சிக்கின்றோம்.
எவராவது வாகன உரிமையாளருக்கு வழங்கப்பட்ட அட்டை தொலையும் போது அதற்காக ரூபா.1000.00 பணம் அறவிடப்படும். அப்பணம் சிட்டை ஒன்றின் மூலம் பணம் காசாளருக்கு கொடுக்கும் போது அந்த வருமானம் நிதிக் காசாளரால் பிற வருமானத் தலைப்பின் கீழ் கணினி மயப்படுதப்பட்டுள்ளன. ஆதலால் நிதி அறிக்கைகளில் காட்டப்படுகின்ற வருமானம் குறைவாகக் காணப்பட்டுள்ளன. ஆனால் இப்பணம் மாதாந்த அறிக்கையில் வாகனப் பிரிவின் வருமானமாக கணினியில் பதிவதற்கு குறித்த பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

என்டஸ் கொபி பிரிவு சம்பந்தமாக அலசிப் பார்த்து தேவையான பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| (ஆ) வர்த்தக கடனாளிகள் பத்துப் பேர்களது நிதிக்கூற்றின்படி நிலுவை ரூபா.33,026,482.00 ஆயினும் நிலுவை உறுதிப்படுத்தியதன்படி நிலுவை ரூபா.44,071,629.00 வாகும் எனினும் வித்தியாசம் ரூபா.11,045,147.00 ஆவதோடு மருத்துவ வழங்கல் பிரிவில் கடனுக்கான நிலுவைக்கிடையே வித்தியாசம் ரூபா.24,980,524.00 என்னும் அவதானிக்கப்பட்டது. | சகல வருடங்களிலும் டிசம்பர் மாதம் இரண்டாவது கிழமைகளில் இருந்து களஞ்சியங்களுக்கு பொருட்கள் வழங்குதலை நிறுத்திவிட்டு, தொகையைக் கணக்கிடுவதுடன் அக்காலத்தினுள் கிடைக்கும் பொருட்களுக்காக பெறும் அட்டை (GRN) வழங்குவது அடுத்த வருடத்திலே ஜனவரி முதல் வாரத்தி லாகும். ஆதலால் மருத்துவமனையில் நிதிக் கூற்றுக்களில் கடனுக்குரிய பெறுமதியும் கடனாளிகளின் நிலுவை உறுதிப்படுத்துவதோடு வித்தியாசமும் ஏற்படுகின்றது.<br>மருத்துவ வழங்கல் பிரிவில் 2013ம் வருடத்திற்காக ரூபா.24,980,524.00 கொள்வனவு செய்ய கணக்கிடப் பட்டுள்ளது. |
| 2.4 **வரவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.** | |
| (அ) வரவேண்டிய கணக்கு<br>கடனாளிகளின் கீழ் வரவேண்டிய வருமானம் இரண்டு வருடத்திற்கு அதிகமாக மற்றும் 11 வருடங்கள் வரையான காலத்துக்கு உரிய ரூபா.274,531.00ம் அறவிடப்படவேண்டிய வைத்தியசாலைக் கட்டணத்துள் ஒரு வருடத்துக்குக் கூடிய 5 வருடத்திற்கு குறைந்த காலத்துக்கு குறித்த ரூபா.60,900,428.00ம் 5 வருடத்துக்கு கூடிய காலத்திலிருந்த வரும் ரூபா.727,265.00 மலசல கழிவறை கட்டணமாக 4 வருடங்களுக்கு அதிகமாக இருந்து வரும் ரூபா.5,907,011 ரூபாவும் அறவிடப்பட மீளாய்வு வருட கடைசியாகும் போது முடியாமல் இருந்தது. | ((அ) வரவேண்டிய கணக்குகள்<br>கிடைக்க வேண்டிய வருமானமாக காட்டப்பட்ட பணத்தில் உணவகத்தில் அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா.56,839.00 வும் முகவர் அஞ்சலகத்தில் அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா.130,332.00 வும் இலங்கை இராணுவத்தினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மருத்துவமனைக் கட்டண வருமானம் ரூபா.149,515.00 மாகிய கட்டணங்கள் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>ஹற்றன் நெசனல் வங்கியிலிருந்து வரவேண்டிய பணம் ரூபா. 53,556.00 வும், இலங்கை வங்கி மின்சாரப் பட்டியல் ரூபா.23,592.00 வும், பால் நிலைய மின்சாரப்பட்டியல் ரூபா.10,212.00 வும், ஜனாதிபதி நிதியிலிருந்து அறவிடவேண்டிய மருத்துவமனைக் கட்டணம் ரூபா.577,750.00 வும், சுகாதார அமைச்சிடமிருந்து வரவேண்டிய மலசல கழிவறைக் கட்டணமான ரூபா.5,907,011.00 வையும் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் தேசிய மருத்துவமனை மற்றும் சிறுவர் மருத்துவமனையில் இருந்து அறவிட வேண்டிய மருத்துவமனைக் கட்டணத்தினை மருத்துவ வழங்கல் பகுதிக்கு செலுத்த வேண்டிய நிதியில் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்<br>கடனாளிகள் மற்றும் திரட்டிய செலவினுள் உள்ள இரண்டு வருடத்தினுள்ளும் 5 வருடத்தினுள்ளும் உள்ள கால வித்தியாசத்துக்குரிய ரூபா. 79,815,258.00 வும் 5 வருடங்களுக்கு கூடுதலான காலத்துக்குரிய ரூபா.104,465,025.00 க்கான நிலுவையும் மீளாய்வு வருட இறுதியிலும் கூட தீர்க்கப்படாதிருந்தது. | செலுத்த வேண்டிய கணக்கினுட்பட்ட வியாபார கடன் உரிமையாளர்கள் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கும் கணக்காய்வாளர் திணைக்களத்திற்காக 2014ம் வருடத்தில் நிலுவைப்பணம் எல்லாம் மூடுவதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படும்<br>மேலும் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு செலுத்துவதற்குள்ள பணத்துக்கு தேசிய மருத்துவமனை இருதய நோய் சத்திரசிகிச்சை இந்த மருத்துவமனையில் செய்வதற்காகச் set off செய்து எஞ்சிய பணம் கணக்கிலிருந்து நீக்கப்படும்<br>அதே போன்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு 2014ம் வருடத்தில் ரூபா.10,000,000.00 பணம் செலுத்தப்பட்டதோடு எஞ்சிய பணத்தினைச் செலுத்தி மூடிவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| 2.5சட்டதிட்டநிபந்தனைகளுக்கும்முகாமைத்தவ தீர்மானங்களுக்கும் ஏற்புடையதாக இன்மை.<br>ஔஷத முகாமைத்து கையேட்டில் 5வது அத்தியாயத்தில் 2வது உறுப்புரையின் படி மருந்தகக் களஞ்சியசாலையில் கூடிய பட்சம் இரண்டு மாதத்திற்கு அளவான தொகையையாவது வைத்திருக்க வேண்டுமென அறிவித்திருந்தும் 4 மாதத்துக்கும் 11 மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்துக்குரிய மருந்து வகைகள் 04 இருப்பதோடு அதிகமான தொகையின் பெறுமதி ரூபா 8,340,262/00 ஆகும். | இந்த மருந்துகளுக்கிடையே Cyclosporine 100g cap என்னும் மருந்துக்கு MSD நிறுவனத்தினால் ஒரு வருடத்திற்கான மதிப்பீட்டினை ஒரே தடவையில் பெறுவதனால் அந்த இனத்தின் தொகை கூடியது. சில ஒதுக்குதல் பாவனையில் நோய் நிலமையின் படி மாறுபடலாம் உதாரணம் :- ISO Premalin injection<br>அதன்படி மேற்படி நிலைமையின்படி ஒவ்வொரு மருந்துக் களஞ்சியங்களில் எஞ்சும் நிலையை காணலாம். வருடத்தில் கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் போது எஞ்சியுள்ள மருந்து அளவினைக் கவனத்திற்கெடுப்பதால் மருந்து விரய மாகாது என்பதைத் தெரிவிக்கின்றேன். |

| **3.** நிதி மீளாய்வு | |
|---|---|
| 3.1 **நிதிப் பெறுபேறு**<br><br>முன்வைக்கப்பட்ட நிதிப் பட்டியலின்படி மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காக பொது மருத்துவமனைச் சபையின் செயற்பாடுகளின் ரூபா.92,286,362.00 வரியின் பின்னர் மேலதிகமானதோடு அதற்கு ஒதுக்கீடு கடந்த வருடத்தில் வரி பின்னர் குறைவு ரூபா.119,173,526.00 ஆனதால் நிதி முடிவு ரூபா.211,459,888.00 ஆக விருத்தியடைந்தது. அந்த விருத்தியில் வைத்தியசாலை வருமானம் ரூபா.127,391,908.00 ஆல் அதிகரித்ததோடு மீண்டுவரும் செலவு அரசின் பங்களிப்பு ரூபா.172,366,000.00 ஆல் அதிகரிப்பு பிரதானமாகத் தாக்கம் செலுத்தியது. | முகாமைத்துவம் தீர்மானம் எடுக்கும் போது கவனத்திற் கொள்ளப்படும். |
| 3.2 **சபைக்கு எதிரான மற்றும் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டப்படியான நிகழ்வு**<br><br>கீழ்க்காணும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன | |
| (அ) சபையின் உள்ளக மற்றும் வெளியக நபர்கள் 13 பேரினால் ஓய்வு பெறும் வயதுக்கு முன்னரே ஓய்வுபெற வைத்தல், பதவியுயர்வு கிடைக்காமை, நியமனங்களின் போது உயர் தரம் பெறுதல், மற்றும் நோயாளர் நலன் பேணும் சேவைகளில் ஏற்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக மருத்துவமனைக்கு எதிராக நீதிமன்றத்தில் 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. | இந்த விடயத்தில் குறிப்பிடப்பட்ட வழக்கு 13இல் 10 இதுவரை முடிவுற்றதோடு எஞ்சிய வழக்குகள் 3 தற்போது நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) ஒருவரிடமிருந்து மருத்துவமனைக் கட்டணமாக ரூபா.179,000.00 அறவிடப்பட்டது சம்பந்தமாக சபையினால் அந்த நபருக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | நபரின் மருத்துவமனைக் கட்டணம் ரூபா.179,000.00 அறவீடு சம்பந்தமாக மருத்துவமனையினால் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரிக்கப்படுவதோடு அப் பணத்தினை தவணை அடிப்படையில் செலுத்தப்பட்டு வருகின்றது. |
| 3.3 திரவிய விகிதங்களின் குறைந்த பெறுமதி இருப்பதோடு மருத்துவமனையின் கடனைத் தீர்ப்பதற்கு போதிய மூலதனமின்மையான நிலைமை தொடர்ந்து நிலவுகிறது | வைத்தியசாலைச் செலவுகள் (மின்கட்டணம் பாரமரிப்புச் செலவு பணிக்குழுச் சம்பளம்) அதிகரிக்கும் விகிதத்திற்கு மருத்துவமனை வருமானம் அதிகரிக்காததால் மூலதனக் குறைபாடு ஏற்பட்டது. ஆனால் 2014ம் வருடத்தில் திறைசேரியினால் அதிகமான பணம் ஒதுக்கப்படல் மற்றும் மருத்துவமனை வருமானம் அதிகரிக்கச் செய்வதன் மூலம் மூலதனம் உயர் மட்டத்தில் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 3.4 **சுதந்திர மருத்துவச் சிகிச்சைச் செலவு**<br><br>பணிக்குழுவுக்கு வழங்கும் வெளி நோயாளர் வைத்திய சேவைக்காக செலவாகும். செலவு அறிந்து கொள்ளும வகையில் கணக்கியல் கூற்றுக்கள் நடைமுறைப்படுத்தப் படவில்லை. | சுதந்திர மருத்துவச் சிகிச்சைக்காக பற்றுச் சீட்டு வழங்குதல், மற்றும் அறிக்கை வைத்திருத்தல் உள்ளக நிர்வாக முறையாக தற்போது பயன்படுத்தப் படுவதோடு கணக்கெடுத்தல் சம்பந்தமாக எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்றிறன்

(a) அ) மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் செயற்றிறன் கடந்த வருடத்தினோடு ஒப்பிடும் போது குறைவினை அவதானிக்க முடிகின்றது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| | செயற்றிறன் அளவீடு | 2013 | 2012 | குறைவு | 2012 இற்கு ஏற்ப 2013 குறைவு விகிதாசாரம் |
|---|---|---|---|---|---|
| I | திடீர் சிகிச்சைப் பிரிவுக்குச் சேர்ந்த நோயாளிகளின் எண்ணிக்கை | 38.323 | 42.883 | 4.560 | 10.6 |
| II | வதிவிட நோயாளர் எண்ணிக்கை | 54.283 | 57.119 | 2.836 | 5 |
| III | ECG பரிசோதனை | 35.300 | 38.431 | 3.131 | 8 |
| IV | கண் பிரிவு TOPO GRAPHE பரிசோதனை | 35 | 50 | 15 | 30 |

தனியார் நிறுவனங்கள் மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட்டு நோயாளிகளை வர வழைப்பதற்குச் செய்யப்படும் சந்தைப் படுத்தல் உபாயத்தினைக் காரணம் காட்டி ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையில் சில பிரிவுகளுக்கு நோயாளிகளின் மற்றும் சில பரிசோதனைகளின் குறைவுகளைக் காட்டினாலும் அது குறுகிய காலத்தில் மருத்துவமனைக்குத் தாக்கம் செலுத்தும் மேலும் அரச வைத்தியக் கொள்கைக்காக செலவு செய்யும் பணம் அதிகரிக்கச் செய்து அதனை விருத்தி செய்து நோயற்ற மக்களை உருவாக்குவதற்கான வேலைத்திட்டமும் மற்றும் சில நோய்கள் கால நிலைக்கேற்ப தாக்கம் செலுத்துவது போல வைத்தியசாலையில் அப்படியான ஏற்ற இறக்கம் ஏற்படுவதால் கணக்காய்வு சுட்டிகளில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது ஏற்ற இறக்கம் உள்ளது உண்மையாகும். .

ஆ) கடந்த வருடத்தில் மருத்துவமனை சகல கட்டில்களினதும் உபயோகம் 75.5 ஆவதோடு மீளாய்வு வருடத்தில் அது 64.07 வரை குறைந்திருந்தது.

இ) வைத்தியசாலையில் இருதயநோய் சத்திரசிகிச்சைப் பிரிவின் செயற்றிறன் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) இருதய நோய் பரிசோதனைப் பிரிவின் பரிசோதனை மூலம் பைப்பாஸ் இருதய அறுவை சிகிச்சைகள் செய்வதோடு . நோயாளிகளை இனம் கண்டபின் அவர்கள் இருதயநோய் அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பப்பட்டதற்கான எழுத்து மூல சாட்சி குறித்த கட்டில் தலைப்பு மூலம் நடைபெற்றிருப்பதற்கு மாதிரி பரிசோதனையின் போது உறுதிப் படுத்தப்படவில்லை

கொரினரி என்ஜியோக்ரபி (Coronary Angiography) பரிசோதனை நடைபெற்றது குறித்த நோயாளிக்கு கவனிக்கத்தக்க இருதய குழாய் நோய் Coronary Artery Diseas) நிலைமை உள்ளதாக உறுதிப்படுத்துவதற்காகும். அதன்படி வைத்திய சிகிச்சை PCI அல்லது CABG சத்திரசிகிச்சை என்பன பற்றித் தீர்மானிக்கப்படும். அதன்படி சந்தர்ப்ப பத்திறகேற்ப உசிதமானமுறையில் சிகிச்சை முறைகள் சிபார்சு செய்யப்படும் ஆதலால் சகல நோயளிக்கும் பைப்பாஸ் இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப் படமாட்டார்கள்.

(ii) 2013 ம் வருடத்தில் பெப்ரவரியில் இருந்து ஒக்டோபர் வரையான காலப்பகுதிக்குரிய இருதயநோய் தீவிர சிகிச்சைப் பிரிவின் மூலம் பௌதீக சிகிச்சைப் பிரிவின் பௌதீக சிகிச்சைகள் பெற்றிருந்தும் 2013 பெப்ரவரி 05ம் திகதி 02/2003 ம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின்படி அற்கான கேள்வி அப்பிரிவிற்கு முன்வைக்கப்படவில்லை.

இது சம்பந்தமாக குறித்த பிரிவினருடன் கலந்துரையாடியதுடன் இதற்கான மாதிரிப் படிவங்களில் திட்டமிட்டு பௌதீக சிகிச்சை அவசியமாகும் போது அதற்குரிய குறித்த மாதிரிப் பத்திரத்துடன் பௌதீக சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
.

| | |
|---|---|
| 4.2 **முகாமைத்துவ செயற்றிறன் இன்மை**<br>2009 மார்ச் மாதம் 27ம் திகதிய 02/19/2009 ம் சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின் 4(1) பந்தியின்படி தாதி உத்தியோகத்தர் வாரத்திற்கு 36 மணித்தியாலத்திற்கு கூடுதலாக சேவை செய்யும் சேவைக் காலத்துக்காக மேலதிக சேவைக் கொடுப்பனவு செலுத்த வேண்டும் 2013 மார்ச் மாதத்தில் தாதி உத்தியோகத்தர் மேலதிக நேரக் கொடுப்பனவுப் பணம் ரூபா.3,410,750.00 ஆவதோடு அது சம்பந்தமாக நடாத்தப்பட்ட பரிசோதனையின் போது 446 உத்தியோகத் தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மேலதிக நேரக் கொடுப்பனவு எல்லை மீறி ரூபா.10,409 மணித்தியாலம் மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டதோடு அதற்குரிய பணம் ரூபா.1,314,338.00 ஆகும். இவ் எல்லை அந்த மாத்தினுள் செலுத்தப்பட்டுள்ள முழு மேலதிக எல்லையில் நூற்றுக்கு 38 ஆகும். | கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப் பட்ட தரவுகளுள் தாதி உத்தியோக த்தர்கள் 5 பேர் தவிர ஏனைய சகல தாதி உத்தியோகத்தரும் வாரத்திற்கு 3 மணித்தியாலம் வீதம் 3 வாரத்திற்காக (கிழமை ஓய்வு பெறும் வாரம் தவிர) 108 மணித்தியாலம் சேவை செய்ய வேண்டும்.<br>446 உத்தியோகத்தர்களுக்காக இந்த 48168 மணித்தியாலம் ஆவதோடு கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப் பட்டபடி தாதி உத்தியோகத்தர்கள் மார்ச் மாதம் 78609 மணித்தியாலம் சேவை செய்திருப்பின் அவர்களுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்த வேண்டிய மணித்தியாலம் 30441 ஆக வேண்டும். அதன்படி கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டபடி மேலதிக நேரம் 24794 மணித்திலயம் மாத்திரம் கொடுப்பனவு செய்யும போது வேறு எவ்வித மேலதிக நேரக்கொடுப்பனவும் மேலதிகமாக செலுத்தவில்லை.<br>கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப் பட்டபடி தாதியர்கள் வாரத்தினுள் 144 மணித்தியாலம் வேலை செய்யவில்லை யெனக் குறிப்பிட விரும்புகின்றேன்.<br>நிலவும் தாதி பற்றாக்குறை மற்றும் தாதி உத்தியோகத்தர் 40 பேர் அளவில் இக்காலகட்டதினுள் பிரசவ விடுமுறை பெற்றிருந்ததால் மருத்துவமனை கிளினிக் தேவையின் அடிப்படையில் மேலதிக நேர சேவை அடிப்படையில் ஈடுபடுத்தப் படுவதோடு அது பொதுச் சுற்றறிக்கையில் 02.19.2009ம் இலக்கத்தின்படி நடைமுறைப் படுத்தப்படுகின்றது. |
| 4.3 **கட்புலச் சீர்கோடு**<br>வைத்தியசாலைகளில் பாதுகாப்பு சேவை வழங்கும் கொந்தராத்து ஒப்பந்ததின்படி குறிப்பிட்ட ஊழியர்களின் எண்ணிக்கை இன்மையால் குறித்த தினங்களில் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய பெறுமதிக்குரிய (Rate க்கு) சம்பளத்தினைக் கணக்கிட்டு மாதாந்த பட்டியலில் குறைக்க வேண்டும். அப்படியிருந்தாலும் 2013 ஜனவரியிலிருந்து மே மாதம் வரையான காலப்பகுதியில் அவ்வாறு குறைக்கப்படாதிருந்த சம்பளத்தின் கூட்டுத் தொகை ரூபா. 562,900.00 ஆகும். | ப்ளு தண்டர் கிக்கியுரிட் சர்வீஸ் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு முதல் இருந்த சிக்கியுரிட்டி நி-றுவனததின் சேவை நிலைமை பலவீனமாக இருந்ததால் அவர்களின் சேவை வழங்கல் ஒப்பந்தம் துரிதமாக முடிவுறுத்தும் தேவை ஏற்பட்டது. ஆனால் விலை மனுக்கோரலினூடாக தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகள் துரிதமாக கடமைகளை பாரமேற்க தயாராக இருக்கவில்லை. ஏனெனில் பாதுகாப்பு உத்தியோகத் தர்களைச் சேர்தது குறுகிய காலத்தில் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பது நடைமுறையில் கஷ்டமாக இருந்த தாலாகும்.<br>ஆனால் டென்டர் வழங்கிய சபைகள் தமக்கு ஊழியர்கள் குறுகிய காலத்தினுள் தேடிக் கொள்வதன் கஷ்டத்தினை அவர்களால் தெரிவிக்கபட்டும் அதன்படி முதல இரு மாதங்களுக்கு கருணைக் காலமாக வழங்குமாறு கேட்டுக் கொண்டதன்படியும் மருத்துவமனை பாதுகாப்பு நடவடிக்கைகள் நிகழும் தீவிர தேவையினை கவனத்திற் கொண்டு அந்தக் கருணைக் காலம் வழங்கப்பட்டது ஆதலால் அக்காலத்தினுள் தண்டப்பணம் அறவிடப்படவில்லை. |
| 4.4 **செயல்படாத மற்றும் குறைந்த பயன்பாடுள்ள சொத்துக்கள்.**<br>கீழ்காணும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப் பட்டது. | |
| அ) சத்திர சிகிச்சைப் பொருட்கள் ஆய்வுகூடம், கதிர்வீச்சுப் பொருட்கள் மற்றும் மின்னியல் தொழில்நுட்ப பொறியியலாளர் களஞ்சியம் ஆகிய 4 களஞ்சியங்களில் இருந்த ரூபா.7,166,407 பெறுமதியான தொகை 2013 டிசம்பா | இங்கு குறிபிடப்பட்ட சில Item இதுவரை பயன்பட்டுள்ளன.<br>உ-ம் :- Prolee (Ecolene (3/0 Biohagradad garbage bag) பாவனைக்குதவாத பொருட்களைப் பாவிக்காது கணக்குப் பதிவேடுகளில் வெட்டிவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | |
|---|---|
| ஆ) 2004 ம் வருடத்தில் இருந்து 2010ம் வருடம் வரை 07 வருடத்துக்குரிய ரூபா.167,310.00 பெறுமதியான வருடாந்த அறிக்கை பிரதிகள் 2400 பங்கிடாமல் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அவசியமான அளவிற்கு வருடாந்த அறிக்கை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதென்றும் எதிர்கால அறிக்கையினை உபயோகித்து ஏதாவது நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| இ) 2010ம் வருடத்தில் மருத்துவமனையின் 25வது ஆண்டு நினைவு கூரும் முகமாக ஞாபகார்த்த மலர் 1000 அச்சிடப்பட்டதோடு அதில் 342 பிரதிகள் 2013 டிசம்பர் 31ம் திகதி களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததோடு அந்த எஞ்சிய ஞாபகார்த்த மலரின் செலவு ரூபா.256,676.00 வாகும | |
| 4.5 **இனம் காணப்பட்ட நஷ்டம்**<br>கீழ்க்காணும் அவதானிப்புக்கள் செய்யப்பட்டன. | |
| அ) உள்ளே மேற்கொள்ளப்படும் அல்டாரா சவுண்ட ஸ்கேன் எப்டொம்னல் பரிசோதனைக்காக அங்கிகரிக்கப்பட்ட விலை ரூபா.600.00 எனினும் ரூபா.500.00 வீதம் அறவிட்ட காரணத்தினால் 2013ம் வருடத்தினுள் ஏற்பட்ட நஷ்டம் ரூபா.107,700.00 வாகும். | பிரசவ அறையினுள்ளே (Labour Room) மேற்கொள்ளப்படும் அல்ட்ரா சவுண்டஸ் ஸ்னே எப்டொம்னல் (ultra sound scan abdominal) காக அறவிடப்பட வேண்டிய சரியான கட்டணம் தவறுதலாக கணினியுள் இற்றைப்படுத்தவில்லை. தற்போது தகவல் தொழிநுட்ப பிரிவினால் சரியான கட்டணம் கணினி மயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ஆ) மருத்துவமனைக்கு வருமானம் பெறுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி விசாரணையில் ஒரு கட்டிலுக்கான தலைப்பு இறுதிப்பட்டியல் கோவையில் இல்லாத போது, அன்றைய தினம் மருத்துவமனையிலிருந்து வெளி-யேறிய வேறு நோயாளியின் கட்டில் தலைப்புக்கு இணைக்கப்பட்டு சரியான கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக காட்சிப்படுத்தப் பட்டு மோசடியான முறையில் நோயாளி மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். இதன்படி நோயாளியின் இறுதிப் பட்டியல் கொடுப்பனவு செய்யப்படாத காரணத்தினால் மருத்துவமனைக்குரிய வருமானம் ரூபா.49,470.00 இழந்தது. அதே போன்று தொடர்ந்து விசாரித்த போது அங்கு தயாரிக்கப்பட்ட பட்டியலும் கட்டணம் குறைவாகப் பட்டியல் படுத்தப்பட்டதால் மருத்துவமனைக்கு ரூபா.23,402.00 நட்டம் ஏற்பட்டிருந்தது. இதன்படி இந்த கட்டில் தலைக்கான மருத்துவனைக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா.72,872.00 வாகும். | மருத்துவமனைக் கட்டணம் அறவிடும் போது அதற்கான பட்டியல் தயாரிக்கும் போது பலவகையான தவறுகள் ஏற்பட்டுள்ளதாக வெளியாகியுள்ளன. அதன்படி இதற்காக பரிகாரமாக மருத்துவமையில் சில செயற்பாட்டு விதி முறைகளைக் கணினி மயப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. இந்த கணக்காய்வு விசாரணைக்குரிய விடயத்தின் அடிப்படையான கட்டில் தலைப்புக்களுக்கான மருத்துவமனை கட்டணம் அறவிடும் போது ஏற்பட்டுள்ள தவறுகள் மருத்துவமனையினுள் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கணினி அமைப்பு நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அப்படியாயின் 2013 ஜுலை காலப்பகுதிக்கு முதல் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது மருத்துவமனைக் கட்டணம் அறவிடுவதற்கு குறித்த பல்வகையான விதி முறைகள் கணினி அமைப்பினுள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுவதாலும் அதனுள் தயாரிக்கப்பட்ட உள்ளக நிர்வாக உபாயம் மூலம் ஏற்படக்கூடிய பிழைகள் மற்றும் மேசடிகள் என்பன வெளியாகுவதற்கும் குறைப்பதற்கும் முடியும். |
| இ) 2012ம் வருடத்தில் பயன்படுத்தப்படாத ரூபா.424,558.00 பெறுமதியான சத்திரசிகிச்சை தொகை 2013ம் வருடத்தில் காலம் கடந்திருந்தது. இதில் ரூபா.338,816.00 பெறுமதியான தொகையில் தொகைக் குறைப்புச் சபைக்குப் பாரமளிக்கப் பட்டிருந்தது. அதேபோன்று மேற்படி தொகைக்கு மேலதிகமாக 2013 டிசம்பர் 31ம் திகதிக்கு சத்திரசிகிச்சை பொருட்களின் காலம் கடந்த தொகையின் பெறுமதி ரூபா.256,395.00 ஆகும். -. | ஈ) இதில் சில சத்திரசிகிச்சை பொருட்கள் மருத்துவமனையினுள் மேற்கொள்ளப்படும் சில சத்திரசிகிச்சைகளை நிறுத்தி வைப்பதால் எஞ்சியுள்ளன.<br>உ-ம் :- Corolene 7/0 13mm 3/8 75cm Topper cutting ஆனால் சில சத்திரசிகிச்சைப் பொருட்கள் எத்திலின் ஒக்சயிட் இட்டு பாவிக்க முடியுமானதாக இருப்பதோடு, பாவிக்க முடியாத சத்திர சிகிச்சைப் பொருட்களை கழித்து கணக்குப் புத்தகங்களில் நீக்கிவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| (ஈ) 2013 டிசம்பர் 31ம் திகதிக்கு சத்திர சிகிச்சை பொருட்கள் மற்றும் மருந்துகள் உபகளஞ்சியசாலைகளில் காலம் கடந்த தொகைகளின் பெறுமதி முறையே ரூபா.336,929 மற்றும் ரூபா.265,584.00 ஆகும். | இங்கு உள்ளீர்க்கப்பட்ட சில சத்திரசிகிச்சைப் பொருட்கள் இதுவரையில் பாவிக்கப்பட்டுள்ளதோடு Connecter Straight 3/0 X 4/1 liga clips Et Tube உதாரணமாக சில பொருட்கள் எதிலின் ஒக்ஸயிட் போட்டு உயிரூட்டி பாவிக்கப்படும் உ-ம் :- nylon tape w 275 பாவிக்க முடியாத தொகையினை அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |
| உ) 2012 டிசம்பர் 31ம் திகதிக்கு சத்திரசிகிச்சை பொருட்கள் களஞ்சியத்தின் செயற்படாதிருந்த ரூபா.1,132,737.00 பெறுமதியான சத்திரசிகிச்சைப் பொருட்களின் தொகையினை மீளாய்வு வருடத்தின்போது காலம் கடந்து இருந்ததோடு அத்தொகை மின் தொழில்நுட்ப பொறியியலாளர் களஞ்சியசாலைக்கு பாரமளிக்கப்பட்டிருந்தது. | இந்த சத்திர சிகிச்சைப் பொருட்கள் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளுவதற்காக முடியாதிருக்கும் இயந்திர உபகரண பராமரிப்பின் போது அவசியமான நேரத்தில் மாத்திரம் பதிலீட்டுப் பொருளாக பாவிக்கப்படுவதோடு அதனூடாக மருத்துவமனைக்கு ஏதாவது பணம் சேமிக்கும் நோக்கில் EME பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பொருட்களாகத் தெரியப்படுத்த விரும்புகின்றேன். |
| 4.6 **கொந்தரத்து நிர்வாகத்தின் குறைபாடுகள்**<br>புதிய கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் உள்ளக கட்டிட கொந்தரத்து 84 நாட்களுக்குள் முடித்து பாரமளிக்கும் நிபந்தனையின்படி 2013 ஜூன் 10ம் திதி ரூபா15,948,240.00 பெறுமதிக்குக் கட்டிடத் திணைக்களத்துக்கு பாரமளிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகக் கீழ்வருமாறு அவதானிக்கப்பட்டது.<br><br>அ) முதலாவதாக முன்வைக்கப்பட்ட பிரதேச விலை கோரல் குழு விலை (B.S.R) க்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுக்கும் இரண்டாவதாக முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டுக்கும் இடையே ரூபா.5,683,832.00 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் சந்தை விலைகளும் அதிகரித்திருந்தன.<br><br>(ஆ) குறித்த ஒப்பந்தம் சம்பந்தமாக கட்டிடத் திணைக்களம் மற்றும் வைத்தியசாலைக்கு இடையே முறையான ஒப்பந்தத்திற்கு வராமல் இருந்ததுடன் வேலையினை ஆரம்பிக்கும் முற்பணமாக 6 மில்லியன் பணம் செலத்தப்பட்டிருந்ததோடு அது முழு கொந்தரத்துப் பெறுமதியின் நூற்றுக்கு 37.63% ஆனது கொந்தராத்து பெறுமதியின் 20% உச்சத்துக்கும் கூடியிருந்து.<br><br>இ) அத்தாட்சிப்படுத்தப்பட்ட வேலைப்பத்திரம் மற்றும் அளவைப்பத்திரம் என்பன பெறாமல் இடைக்காலக் கொடுப்பனவாக ரூபா 5 மில்லியன் பணம் 2013 நவம்பர் 19ம் திகதி கட்டிடத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>ஈ) ரூபா.15,948,420.00 பெறுமதியான வேலை மதிப்பீடானது ரூபா.2,3000,000.00 பெறுமதியான Itam 4 முடிக்காமல் 2014 பெப்ரவரி 05ம் திகதியாகும் போது கட்டிடத்தின் கட்டுமாணப் பணிகள் முடிந்து இருப்பதாக கட்டிடத் திணைக்களத்தின் பிரதான பொறியியலாளரால் மருத்துவமனைத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. மேலும் வேலை Itam 2.1ன் கீழ் காபட்போட்டு நிலப்பகுதி முடிக்க வேண்டியிருந்தும் நிலத்துக்குக் காபட்போடாமல் இருப்பதோடு கட்டிட வேலை முடிந்து இருந்தது. | ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுமருத்துவமனையில் மருத்துவ வாட்டு மூன்று நிரந்தரமாக நோயாளிகளினால் நிரம்பி இருப்பதால் அந்த நோயாளிகளின் நெரிசலைக் குறைப்பதற்காக புதிய கட்டிடத்தில் வேலை முடியாமல் இருந்த 1ம் மாடி மருத்துவ வாட்டாக நிர்மாணிப்பதற்காக மருத்துவமனை முகாமைத்துவத்தினரால் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி குறித்த கட்டுமானப்பணிகள் மற்றும் அதற்கான ஆலே-ாசனைகள் அரச கட்டிடத்திணைக்களத்திடம் இருந்து பெறுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தது. 2012.08.24ம் திகதிய கடிதத்தின் மூலம் அதற்குரிய மதிப்பீட்டுத் தொகை ரூபா. 10,264,418.00 என குறிப்பிடப்பட்டதோடு மீண்டும் புதிய பல பிரிவுகள் நிர்மாணிப்பதற்காக ஒன்று சேர்ந்து 2012.09.05ம் திகதி புதிய மதிப்பீடு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. அந்த மதிப்பீட்டிற்கு முன் வைக்கப்பட்ட புதிய பிரிவுக-ளாவன.<br>I. புதியதாக மின்னியல் தொடர்பான சுற்றினை அமைத்தல்.<br>II. கழிவுப் பொருட்களை வெளியேற்ற குழாய் தொகுதியினை உருவாக்குதல்<br>III. தீ பாதுகாப்பு அமைப்பினை உருவாக்குதல்.<br>IV. அலுமினிய கூரை அமைத்தல் என்பன.<br>அந்தப் பிரிவுகள் உட்பட 2012.09.05ம் திகதி முன்வைக்ககப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூபா.15,948,240.00 ஆகும்.<br>சகல கட்டுமானமும் மற்றும் வரிப் பணமும் உட்பட இதற்கான 2012.10.26ம் திகதிய பணிப்பாளர் குழுக் கூட்டத்தில் 306-08-01 இன் கீழ் அனுமதிக்கப்பட்டது.<br>கட்டிட மதிப்பீட்டிற்குத் தேவையான கட்டிட பணிகளைச் செய்வதற்கு 2012.09.28ம் திகதிய கடிதத்தில் செய்யப்பட்ட கோரிக்கையின்படி ரூபா. 6 மில்லியன் முற்பணம் வழங்கப்பட்டது.<br>அதன்படி கட்டிடத்திணைக்களத்தினால் குறித்த கட்டுமாணப் பணிகளைச் செய்யும் அதே வேளை சுகாதார அமைச்சின் தீர்மானத்தின்படி அக்கட்டிடத்தினுள் சுகாதாரக் கல்வி பல்கலைக்கழக நிறுவனம் நிர்மாணிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் அதற்கேற்ப மேற்கொள்ளப்பட்டது.<br>அதன்படி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட சிற்சில கட்டுமான மாற்றங்கள் ஏற்ப்பட்டன. (உ.ம:- நிலம் காபட் போடுதல், சிமெந்து போடத் தீர்மானம் செய்தல்) இந்த சகல கட்டுமாணங்களும் மற்றும் அதற்குரிய மாற்றங்களும் கட்டிடத திணைக்களத்தின் முழுக் கண்காணிப்பின் கீழேயே நடைபெற்றது.<br>கட்டிடத் திணைக்களம் இதற்காகக் கோரியுள்ள (மதிப்பிடப்பட்ட தொகை ரூபா.15,948,240.00 பண்தில் இதுவரை அவர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 11 மில்லியனாகும்.<br>கட்டிடத்திணைக்களம் அரச நிறுவனமாவதோடு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையும் அரசோடிணைந்த நிறுவனம் ஆகையால் இந்த கட்டிடப் பணிக்காக இரு நிறுவனங்களுக்கிடையேயும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. |

| 4.7 தாமதமாகிய செயற்றிட்டங்கள் | |
|---|---|
| மருத்துவமனைக்காக மென்பொருள் System ஏற்படுத்த கொந்தராத்து 2010 ஜுலை 19ம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொடுத்ததுடன் மென்பொருள் 9 பகுதிகள் ஏற்படுத்தவும் யோசனை தெரிவிக்கப்பட்டது. குறித்த கொந்தராத்தின் பெறுமதி ரூபா.24,953,859.00 ஆவதோடு கொந்தரத்து 26 வாரத்தினுள் வேலை முடித்துக் கொடுக்க வேண்டியிருந்தது. கொந்தராத்து வேலை 2010 நவம்பர் 25ம் திகதி ஆரம்பித்திருந்ததோடு அதன்படி கொந்தராத்து வேலை 2010 மே 08 ஆம் திகதி முடிக்க இருந்தும் 2013 டிசம்பர் 31ம் திகதியன்று கொந்தரத்து நிதி செயற்றிறன் நூற்றுக்கு 37% இருந்ததோடு அதன் பௌதீக செயற்றிறன் நூற்றுக்கு 60 ஆக இருந்தது | மருத்துவமனையினுள் நிர்மானிக்கப்பட்ட மென்பொருள் System த்திற்காக போதிய வன்பொருள் Hardware இல்லை என்பதால் இந்த System மருத்துவமனையினுள் 100% செயற்பாட்டு மட்டத்தில் அமைக்க மேலதிக ஒரு வருடகாலம் தாமதமாகியது. இந்த மென்பொருள் System நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப கால கட்டத்தினுள் மருத்துவமனையின் முழு நிலப்பரப்பின் பத்தில் ஒரு வீதம் உள்ளடக்கும் வகையில் இந்த மென் பொருள் System இற்காகத் தேவையான அடிப்படை வசதிகள் வழங்கியிருந்ததுடன் System த்தினை சில பகுதிகள் மாத்திரம் எப்படியொனின் (நோயாளிகளைச் சேர்த்தல், காசாளர் பிரிவு, கிளினிக், திடீர் சிகிச்சை பிரிவு மற்றும் செனல் சேவை) நடைமுறைப்படுத்த முடிந்தது.<br>2010 நவம்பர் மாதத்தில் இந்த கொந்தராத்து குறித்த சபைக்கு வழங்கியும் மருத்துவமனை முகாமைத்துவம் மாற்றம் மற்றும் கொந்தராத்து சம்மந்தமாக அமைச்சில் நடைபெற்ற நுண்ணாய்வு விசாரணைகள் காரணமாக இதனை நடைமுறைப் படுத்துவது 2011 மே மாதத்திற்குப் பின்னர் ஆனது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவனை மற்றும் PC House PLC சமாசம் இடையே 6 மாத காலத்துக்கும் மேலாக இருந்த நம்பிக்கையற்ற சூழ்நிலை காரணமாகவும் பிரதான கொந்தரத்துகாரரின் பதில் கிடைக்காமை யினாலும் ஆகிய காரணங்களினால் இந்த மென்பொருள் System த்தினை விருத்தி (System (System developer) செய்யப்பட்ட HBT System PLC என்னும் நிறுவனத்தினால் தொடர்ந்து அபிவிருத்தி நடவடிக்கையில் தடைகள் ஏற்பட்டன.<br>மேலும் இப்படியான பாரிய நிறுவனத்திற்கு நிர்மாணித்த மென்பொருள் System விசேடமான ஒன்றாகையால் அதனை மருத்துவமனைக்கு ஏற்ற விதத்தில் அமைத்துக் கொள்வதற்காக (Custer misation)க்காக பாரிய சிரமங்களை எதிர்நோக்க ஏற்பட்டதோடு இது சம்பந்தமாக புதுக்கொள்கை அனுபவங்கள், செயற்பாடுகளின் முறை களைத் தயாரிக்கும் போது ஏற்படும் தவறுகள் மற்றும் இதற்காக மருத்துவமனை ஊழியர்களை ஈடுபடுத்தும் போது அவர்கள் இதற்காக காட்டும் அசமந்தப்போக்கு எனப்வற்றின் காரணமாக செயற்றிட்டம் குறித்த நேரத்திற்கு நடைமுறைப்படுத்த முடியாது விட்டது.<br>ஆனால் தற்போது மருத்துவமனைத் தொழில் நுட்பப் பிரிவினால் இந்த மென்பொருள் System மருத்துவமனைக்கு அவசியமான வகையில் தொடர்ந்து மீளாய்வு செய்து அதிகமாக முன்னேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

| | |
|---|---|
| **4.8 பணிக்குழு நிர்வாகம்**<br><br>2013 டிசம்பர் 31ம் திகதியன்று 14 பதவி வகைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 1561 ஆவதோடு நிரந்தர ஊழியர் எண்ணிக்கை 1215 எனினும் ஊழியர்கள் எண்ணிக்கை 346 பேர் குறைந்த தகைமையுடன் காணப்பட்டனர். மேலும் இதற்கு மேலதிகமா அமைய தொழிலாளர்களாக 54 பேர் சேர்க்கப்பட்டனர். | ஒடர்லி பணிக்குழுவில் பற்றாக்குறையினை அமைய தொழிலாளர்களால் நிறைவேற்ற முடிந்ததோடு பிரதிப் பணிப்பாளர் உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்க நடைபெற்ற நேர்முகப்பரீட்சைக்கு பயிற்றப்பட்ட நபர்களை தெரிவு செய்ய முடியாவிடினும் இதுவரை பதில் கடமைபுரிய ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார் என்பதை குறிப்பிடுகின்றேன்.<br>தாதிப் பணிக்குழுவுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகை-மையுடைய நபர்களின் பற்றாக்குறை நிலவினாலும் மேற்படி நிலைமையின் மத்தியிலும் கூட வைத்தியசாலையின் நடவடிக்கைகள் தடையின்றி நடைபெற முடிந்ததோடு எதிர்காலத்தில் பணிக் குழுவில் நிலவும் பற்றாக்குறைகளை நீக்க நடவடிக்கை |
| 4.9 வாகனப் பயன்பாடு<br>வாகன விபத்துக்கள்<br>வாகன விபத்துக்கள் பற்றி பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | |
| (i) மருத்துவமனையினால் வாகன விபத்துக்கள் சம்பந்தமாகப் பதிவேடு நடைமுறைப்படுத்தினாலும அது நி.பி.110ல் குறிப்பிடப்பட்ட விபரங்கள உள்ளடங்கியதாகத் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை . | வாகன விபத்துக்கள் சம்பந்தமாக பொதுச் சுற்றறிக்கை ஒன்று தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால் கணக்காய்வு விசாரணையில் காட்டி உள்ளபடி விபத்துப் பதிவேடு சரியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. . |
| (ii) மீளாய்வு வருடத்தில் விபத்து ஏற்பட்ட வாகனங்கள் 7னதும் குறிப்பு புத்தகம் அறிக்கை ஏடு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை | சகல வாகனங்களினதும் குறிப்புப் புத்தகம் அனேகமாக இற்றைப்படுத்தப் பட்டுள்ளதோடு வாகனம் சம்பந்தமான தகவல்களிலுள்ள குறைகள் தற்போது பூரணப்படுத்தப்படுவதாக தெரிவிக்கின்றேன். |
| iii) நி.பி 104(1) (ஆ) (3) மற்றும் (4)இன் படி விபத்து ஏற்பட்டவுடன் அதன் அளவு காரணங்கள் என்பன உண்மையாக அறிவதற்கும் அதற்குப் பொறுப்புக் கூறுவேண்டியவரை நிச்சயப்படுத்துவதற்காக விசாரணையை ஆரம்பிக்க வேண்டி யிருந்தும் அவ்வாறு செயற்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 104(1)இன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. |
| 5. கணக்கு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி | |
| 5.1 கூட்டிணைந்த திட்டங்கள்<br><br>2003 ஜுன் 2ம் திகதியில் GED 12 சுற்றறிக்கையின்படி நல்லாட்சி சம்பந்தமாக வழிகாட்டும் கோவையின் 5:1:3 உறுப்புரையின்படி பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட இற்றைப்படுத்தப்பட்ட இணைந்த திட்டத்தின் பிரதி குறித்த நிதி ஆண்டில் ஆரம்பிக்க 15 நாட்களுக்கு முதல் குறித்த அமைச்சின் திறைசேரியின் பொது முயற்சிகள் குழு மற்றும் கணக்காய்வாளரிடம் முன்வைக்க வேண்டிருந்தும் அவ்வாறு முன்வைக்கப்படவில்லை. . | இலங்கை மன்றக்கல்லூரி மற்றும் ஏனைய நிபுணர்களுடன் இணைந்து இணைந்த திட்டத்தினைத் தயாரித்துள்ளதோடு அதனைக் குறித்த நிறுவனத்திற்கு கூடிய விரைவில் முன்வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 5.2 செயற்றிட்ட திட்டம்<br><br>அ) 2013 வருடத்தின் செயற்றிட்டத் திட்டத்தில் வருடத்தினுள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்கும் நோக்கம் வரை இருந்தும் நிதித் திட்டத்தில் அதற்காக பணம் ஒதுக்கப்படவில்லை. | மருத்துவமனைக்குக் கிடைக்கும் மூலதன அன்பளிப்பு இதற்காக பாவிப்பதால் வேறு நிதித்திட்டம் இதற்காகத் தயாரிக்கப் படவில்லை |

| | |
|---|---|
| ஆ) செயற்றிட்டத் திட்டத்தின் 2013 வருடத்தில் முடிக்க எதிர்பார்த்திருந்த வாகனத் தரிப்பிடம் அதிகரித்தல் புதிய ஜெனரேட்டர் இயந்திரம் 2 கொள்வனவு செய்தல் ECG அறை கட்டுதல், மருத்துவ வாட்டுக்காக HDU பிரிவு உருவாக்குதல், ஆகிய நடவடிக்கைகள் 2013 டிசம்பர் 31ல் முடித்து இருக்காமை | 2013ம் வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டத்தின்படி செயற்றிட்டங்கள் பல நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் நான் சகல திட்டங்கையும் நடைமுறைப்படுத்துவதற்கு 2013ம் வருடத்தினுள் திறைசேரியில் வழங்கும் ஒதுக்கீட்டிலேயே தங்கியிருந்தது.<br>அதன்படி வாகன தரிப்பிடத்தினை முன்றேற திட்டமிட்டதோடு அது நடைமுறைப் படுத்தப்படுகின்றது. அதில் எழுந்த சிற்சில தொழில்நுட்ப குறைபாடுகளினால் அது மிகவும் மெதுவாகவே நடைபெற்றதோடு 2013ம் வருடம் முடிய முதல் அதனை நடைமுறைப்படுத்த முடியாதுவிட்டது. புதிய ஜெனரேட்டர் இயந்திரம் இரண்டினைக் கொள்வனவு செய்யத் திட்டமிட்டதன்படி ஆலோசனை நிறுவனத்தின் ஆலோசனைப்படி விலை மனுக்கோரி மதிப்பீட்டு நடவடிக்கையினை முடித்து அனுமதிக்காக அமைச்சின் விலைமனு கோரல் சபைக்கு அனுப்பபட்டது. ஆனால் அமைச்சின் விலைமனுக்கோரும் சபையினூடாக வேறு தொழிலநுட்ப மதிப்பீட்டு சபையினை நியமித்து மதிப்பீட்டு அறிக்கையினை பெற நடவடிக்கை மேற்கொண்டதோடு இதுவரை அத்தீர்மானம் அறிவிக்கப்படவில்லை.<br>ECG அறையினைக்கட்டும் போது ஆரம்பகால கட்டத்தில் அதற்காக திட்டமிட்ட இடம் சம்பந்தமாக பிரச்சினையான நிலைமை இருந்ததால் அது தாமதமாகியது. ஆனால் தற்போது மருத்துவமனையில் பழைய இரத்தம் பாய்ச்சும் பிரிவு (Dialysis Unit) அமைந்துள்ள இடத்திலேயே ECG அறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. குளிரூட்டியினை நவீன மயப்படுத்த திட்டமிட்டும் அதற்காக நிதி ஒதுக்கீடு கிடைக்காமையினால் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியவில்லை.<br>HDU பிரிவில் உருவாக்கும் சகல வாட்டுகளுக்குமாக திட்டமிடப்படவில்லை என இங்கு குறிபிட வேண்டும். அது மருத்துவ வாட்டுக்காக மாத்திரமே திட்டமிட்டதாகும் ஆனால் தாதி பணிக்குழுவில் நிலவும் பற்றாக் குறையினால் இது தற்போது நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை நிலவுவதாகக் குறிப்பிடலாம். |
| 5.3 உள்ளக கணக்காய்வு<br>சகல வருடங்களிலும் முதல் ஆறு மாதத்துக்குரிய அரையாண்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கை அந்த வருடத்தின் ஜுலை 31ம் திகதியாகும் போதும் இறுதி ஆறு மாத்திற்கான அரையாண்டு அறிக்கை அடுத்த குறித்த வருடத்தின் ஜனவரி 31ம் திகதியாகும் போதும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் 2013ம் வருடத்திற்குரிய அரையாண்டு வருடாந்த உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய் வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மருத்துவமனையில் உள்ளக கணக்காய் வாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதால் அதன் கடமைகளை சரியாக முகாமைத்துவப்படுத்த முடியவில்லை. அதன்படி குறித்த அறிக்கையினை குறித்த காலத்தினுள் சமர்பிக்க முடியவில்லை. இந்தப் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரைச் சேர்த்துள்ளதால் எதிகாலத்தில் உள்ளக கணக்காய்வு அறிக்கை குறிப்பிட்டபடி வழங்க முடியும். |
| 5.4 கணக்காய்வுக் குழு<br>மருத்துவமனையில் ஒவ்வொரு பிரிவு மட்டத்திலான செலவு மற்றும் இலாபத்தினை கணக்கிடுவதற்காக மாதிரி தயாரித்து முன்வைக்குமாறு நிதி கட்டுப்பாட்டாளருக்கு கணக்காய்வு குழு சிபார்சு செய்திருந்தும் அந்த சிபார்சு நடைமுறைப்படுத்தப்படவில்லை. | இந்த நடைமுறை பாரிய நடைமுறை என்பதால் அது சம்பந்தமாக தொடர்ந்து பேச்சுவார்த்தை நடாத்தி தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 5.5 விலைமனுக் கோரல் திட்டம்<br>2003ம் வருடத்தில விலைமனுக் கோரப்பட்ட Static X Ray இயந்திரம் அடிக்கடி செயல்படாமையால் 2013 ஏப்பரல் மாதத்தில் Static X Ray Floor mounted இயந்திரம் ரூபா. 5,975,000.00 செலவு செய்து கொள்வனவு செய்திருந்தும் அது சம்பந்தமாக 2012 அல்லது 2013 வருடத்திலே கொள்வனவு செய்யும் திட்டம் திட்டமிட்டு இருக்கவில்லை. அவ்வாறு வழங்குனரால் பொருள் விலைமனு கிடைத்து 6-8 வார கால அவகாசத்துள் இயந்திரம் வழங்க இணங்கியிருந்தும் அதற்காக 23 வாரங்கள் சென்றிருந்ததோடு 15 வாரங்கள் தாமதம் ஏற்பட்டன | 2012 வருடத்திற்காக X-Ray பிரிவில் high frequency static X – Ray Machine celing mount இயந்திரம் 8 மில்லிய னுக்கும் Mobile X – Ray இயந்திரம் 2.8 மில்லியன் ரூபாவிற்கும் மதிப்பிட்டு 2012ம் வருடத்தில் ஜுலை ஒகஸ்ட் மாதத்தில் விலை கோரி இருந்தது. எவ்வாறாயினும் மருத்துவ பரிசோதனைக்காக வருகை தரும் நோயாளிகளுக்கு தாதமின்றி X-Ray பரிசோதனை செய்யும் அவசியத்தின் பேரில் மருத்துவமனை முகாமைத் துவத்தினால் மேலும் Floor Mounted இயந்திரம் கொள்வனவு செய்ய நேர்ந்தது. Floor Mounted இயந்திரத்திற்காக அடிப்படைத் திட்டத்தில் இல்லாதிருந்தும் பாவிக்கப்பட்டுக் கொண்டிருந்த இயந்திரம் வருட நடுப்பகுதியில் செயலிழந்ததால் புது இயந்திரம் கொள்வனவு செய்ய ஏற்பட்டது.<br>இங்கு பொருட்கள் வழங்குவது கொஞ்சம் காலம் சென்றிருந்ததோடு அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கை நிபந்தனைகளுள் உள்ளடக்கப்படவில்லை. நடைமுறை பிரச்சினையின்படி பொருள் பெறுதலில் ஏற்படும் அசௌ-கரியங்களைக் கவனத்திற் கொண்டு நிபந்தனைகளில் சிலதைத் தளர்த்தி குறித்த உபகரணத்தினை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |
| வரவு செலவு பதிவேடு நிர்வாகம்<br>கீழ்காணும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப் பட்டன.<br>அ) 2012ம் வருடத்தில் கொள்வனவு செய்யும் திட்டத்தின்படி HD வீடியோ லெபரஸ்கொப்பித் தொகுதியை கொள்வனவு செய்ய ரூபா.3,000,000/00 தொகை மதிப்பிட்டிருந்தும் மருத்துவமனையினால் இந்த இயந்திரத்தினை கொள்வனவு செய்ய 2013ம் வருடத்தில் ரூபா.10,735,800.00 தொகை செலவாகி இருந்து இதன்படி திட்டமிட்ட செலவுக்கு மேலதிகமாக ரூபா.7,735,800.00 செலவிடப்பட்டு இருந்ததோடு அது மதிப்பிட்டு பெறுமதியினை சொத்துக்கும் 257 இற்கும் மேலாக என அவதானிக்கப்பட்டது. | 2012 வருடத்தின் வைத்திய உபகரணத் தேவை 2011 வருடக் கடைசியில் பட்டியலிடப்பட்டதோடு 2012 வருடத்திற்காகவுள்ள நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்படபின் 2012 ஜனவரி மாதத்திலிருந்து கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இந்த உபகரணமும் 2012 பட்டியலுக்கு உள்ளீர்கப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதியாக 3 மில்லியன் காட்டப்பட்டுள்ளது. இது உபகரணத் தொகுதியாவதுடன் அதற்கு சிற்சில உதிரிகள் சேர்க்கக் கூடிய-தாக இருப்பதுடன் அதன்படி பெறுமதி மாறலாம்.இந்த உபகரணம் கொள்வனவு செய்யும் போது செலவினத்தை தயாரிக்கும் போதும் மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் சிபார்சினை பெறும் போதும் குறித்த நிபுணத்தவ மருத்துவரால் மேலதிக உதிரிகள் பல இந்த உபகரணத் தொகுதிக்கு உள்வாங்கப்பட்டன. அதன்படி மதிப்பீட்டுப் பெறுமதி மென்மேலும் பெறுமதி இந்த உபகரணத் தொகுதிக்கு செலவாகியுள்ளது. இதற்காக நிதி அமைச்சின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அந்த அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு உபகரணத்துக்குமாக அல்ல. சகல மருத்துவ உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளது குறித்த ஒதுக்கீட்டின் பேரிலாகும். அதனால் இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது, அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள்ளானதோடு அந்தப் பட்டியலின் சகல உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| ஆ) I) கட்டண விடுப்பு மருத்துவ சிகிச்சைச் செலவாக ரூபா.11,014,495.00 தொகை செலவிட்டிருந்தும் அதற்காக வருடாந்த வரவு செலவில் மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை.<br>II) மின் உற்பத்தி இயந்திரத்திற்காக எரிபெ-ாருளுக்காக ரூபா.1,288,406.00 தொகை செலவிட்டிருந்தும் அதற்காக வருடாந்த வரவு செலவில் ஒதுக்கீடு காட்டப்படவில்லை. | எதிர்காலத்தில் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| இ) வரவு செலவுத்திட்டம் மற்றும் நிரந்தர வரவு செலவுக்கிடையே வருமானம் விடயம் 4இற்கு மற்றும் 9ம் விடயத்துக்கு உரிய நூற்றுக்கு 91இல் இருந்து நூற்றுக்கு 412 வரை வித்தியாச வேறுபாடு ஏற்பட்டு வரவு செலவுப்பதிவேடு சிறந்த நிர்வாகமாகப் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது. | மருத்துவமனை போன்ற நிறுவனங்களில் செலவு கட்டுப்படுத்த முடியாமல் திடீர் தேவைகளுக்காக கொள்வனவு செய்ய ஏற்படுகின்றது. ஆனால் முடிந்தவரை வரவு செலவு தயாரிக்கும் போது சிறந்த யதார்த்தமாகவே அதனைத் தயாரிக்கவும் அதனைப் பிரயோசமான முகாமைத்துவ உபகரணமாக பயன்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| 5.7 பாராளுமன்ற பொது முயற்சிகள் சம்பந்தமாக குழுவினால் வழங்கப்பட்ட கட்டளை<br><br>2012 செப்ரம்பர் 21ம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் சம்பந்தமான குழுக் கூட்டத்தில் வைத்தியசாலைக்குரிய குறித்த நவீன திட்டத்தின் திட்டமிட்டு அதனை வேறு முயற்சிகள் சம்பந்தமான சபைக்கு முன்வைக்குமாறு சிபார்சு செய்தாலும் 2013 டிசெம்பர் 31ம் திகதியிலும் கூட அது முன்வைக்கப்படவில்லை. | தற்போது இது தயாரிக்கப்பட்டுக் கொண்டிப்பதோடு எதிர்காலத்தில் இது முன் வைக்கப்படும். |
| **<u>6.</u> முறைமைகளும் நிர்வாகமும்**<br><br>கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகளும் நிர்வாகமும் குறைபாடுகள் அடிக்கடி தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. கீழ்க் காணும் விடயம் நிர்வாகத்துறைகளின் முகாமைத்துவத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>அ) சொத்துக்கள் மற்றும் மொத்த நிர்வாகமும்<br>ஆ) மருத்துவமனை வருமானம் ஒன்று கூட்டுதல்<br>இ) மருந்து விலை நிர்ணயம். | கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்ட சில தொகுதிகளுக்காக கணினி உதவிச் சேவை தற்போது பயன்படுத்தப்படுகின்றதென்றும், மேலும் குறிப்பிடப்பட்ட முறைமைக்கும் நிர்வாகம் தொடர்பாக தொடர்சியாக மீளாய்வு மேற்கொண்டு அதனை மருத்துவமனையின் அவசியத்தின்படி முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

# 6. எதிர்கால தொலைநோக்கு



# 6.1 நிறுவனத்தின் செயற்றிறன் மேம்பாடடைவதற்கு எதிர்பார்க்கும் இடைக்கால நடைமுறைகள .

| நோக்கங்கள் | செயற்பாடுகள |
|---|---|
| 1.மருத்துவமனையில் மின்சாரப் பட்டியல் குறைத்தல் | 1. மின்பட்டியலை தற்போது அறவிடப்படும் கட்டண வகுப்பு அரச நிறுவனமாக மாற்றுதல<br>2. காலம் கடந்த மருத்துவ உபகரணங்கள் மற்றும் இயந்திர நவீன தொழில் நுட்பங்களில் மற்றும் உயர்வலு வினைத் திறமையுடனான உபகரணங்கள் மூலம் புனர் நிர்மாணம் செய்தல்<br>3. .மருத்துவமனை எரிசக்தி பாவனை மற்றும் விரயத்தை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளல் |
| 2. மருத்துவமனையின் நீர்ப்பட்டியலைக் குறைத்தல் | 1. நீர்ப்பட்டியல் கழிவு நீருக்கான அறவீடுகையை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்<br>2. மருத்துவமனை எரிசக்தி பாவனை மற்றும் விரயத்தை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளல் |
| 3. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவனை கட்டணம் அறவிடும் மாதிரி மருத்துவமனையாக விருத்தி செய்தல் . | 1. மருத்துவமனை அறவீடுகளை நியமப்படுத்துவதற்காக குழு ஒன்றினை நியமித்தல்<br>2. மருத்தவமனையில் வழங்கும் சேவைகளின் விலை நிர்ணயத்திற்காக விலை கொள்ளை மற்றும் நடைமுறைப்படுத்தல் அறிமுகப்படுத்தல்<br>3. மருத்துவமனையில் வழங்கும் சேவைகளுக்காக பெக்கேஜ் முறையினை அறிமுகப்படுத்தல்<br>4. தற்போது பாவனையிலுள்ள item களின் வகைகளை |
| 4. மருத்துவ தொழில்நுட்ப இயந்திர உபகரணத்துக்காக மூலதனச் செலவினை குறைத்தல் | தேர்ந்தெடுக்கப்பட்ட item களுக்காக உபயோகிக்கும் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது நீண்ட மத்திய கால வியாபார ஒப்பந்ததின்படி உயர் மூலதன செலவினை மேற்கொள்ள தேவயான இயந்திர உபகரணம் பெறுதல். |
| 5. மருத்துவமனை வேலைகள் செற்றிறன் மற்றும் தரத்தினாலான சேவையினை வழங்கவும் தனியார் வைத்தியசாலையுடன் உள்ள போட்டிக்காக சரியாக முகம் கொடுக்கவும் தேவையான சட்டரீதியான பின்னணியினை தயாரித்தல் | ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனைச் சட்டத்தின் பலவீனங்களை அறிந்து தேவையான மாற்றங்களுக்காக மருத்துவமனைச் சபையினால் நியமிக்கப்பட்ட குழுவினால் தேவையான சிபார்சு தயாரித்தல் |
| 6. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை மூலம் வினைத்திறமை மற்றும் போட்டி மனப்பான்மை சேவை வழங்கு வதற்காக தேவையான தாபன கட்டமைப்பைத் தயாரித்தல் | 1. மருத்துவமனை மனிதவளம் சரியான வகையில் ஈடுபடுத்தப்பட மனிதவளப் பிரிவினை அமைத்தல்.<br>2. மருத்துவமனை விற்பனை மற்றும் தெளிவூட்டல் விருத்தி நடைமுறை சரியாகச் செய்ய சந்தைப்படுத்தல் பிரிவு நிறுவுதல்<br>3. மருத்துவமனையில் சுகாதாத் தகவல் தொகுதியினை சரி செய்து நடைமுறைப்படுத்திக் கொண்டு போவதுடன் முன்னேற்ற சுகாதாரத் தகவல் முகாமைத்துவப் பிரிவு அமைத்தல் |

| நோக்கங்கள் | செயற்பாடுகள |
|---|---|
| 7. மருத்துவமனை நோயாளர்கள் அதிதிகள் மற்றும் காரியாலய பணிக்குழுவுக்கான அடிப்படை வசதிகளை முன்னேற்றுதல் | 1. மருத்துவமனையில் பணம் செலுத்தும் வாட்டு வசதிகளை முன்னேற்றுவதற்காக புதிய கட்டணம் செலுத்தும் வாட்டுத் தொகுதியினை நிர்மாணித்தல்<br>2. மருத்துவமனையில் சேவை புரியும் தாதி உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வதிகள் வழங்குவதற்காக புதிய தாதி தங்குமிட விடுதி நிர்மாணித்தல்<br>3. நிர்வாக மற்றும் நிதிப் பிரிவுக்காக புதிய கட்டிடம் நிர்மாணம் செய்தல்<br>4. மருத்துவமனை பராமரிப்பு வேலைத் தளத்திற்காக புதிய கட்டிடம் நிர்மாணம் செய்தல்<br>5. புதிய குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு விருத்திக்காக நவீன தொழில் நுட்ப உபகரணங்கள் வழங்குதல்.,<br>6. மருத்துவர்களுக்காக போசணசாலை நிர்மாணித்தல்.<br>7. வெளி நோயாளர்களின் வசதிக்காக சேவைகளைப் பெறக்கூடிய வகையில் வெளி நோயாளர் பிரிவு இரசாயன கூடம் விருத்தி செய்தல். |
| 8. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் மருத்துவ மற்றும் ஏனைய ஆராய்ச்சிகள் நடாத்த ஊக்குவித்தல் | 1. ஆராச்சி மேற்கொள்ளும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்காக அரசு அனுமதித்த ஆராய்ச்சிகளை வழங்குதல்.<br>2. மருத்துவமனை நூலகத்தில் கணினி வலையமைப்பு வசதிகளை முன் னேற்றுதல். |
| 9. மருத்துவமனையில் வழங்கும் சேவைகளுக்குரிய தரத்தினை மேம்படுத்தல். | 1. மருத்துவமனைக்கு வருகை தரும் நோயாளிகளின் வசதிக்காக மருத்துவமனை பற்றிய விபரங்கள் மற்றும் வழிகாட்டல்களுடனான பலகையைப் பொருத்துதல்.<br>2. விசாரணைக் கரும பீடம் மற்றும் தொலைபேசி பரிவர்த்தனை மூலம் மருத்துவமனையில் பெறக்கூடிய சேவைகள் கிளினிக் மற்றும் மருத்துவமனைக் கட்டணம் சம்பந்தமான விபரங்கள் பொதுமக்களுக்கு வழங்க திட்டமிடல்<br>3. நோயாளிகளுடன் சிறந்த தொடர்பாடலை நடாத்துவது பற்றி மருத்துவமனைப் பணிக்குழுவுக்கு அறிவூட்டுவதற்கு செயலமர்வு மற்றும் விரிவுரை நிகழ்த்துதல்<br>4. மருத்துவமனை பணிக்குழு உறுப்பினரிடையே குழு உணர்வினை விருத்தி செய்வதற்காக செயலமர்வும், விரிவுரையும் நிகழ்த்துதல்<br>5. மருத்துவமனையினூடமாக நோயாளர்களுக்கு அவசியமான சகல மருந்துகளும் மற்றும் ஏனைய பொருட்களை வழங்க தேவையான செயற்பாடுகளை ஸ்தாபித்தல்<br>6. வதிவிட நோயாளர்களுக்காக சுகாதார வசதிகளை முன்னேற்றுதல்<br>7. கட்டணம் செலுத்தம் அறைகளில் நோயாளர்களுக்காக நோயாளிகளின் தற்றுணிபின் படி உணவுகளைத் தெரிவு செய்வதற்கு வசதிகள் ஏற்படுத்தல் மற்றும் அவ்வுணவு சூடான நிலைமையில் நோயாளிகளுக்கு வழங்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>8. கட்டணம் செலுத்தம் அறைகளுக்காக பரிசோதனைப் பட்டியல் பாவிப்பதன் மூலம் நோயாளிகளுக்கு மிகச் சிறந்த வசதிகள் வழங்க உறுதிப்படுத்தல்<br>9. மருத்துவமனையில் தற்போது பாவிக்கப்படும் அச்சிட்ட மாதிப்படிவம் சரியான முறையில் தயாரிப்பதன் மூலம் பணிகுழுவுக்கு சிறந்த தரத்தினாலான சேவையை வழங்க இடம் கிடைக்கும்.<br>10. மருத்தவமனையில் நோயாளிகளுக்கும் மற்றும் அதிதிகளுக்கும் தங்கி இருக்கும் இடத்தினை உள்ளடக்கியவாறு ஊடகத் தொகுதியொன்றினை நிர்மாணிப்பது மற்றும் அதன்மூலம் மருத்துவ மனையினால் வழங்கும் சேவைகள் பற்றியும் நோய்கள் பற்றியும் செய்திகளை ஒளிபரப்புதல்<br>11. மருத்துவமனை வாகனத் தரிப்பிடம் விசாலமாக்குதல் மருத்துவமனையில் இரசாயன கூடம் மற்றும் மருந்தகம் விசாலமாக்குதல் |

| நோக்கங்கள் | செயற்பாடுகள |
|---|---|
| 10. சுற்றாடல் இரம்மியமான பச்சை மருத்துவமனையாக மருத்துவ மனையினை முன்னேற்றுதல். | 1. மருத்துவமனை வீட்டுத் தோட்டத்தினை விருத்தி செய்தல்<br>2. மருத்துவமனைக் குப்பை முகாமைத்தும் மற்றும் அப்புறப்படுத்தலை சரியாகச் செய்தல்.<br>3. மருத்துவமனையினுள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கொண்டு வருவதை குறைத்தலுக்காக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளல். |
| 11. மருத்துவமனையில் காலம் கடந்த மருத்துவ மற்றும் ஏனைய உபகரங்களை புனருத்தாரணம் செய்தல் | மருத்துவமனையில் காலம் கடந்த உபகரணங்களை புனருத்தாரணம் செய்யும் திட்டத்தினை மேற்கொள்ளல் |
| 12. மருத்துவமனையில் இருதய நோய் பிரிவுக்கான வசதிகளை முன்னேற்றுதல் | நவீன இருதய நோய் பரிசோதனைக் கூடம் நிர்மாணித்தல் |
| 13. மருத்துவமனைக்குரிய மனித வளத்தினை சரியாக முகாமைப் படுத்துவதன் மூலம் சிறந்த வினைத்திறமையுடனான சேவையைப் பெறலாம். | 1. மனித வளங்கள் கணக்காய்வு செய்தல்<br>2. தொழில் பகுப்பாய்வு செய்து விடய விபரங்களைத் தயாரித்தல்<br>3. செய்கை முறை கையோடு தயாரித்தல்<br>4. மருத்துவமனை உள்ளக மற்றும் விதி முறைகளைத் தயாரித்தல் |
| 14. பலமிக்க உள்ளக நிர்வாகத் தொகுதியினை உருவாக்கதல் | 1. மருத்துவமனை உள்ளக கணக்காய்வு பிரிவினை பலப்படுத்தல்<br>2. மருத்துவமனைக்காக கணக்காய்வு திட்டத்தினைத் தயாரித்து செயல்படுத்தல்<br>3. கணக்காய்வு திட்டத்தினைத் தயாரிப்பதும் நடைமுறைப்படுத்துவதும் |
| 15. பொதுமக்களுக்கு மருத்துவமனைக்கு வருகை தரக்கூடிய வசதிகளை முன்னேற்றுதல் | 1. மருத்துவமனைக்குப் பிரவேசிக்கும் பாதையினை விருத்தி செய்தல்<br>2. மருத்துவமனைக்கு வருகை தரும் பஸ் வண்டி |
| 16. நோயாளிகளுக்கும் பணிக்குழுவுக்கும் நலன்புரி வசதிகளை அதிகரித்தல் | நோயாளிகளுக்கும் மற்றும் பணிக்குழுவுக்கும் நலன்புரித் திட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்தல் |
| 17. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் நற்பெயரினை மேம்படுத்தி முன்னேற்றுதல் | 1. மருத்துவமனைக்காக சந்தை மேம்படுத்தல் திட்டத்தினை தயாரித்து நடைமுறைப்படுத்தல்<br>2. காப்புறுதி பாதுகாப்புடன் கூடிய நோயாளிகளுக்காக சிகிச்சை வழங்க சங்கங்களோடு ஒப்பந்தம் செய்தல்<br>3. “செனல்” சேவை விருத்தி செய்தல்<br>4. வெளி நோயாளிகளுக்கு இலகுவில் சேவைகளைப் பெறக்கூடிய வகையில் இரசாயனகூட சேவையினை விருத்தி செய்தல் |

| நோக்கங்கள் | செயற்பாடுகள |
|---|---|
| | 5. பொதுமக்களின் முறைப்பாடுகளை பெறுவதற்கான முறை ஒன்றினை நடைமுறைப்படுத்தல்<br>6. நோயாளிகளின் திருப்தி பற்றிய ஆய்வினை நடாத்தி அதில் கிடைக்கும் பெறுபேறின்படி நடவடிக்கை மேற்கொள்ளல்<br>7. மருத்துவமனையின் சரித்திரம் சம்பந்தமான நூதனசாலையும் மற்றும் மாதிரி தீவிர சிகிச்சைப்<br>8. மருத்துவமனைக்காக மருத்துவமனைக்கு உட்பிரவேசிக்கும் வழியில் வழிகாட்டும் பலகை நிறுவுதல்<br>9. பாடசாலைச் சிறார்களுக்காக மருத்துவமனை அவதானிக்கும் சுற்றுலா ஏற்பாடு செய்தல். |
| 18. மருத்துவமனைக்குரிய சமூக பொறுப்புக்களை இனம் கண்டு அதற்காகச் செயற்படல் | 1. நோய்கள் பற்றிய பத்திரிகை தயாரித்து பங்கீடு செய்தல்<br>2. மருத்துவமனையில் கேட்டல், பார்த்தல், ஊடகங்களின் மூலம் ஒளிபரப்பப்படும் சுகாதாரச் செய்திகள்<br>3. சுகாதார மற்றும் சம்பந்தமான விஷேட தினங்களை நினைவூட்டுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல். |
| 19. உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்துவதன் மூலம் பணிக்குழுவின் அறிவினை இற்றைப்படுத்தல் | 1. மிகவும் சிறந்த தொழில்நுட்ப உபகரணங்கள் சம்பந்தமாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்<br>2. வினைத்திறமையான சேவைகளுக்காக தகவல் தொழில் நுட்பம் சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தல் |
| 20 பணிக்குழுவின் ஒழுக்கம் மற்றும் போதனைகள் உயர்வடையச் செய்தல் | தொழில் ரீதியான சட்டம் மற்றும் நிபந்தனைகள் பற்றிய சிறு நூல்களைத் தயாரித்தல் |
| *21.* மருத்துவமனையில் பூரண சுகாதார தகவல் முகாமைத்துவத் தொகுதியினை நிறுவுதல் | 1. மருத்துவமனையில் மருத்துவ அறிக்கை தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தும் முறைகளை முன்னேற்றுதல், திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>2. வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் |
| *22.* தனிப்பட்ட சுகாதார நிறுவனங்களில் பணிக்குழு உட்பட வெளி நபர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தல். | 1. உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் அதிக கேள்வி நிலவும் துறைகளை இணங்கண்டு அதற்கான நிவர்த்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>2. வேறு நிறுவனங்களுடன் ஒத்துழைத்து நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல். |